577

சாம்பா
தமிழ் வாசகம்

5-ம் புத்தகம்

சாம்பா பப்ளிஷிங் கம்பெனி

சென்னை-10.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1956
MADRAS

577
4-56

TB
O-,6(5)
N56
145942

சாம்பா தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

ஆசிரியர் :
K. வேங்கடாசலம், B.A., L.T.,
தலைமையாசிரியர்,
இராமகிருஷ்ண வித்தியாலய உயர்நிலைப்பள்ளி,
பெரியநாய்க்கன்பாளையம்.

பதிப்பாசிரியர் :
T. S. உமாபதி, M.A., L.T.,
தலைமையாசிரியர்,
C. A. H. இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1956
MADRAS

[Paper used : 28 lbs. White Printing]

சாம்பா பப்ளிஷிங் கம்பெனி
சென்னை—10

பதிப்புரிமை] 1956 [விலை அணு 12

முதற் பதிப்பு—அக்டோபர், 1956

145942

TB
O-,6(5)
N56

Kabeer Printing Works, Madras (3407)

முகவுரை

'**சாம்பா தமிழ் வாசகம்**' என்னும் பெயருடன் வெளிவரும் தமிழ் வாசக வரிசையில் இது **ஐந்தாம் புத்தகமாகும்**. இது ஆரம்பப் பாடசாலைகட்கு 1941-ல் அரசியலார் வெளியிட்ட பாடத்திட்டத்தை முற்றிலும் பின்பற்றி இயற்றப் பெற்றுள்ளது.

பாடத்திட்டத்தில் வகுத்துள்ளபடி எளிய புதிய சொற்கள் 800 இதன்கண் இடம் பெற்றுள்ளன. சிறந்த உரைநடை யமைப்பும், இனிய எளிய செய்யுட்களும் தமிழ்ப் பாட நூல்களில் இடம் பெறவேண்டுமென்று இப்புதிய பாடத்திட்டம் வலியுறுத்துவதால், தமிழ்நாடு, தமிழ் இலக்கியம், தமிழ்ப்புலவர்கள் சம்பந்தமான பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அன்றியும் சிறுவர் சிறுமியர் அறிவை விரிவுறச் செய்யக்கூடிய பிறவகைப் பாடங்களும், இடம்பெற்றுள்ளன. அரசியலாரின் ஆணைக்கிணங்க **கடிதத்தின் பிரயாணம்**, **வனவிலங்குகளின் பாதுகாப்பு** ஆகியவை பற்றிய பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்ப்பாடம் போதிப்பதன் முக்கிய நோக்கம் மொழிப்பயிற்சியே யாதலின், அதற்குத் துணை செய்யும் வகையில் இலக்கணப் பாடங்களும், இலக்கணப் பயிற்சிகளும், மொழிப் பயிற்சிகளும், படப் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

இவற்றை நன்கு பயன்படுத்தும்படி ஆசிரிய அறிஞர்களை வேண்டுகிறேன்.

பெரியநாய்க்கன்பாளையம்,
5-10-56.

ஆசிரியன்

600 008
145942

TB
O-,6(5)
N56

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தமிழ் மொழி (பாட்டு)	...	1
2.	தமிழ் மொழி	...	2
3.	ஐவகை நிலம்	...	7
4.	பீர்பால் பிள்ளை பெற்ற கதை	...	14
5.	திருவள்ளுவரும் திருக்குறளும்	...	21
6.	குல்லா வியாபாரியும் குரங்குகளும் (கதைப்படம்)	...	26
7.	மொஹெஞ்சதாரோ	...	27
8.	தென்னைமரத் தொழில்கள்	...	33
9.	தென்னை மரம் (பாட்டு)	...	37
10.	திரு. வி. கலியாண சுந்தரனார்	...	39
11.	கிராமமும் நகரமும் (உரையாடல்)	...	44
12.	தெனாலிராமனும், திருடர்களும்	...	50
13.	விஞ்ஞானக் கலைஞர்	...	55
14.	ஆமையும் நாரையும் (கதைப்படம்)	...	61
15.	சர்க்கரை	...	62
16.	கடல் (பாட்டு)	...	66

எண்	பொருள்		பக்கம்
17.	விலங்குக் காட்சிச் சாலை	...	68
18.	ஒட்டக்கூத்தர் உயிர் தப்பியது	...	74
19.	நாட்குறிப்பு ஏடு	...	79
20.	தாமிரபரணி	...	83
21.	பொங்கல் விழா	...	88
22.	**தைப் பொங்கல் (பாட்டு)**	...	94
23.	கடிதத்தின் பிரயாணம்	...	96
24.	கடிதம் எழுதும் முறை	...	102
25.	அன்பின் வெற்றி	...	108
26.	மூன்று வினாக்களும் முறையற்ற விடைகளும்	...	117
27.	செய்யுட் பாடங்கள்	...	122

ஐந்தாம் புத்தகம்

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்த்ய ஹிமாசல ஜமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கல தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது;
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

1. தமிழ் மொழி (பாட்டு)

வாழ்க நிரந்தரம் ; வாழ்க தமிழ்மொழி ;
வாழிய வாழியவே !
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே ! 1
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே !
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே ! 2
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !
தொல்லை வினை தரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே ! 3
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே !
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே ! 4

—சி. சுப்பிரமணிய பாரதியார்

அருஞ்சொற்பொருள்

நிரந்தரம் - எப்போதும்; வண்மொழி - வளம் பொருந்திய பாஷை ; ஏழ்கடல் - ஏழு கடல்கள் ; வைப்பு - உலகம் ; மணம் - புகழ் ; என்றென்றும் - எக்காலத்தும் ; கலி - வறுமை, துன்பம் ; துலங்குக - விளங்குக ; வையகம் - உலகம் ; தொல்லைவினை - பழமையான நல் வினை, தீவினைகள் ; தொல்லை அகன்று - துன்பங்களிலிருந்து நீங்கி; சுடர்க - விளங்குக ; அனைத்தும் - யாவற்றையும்.

2. தமிழ் மொழி

1. நாம் பேசும் மொழி தமிழ் மொழி. நமது அன்னை, முதன் முதலில் நமக்குக் கற்றுக்கொடுத்த அருமையான மொழி அதுவேயாகும். ஆகையால்-தான் தமிழ் மொழியை நாம் நமது ‘ **தாய்மொழி** ’ என்று கூறுகிறோம். தமிழ் மொழி மிகவும் இனிமை பொருந்தியது. தமிழ் என்னும் சொல்லுக்கு **இனிமை** என்பது பொருள் ஆகும்.

2. தமிழ் மொழி மிகவும் பழமையானது. இம் மொழி தோன்றியகாலம் இது என்று எவரும் உறுதி-யாகக் கூறமுடியாது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டின் தெற்கில் உள்ள குமரிமுனைக்கு அப்பால் பெரிய நிலப்பரப்பு ஒன்று இருந்ததாக அறிஞர் உரைக்கின்றனர். அந்நிலப்பகுதி **குமரிக் கண்டம்** என்று அழைக்-கப்பட்டு வந்தது. அங்குத் தமிழ் மொழியே வழங்கி வந்தது என்று கூறப்படுகிறது. அந்நிலப் பகுதி-யைக் கடல் பொங்கி எழுந்து அழித்துவிட்டது. முற்காலத்தில் இம்மொழி தென்னாடு எங்கும் வழக்-கத்தில் இருந்து வந்தது. அதன் பின்னர் தமிழ் மொழி வழங்கும் எல்லைகள் சிறிது சிறிதாகச் சுருங்கிக்கொண்டு வந்தன. இந்நாளில் தமிழ்நாடு பன்னிரண்டு மாவட்டங்கள் கொண்டதாக இருந்து வருகிறது.

3. நமது தாய்மொழியாம் தமிழ் மொழியில் பழங்காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் எண்ணற்ற நூல்களை எழுதி வைத்தார்கள். அந்நூல்கள் **இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்** என மூன்று பிரிவுகளாய்ப் பிரிவுபட்டு விளங்கின.

ஆகையால் தமிழ் மொழி **முத்தமிழ்** எனவும் குறிக்கப்படுகிறது.

4. தமிழகத்தில் பண்டைக் காலத்தில் பெருமையுடன் ஆட்சிபுரிந்து வந்தவர்கள் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆவர். அம்மூவரும் தமிழ் மொழியின் வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தனர். அக்காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த குறுநில மன்னர்களும் தமிழை வளர்க்க முயன்றூர்கள். அவர்கள் தமிழ் அறிந்த புலவர்களை ஆதரித்து வந்தார்கள். அவர்களுடைய ஆதரவில் வறுமையை மறந்து, பெருமையுடன் வாழ்ந்த புலவர் பெருமக்கள் அருமைத் தமிழ் மொழியில் சிறந்த நூல்கள் பலவற்றை இயற்றினுர்கள். பாண்டிய மன்னர்கள் தமிழை வளர்ப்பதில் பேரார்வம் கொண்டிருந்தார்கள். அவர்கள் தம்முடைய தலைநகரான மதுரையில் புலவர்களை ஒன்றுகூட்டிச் சங்கம் அமைத்தார்கள். சங்கங்கள் மூன்று இருந்தன. அவற்றுள் கடைசிச் சங்கம் மதுரையில் இருந்தது என்று தெரிகிறது.

5. முதல் சங்கத்திற்கு **அகத்தியர்** என்ற பெரும் புலவர் தலைவராய் இருந்தார். அவரால் இயற்றப்பட்ட பழமையான இலக்கண நூல் **அகத்தியம்** ஆகும். அந்த நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை. அகத்தியரைத் தலைவராகக் கொண்ட முதற் சங்கத்தில் பல புலவர்கள் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் பல நூல்களை இயற்றினுர்கள். அவை யாவும் அழிந்துவிட்டன.

6. முதற் சங்கத்தின் அழிவுக்குப் பிறகு இடைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. தொல்-

காப்பியர் என்பவர் இச்சங்கத்திற்குத் தலைவராக விளங்கினர். அவர் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை இயற்றினர். அந்நூல்தான் நமக்கு இக்காலத்தில் கிடைக்கும் பழமையான இலக்கண நூலாக இருக்கிறது. இச்சங்கத்தில் இருந்த புலவர்களாலும் பல நூல்கள் இயற்றப்பட்டன. ஆனல் முதற் சங்க நூல்களைப் போன்று அவையும் அழிந்துவிட்டன.

7. இடைச் சங்கத்திற்குப் பிறகு தோன்றிய கடைச் சங்கத்திற்கு நக்கீரர் என்பவர் தலைவராக இருந்தார். அச்சங்கத்தில் மேலும் நாற்பத்தெட்டுச் சிறந்த புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் தமிழ்மொழியில் பல சிறந்த நூல்களை இயற்றினார்கள். அந்நூல்களிலும் பல அழிந்துவிட்டன. எஞ்சிய நூல்களை அறிஞர்கள் **எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு** என்று வகைப்படுத்தியுள்ளார்கள். அச்சங்கம் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததாக ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர். இச்சங்க நூல்களேயன்றி, வேறு பல நூல்களும் தமிழ் மொழியில் தோன்றியிருக்கின்றன. சிறந்த கருத்துக்களைக் கொண்ட அருமையான நூல்கள் பல தமிழ் மொழியில் உள்ளன. எல்லா வகையான மதங்களைச் சார்ந்த மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறந்த நூல்களும் நமது தாய் மொழியில் காணப்படுகின்றன. அந்நூல்களில் மிகச் சிறந்தது **திருக்குறள்**. அதனை நீ மேல் வகுப்புக்களில் படித்துப் பயன் பெறுவாய்.

அருஞ்பத உரை

அன்னை - தாய்; அப்பால் - அப்பக்கத்தில்; மாவட்டம் - ஜில்லா; எண்ணற்ற - கணக்கு இல்லாத; முத்தமிழ் - மூன்று தமிழ்; பண்டைக் காலம் - பழங்காலம்; பேரார்வம் - மிகுந்த ஆவல்; இயலவில்லை - முடியவில்லை; எஞ்சிய - மிகுந்த; சார்ந்த - சேர்ந்த; குறுநில மன்னர் - சிற்றரசர்.

பயிற்சி

1. விடை எழுது :

1. நமது தாய்மொழி யாது? அதற்கு ஏன் அப்பெயர் அமைந்தது?
2. தமிழ் மொழி வழங்கும் பகுதிகள் யாவை?
3. தமிழ் மொழியின் பழமையைப் பற்றி எழுதுக.
4. முத்தமிழ் என்பது என்ன?
5. தமிழ் மன்னர்கள் எவ்வாறு தமிழை வளர்த்தார்கள்?
6. முதற் சங்கத்திற்குத் தலைவர் யாவர்?
7. கடைச் சங்கத்தில் ஏற்பட்ட நூல்கள் யாவை?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

அருமையான, முதன் முதலில், இனிமை, பழமை, சிறிது சிறிதாக, பேரார்வம், எஞ்சிய, எல்லாவகையான, சிலவற்றை.

3. எதிர்ப்பதங்கள் எழுது :

அருமை, இனிமை, பழமை, முற்காலம், பெருமை, குறுநில மன்னர், சிலவற்றை, மேல் வகுப்பு.

இலக்கணம்

உயிர் எழுத்தின் வகைகள்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்ற பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள். இவை

ஓசையை அடிப்படையாகக் கொண்டு இருவகையாகப் பிரிக்கப்படும்.

அ, இ, உ, எ, ஒ—இவற்றை உச்சரித்துப் பார். இவை குறுகிய ஓசையைப் பெற்றிருப்பதால் குறில் அல்லது குற்றெழுத்து எனப்படும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு எழுத்துக்களும் நீண்ட ஓசையை உடையவை. அவை நெடில் அல்லது நெட்டெழுத்து எனப்படும்.

3. ஐவகை நிலம்

1. நாம் வசிக்கின்ற இப்பூமியின்மீது உள்ள எல்லா இடங்களும் ஒரேவிதமாக அமைந்திருக்கவில்லை. சில இடங்களில் உயர்ந்த மலைகளும், மலையை அடுத்துள்ள பகுதிகளும் காணப்படுகின்றன. வேறு சில இடங்களில் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. மற்றும் சில இடங்களில் உழவுத் தொழில் செய்வதற்கு உரிய வளம்பொருந்திய நிலங்கள் காணப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் கடலை அடுத்து அமைந்துள்ள பகுதிகள் உள்ளன. இவையன்றி எவ்வித வளமும் அற்ற வறண்ட நிலப் பகுதிகளும் சில இடங்களில் உண்டு. இவ்வாறு நிலத்தில் காணப்படும் வேறுபாடுகளை நோக்கிப் பண்டைத் தமிழ் மக்கள் நிலத்தை ஐந்து வகைகளாகப் பிரித்தார்கள். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. இந்த ஐவகை நிலங்களின் தன்மையைப் பற்றியும், அந்நிலங்களில் வசித்த மக்களின் வாழ்க்கை முறையைப்பற்றியும் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு முதலிய கடைச்சங்க நூல்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

2. மலையும், மலையைச் சார்ந்த இடங்களும் குறிஞ்சி நிலம் என்று குறிக்கப்பட்டன. மலைகளில் குறிஞ்சி என்னும் ஒருவகை மரங்கள் மிகுதி. அம்மரங்களில் பூக்கும் மலர்கள் குறிஞ்சிப்பூக்கள் எனப்படும். அப்பூக்கள் மிகுதியாகக் காணப்படும் காரணத்தினுல்தான் மலைப்பகுதி குறிஞ்சி என்னும் பெயரைப் பெற்றது. குறிஞ்சிப்பூவின் நிறம் நீலம். அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு

முறை மலரும் தன்மையை உடையது என்று கூறப்படுகின்றது. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழும் ஆண் மக்கள் குறவர் அல்லது வேடர் என்று கூறப்படுவர்; பெண்மக்கள் குறத்தியர் என்றும், வேடுவச்சியர் என்றும் கூறப்படுவர். அவர்கள் வாழ்ந்த ஊர்கள் குறிச்சி, சிறுகுடி எனப்பட்டன.

குறிஞ்சி நிலம்

அவர்கள் மலைப்பகுதியில் வேட்டை ஆடியும், தேன்கூடுகளில் இருந்து தேன் எடுத்தும், தினை-யைப் பயிரிட்டும் வாழ்க்கை நடத்துவார்கள். குறிஞ்சி நிலப் பகுதியில் காணப்படும் சிறந்த விலங்கு யானை ஆகும். குறிஞ்சி நில மக்கள் முருகனைத் தெய்வமாக வழிபட்டு வந்தார்கள்.

3. காடும், காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலம் எனப்படும். முல்லைப் பூக்கள் காடுகளில் மிகுதியாக மலரும். ஆதலால் காட்டுப் பகுதி முல்லை என்னும் பெயரைப் பெற்றது. இந்நிலப்

பகுதியில் வாழும் ஆடவர் ஆயர் அல்லது இடை-யர் என்றும், பெண்டிர் ஆய்ச்சியர் அல்லது இடைச்சியர் என்றும் குறிக்கப்படுவர். அவர்கள் ஆடு, மாடுகளை வளர்த்து, அவற்றின் பயனைப் பெற்று வந்தார்கள். முல்லை நிலப்பகுதியில் கால்-

முல்லை நிலம்

நடைகள் மேய்வதற்கு ஏற்ற மேய்ச்சல் நிலங்கள் மிகுதி. முல்லை நிலத்தில் உள்ள ஊர்கள் **பாடிகள்** என்று அழைக்கப்பட்டன. முல்லைநில மக்களுக்-குச் சிறந்த செல்வங்களாக விளங்கியவை ஆடு மாடுகளே யாகும். ஆயர்கள் திருமாலைத் தெய்வ மாகக் கொண்டு, வழிபட்டு வந்தார்கள்.

4. வயலும், வயலைச் சார்ந்த இடங்களும் **மருத நிலம்** என்னும் பெயரைப்பெறும். மருத நிலத்தில் வசிக்கும் மக்கள் உழவர், உழத்தியர் என்று கூறப்படுவர். அவர்கள் உயிரினங்களுக்கு உணவு அளிக்கும் உயர்ந்த தொழிலாகிய உழவுத்

தொழிலை மேற்கொண்டிருந்தார்கள். அந்நிலப் பகுதியில் உள்ள இடங்கள் ஊர்கள் என்று குறிக்கப்பட்டன. மருத நில மக்களுக்கு இன்றியமையாததாக விளங்குவது மழையாகும். ஆகையால்



மருத நிலம்

அவர்கள் மேகக்கூட்டங்களுக்குத் தலைவனை இந்திரனைத் தெய்வமாக வழிபட்டு வந்தார்கள். அக்கடவுளுக்குத் திருவிழாக் கொண்டாடினார்கள்.

5. நெய்தல் நிலம் என்பது கடலும், கடலைச் சார்ந்த இடங்களும் ஆகும். அந்நிலத்தில் வசிக்கும் மக்கள் பரதவர், பரத்தியர் எனப்படுவர். அவர்களுடைய தொழில்கள் மீன்பிடித்தலும், உப்பு விளைத்தலும் ஆகும். பரதவர் அலை வீசும் கடலுக்கு அஞ்சாது, கட்டு மரங்களில் ஏறி நெடுந்தூரம் சென்று மீன்களைப் பிடித்துக்கொண்டு வருவர். அம்மீன்களைப் பரத்தியர் விற்றுப் பொருள் சேர்ப்பர். விற்றவை போக எஞ்சியவற்றை உப்-

பிட்டு, உலர்த்திப் பக்குவம் செய்து, பின்பு அவற்றை விற்பர். நெய்தல் நிலப் பகுதியில் உள்ள இடங்கள் **பாக்கம், பட்டினம்** என்னும் பெயர்களைப் பெறும். நெய்தல் நில மக்கள் **வருணனை** வணங்கினர்.



நெய்தல் நிலம்

6. நீர் அற்று வறண்டு கிடக்கும் நிலப்பகுதி **பாலை** எனப்படும். இந்நிலப்பகுதி மிகவும் வெம்மை பொருந்தியது. குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும் வளத்தை இழந்துவிட்டால் பாலை நிலமாக மாறிவிடும் என்று அறிஞர்கள் கூறியுள்ளார்கள். பாலை நிலத்தில் மக்கள் மிகுதியாக வசிக்க மாட்டார்கள். அங்குச் சிற்சில இடங்களில் சிற்றூர்கள் காணப்படும். அவ்வூர்களில் குறைந்த தொகையினராக மக்கள் வசிப்பார்கள். அவர்கள் **மறவர்கள்** என்று கூறப்படுவார்கள். அம்மக்கள் **துர்க்கையைத்** தெய்வமாக வழிபடுவார்கள். வளம் அற்ற பகுதியாக விளங்கும் இதனை விலக்கி,

அறிஞர்கள் நிலத்தை ‘நானிலம்’ என்றும் வகுத்துக் கூறுவார்கள்.

7. இக்காலத்தில், நாம் நமது தமிழகத்தில் ஐவகை நிலங்களையும் தனித்தனியே பிரித்து உணர முடியாது. மக்கள் தொகையின் பெருக்கத்தால் காட்டுப் பகுதிகளும், மலைப்பகுதிகளும் வயற்பகுதிகளும் நாடுகளாக மாறிவிட்டன. பாலை நிலப் பகுதிகள்கூட மக்களின் முயற்சியினால் மாறுதல் அடைந்துவிட்டன. ஐவகை நிலங்களையும் இக்காலத்தில் நாம் பிரித்துக் காண முடியாவிட்டாலும், அவற்றைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறையை அறிவதற்கு அவை பெரிதும் உதவுகின்றன.

அரும்பத உரை

அடர்ந்த - நெருங்கிய ; விலங்கு - மிருகம் ; களிப்பார்கள் - மகிழ்ச்சி அடைவார்கள் ; செம்மையாக - நன்ருக ; நானிலம் - நான்கு நிலங்கள் ; பெரிதும் - மிகவும் ; வெம்மை - வெப்பம்.

பயிற்சி

1. விடை எழுது :

1. ஐவகை நிலங்கள் யாவை ?
2. குறிஞ்சி நிலம் என்பது எது ? இந்நிலத்தில் வசித்து வந்த மக்கள் யாவர் ?
3. அவர்கள் எந்தக் கடவுளை வணங்கி வந்தார்கள்?
4. முல்லை நில மக்களின் வாழ்க்கை முறையை விவரி.
5. மருத நிலம் என்பது எது? அந்நில மக்களின் தொழில் யாது ?
6. அவர்கள் எந்தக் கடவுளை வணங்கினுர்கள் ? ஏன் ?

7. நெய்தல் நிலம் என்பது யாது? அங்கு வசித்த மக்கள் யாவர்? அவர்களின் தொழில்கள் யாவை?

8. பாலை நிலத்தின் தன்மை என்ன?

9. நானிலம் என்பது யாது?

10. நாம் ஐவகை நிலங்களைப்பற்றி ஏன் அறிந்து-கொள்ள வேண்டும்?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

ஒரேவிதமாக, வழிபாடு, உயர்ந்த, திருவிழா, வெம்மை, அவசியம், பெரிதும்.

3. எதிர்ப் பதங்களை இணைத்து எழுது :

விரிவாக, விருப்பத்தோடு, பலர், உயர்ந்த, பெருமை, வெம்மை,

தண்மை, வெறுப்போடு, சிறுமை, சுருக்கமாக, தாழ்ந்த, சிலர்.

இலக்கணம்

மெய் எழுத்தின் வகைகள்

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டு எழுத்துக்களும் மெய் எழுத்துக்கள் என்பதை நீ அறிவாய். ஓசையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை வல்லினம், மெல்-லினம், இடையினம் என மூன்று வகையாகப் பிரிக்க-லாம்.

க், ச், ட், த், ப், ற் என்பவை வன்மையான ஓசையை யுடையவை. இவை வல்லினம்.

மென்மையான ஓசையையுடைய ங், ஞ், ண், ந், ம், ன் என்ற ஆறும் மெல்லினம்.

ய், ர், ல், வ், ழ், ள் என்ற ஆறு எழுத்துக்களும் வல்லினத்துக்கும் மெல்லினத்துக்கும் இடைப்பட்ட ஓசையை உடையவை. அவை இடையினம் ஆகும்.

4. பீர்பால் பிள்ளை பெற்ற கதை

1. வட இந்தியாவில் சிறப்பாக ஆட்சி செய்த பேரரசர்களில் ஒருவர் **அக்பர்**. அவர் மொகலாய வமிசத்தைச் சேர்ந்தவர். இஸ்லாம் மதத்தைத் தழுவியவராக இருந்தபோதிலும் அவர் தம் நாட்டில் வாழ்ந்த மற்றைய மதத்தினருக்கும் நன்மைகள் செய்தார்; சாதி, மத வேறுபாடு கருதாமல் எல்லோருக்கும் தம்முடைய அரசாங்கத்தில் பதவிகள் கொடுத்துச் சிறப்பித்தார்; அக்பருடைய அரசவையில் **ராஜா பீர்பால்** என்பவர் விகடராக இருந்தார். அவர் கூரிய மதி படைத்தவர்; அக்பரிடம் பேரன்பு கொண்டவர். அவர் தம்முடைய இனிமையான பேச்சுக்களினாலும், சிறந்த அறிவு நுட்பத்தினாலும் அக்பருடைய உள்ளத்தைக் கவர்ந்தார். அக்பர் பீர்பாலை மிகவும் விரும்பினார்.

2. பீர்பாலின் பெருமையும், புகழும் மேன்மேலும் பெருகின. அக்பர் அவையில் தம்முடைய

அறிவின் திறத்தை வெளிப்படுத்திப் பரிசில் பெற விரும்பி வந்த அறிஞர் பலர், பீர்பாலின் நுட்ப மான வினுக்களுக்கு விடை அளிக்க முடியாமல் தோல்வியுற்றனர். இவ்வாறு பீர்பால் பெருமை அடைவதும், அரசருடைய அன்பிற்கு உரியவ-ராவதும், அக்பரது அவையில் இருந்த சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்களில் மிகவும் முக்கியமானவர் அரண்மனை மருத்துவர். அவர் பீர்பாலேத் தண்ட-னைக்கு உள்ளாக்கவேண்டுமென்று கருதினுர். அதற்கு உரிய காலத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

3. ஒரு நாள் பேரரசர் அக்பர் நோய் உற்ருர். அவர் உடனே மருத்துவரை வரவழைத்தார். மருத்துவர் அரசரின் உடல் நிலையைப் பரி-சோதித்துவிட்டு, “அரசரே, நான் இந்த நோயை ஒரு நொடியில் போக்கக்கூடிய மருந்து வைத்-திருக்கிறேன். அதனை எருதின் பாலோடு கலந்து உட்கொண்டால், நீங்கள் உடனே குணம் அடை-வீர்கள்,” என்று கூறினுர்.

4. மருத்துவர் கூறியதைக் கேட்ட அக்பர் பெரிதும் வியப்பு அடைந்தார். எருது, பால் கொடுப்-பதாக அவர் அதுவரை கேள்விப்பட்டதே இல்லை. ஆகையால் அவர் மருத்துவரை நோக்கி, “அது எப்படி முடியும்? எருதின் பால் எங்கிருந்து கிடைக்கும்?” என்று கேட்டார். மருத்துவர் பணி-வுடன், “அரசர் பெருமானே, தாங்கள் எருதின் பால் கொண்டு வரும்படி பீர்பாலுக்கு ஆணை இடுங்கள். அவர் எதனையும் சாதிக்கும் திறமை படைத்தவர்,” என்று கூறிவிட்டு, அங்கிருந்து அகன்ருர்.

5. அக்பர் மருத்துவரின் மனக்கருத்தை ஒருவாறு புரிந்துகொண்டார். எனினும் பீர்பால் இதன்பொருட்டு யாது செய்வார் என்பதை அறிய விரும்பிய அவர், உடனே ஏவலாளரை அனுப்பி, பீர்பாலை அழைத்துவரச் செய்தார். பீர்பால் அரசரிடம் வந்து அவரை வணங்கி நின்றார். மன்னர் நிகழ்ந்தனவற்றை அவரிடம் கூறினார். பீர்பால் உடனே உண்மையை உணர்ந்துகொண்டார். தம்மைத் தொல்லைக்கு உட்படுத்த மருத்துவர் செய்த சூழ்ச்சியே இது என்று உணர்ந்து கொண்டார். அவர் அக்பரை நோக்கி, "மன்னரே, எருது, பால் கொடுப்பதைப்பற்றி இதுவரை நான் அறிந்ததில்லை. உலகில் இல்லாத ஒரு பொருளை நான் எவ்வாறு கொண்டுவருவேன்?" என்று வருத்தத்துடன் கூறினார். அதைக் கேட்ட அக்பர் மிகுந்த கோபத்துடன், "பீர்பால், அதைப்பற்றி எல்லாம் என்னிடம் பேசாதே. மருத்துவர் கூறியபடி எனக்கு எருதின் பால் உடனே வேண்டும். அதனை எப்படியாவது கொண்டுவா," என்று கூறினார். தன்னுடைய பேச்சு அச்சமயத்தில் பயன் அளிக்காது என்று எண்ணிய பீர்பால், அரசரை வணங்கி, விடை பெற்று, அங்கிருந்து அகன்றார்.

6. வீட்டிற்குச் சென்ற பீர்பால் உணவு உண்டு முடித்ததும், எவ்வாறு எருதின் பாலைக் கொண்டுவருவது என்று சிந்தித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார். அவருடைய முகத்தில் கவலைக் குறிகள் தென்பட்டன. அச்சமயம் அங்கு வந்த அவருடைய மகள் தந்தையாரை நெருங்கி, "அப்பா, ஏன் வருத்தமாக இருக்கிறீர்கள்?

அரண்மனையில் வருந்தத்தக்க நிகழ்ச்சி ஏதேனும் நடைபெற்றதா?'' என்று கேட்டாள். முதலில் அவளிடம் உண்மையைக் கூற மறுத்த பீர்பால், அவளுடைய வற்புறுத்தலினால் நிகழ்ந்தவை யாவற்றையும் கூறினார்.

7. பீர்பால் கூறியவற்றைக் கேட்ட அவள் ''அப்பா, நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டா. நான் உங்களுக்கு உதவி புரிகிறேன்,'' என்று கூறினாள். மறுநாள் அவள் தன் வீட்டில் இருந்த பழந்துணிகள் சிலவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டாள். அன்று நள்ளிரவில் அவள் அந்தத் துணிகளை எடுத்துக்கொண்டு ஆற்றிற்குச் சென்றாள். மன்னருடைய படுக்கை அறைச் சாளரத்திற்குக் கீழ் இருந்த நீர்த்துறையில் அவள் அத்துணிகளைத் துவைக்கத் தொடங்கினாள்; அங்கிருந்த கல்லின் மீது துணிகளைத் 'தொப், தொப்' என்ற ஓசையுண்டாகும்படி பலமுறை அடித்துத் துவைத்துக் கொண்டிருந்தாள். எல்லோரும் அயர்ந்து உறங்கும் நள்ளிரவில் அவள் துணிகளை அடித்துத் துவைத்தது உறங்கியவர்கட்கு இடையூறாக இருந்தது. உறக்கத்தில் ஆழ்ந்திருந்த அக்பர் அந்த ஓசையைக் கேட்டு விழித்துக்கொண்டார். மிகுந்த சினத்துடன் சாளரத்தின் அருகில் வந்து, வெளியில் நோக்கிய அக்பர், பெண் ஒருத்தி ஆற்றின் துறையில் துணி துவைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்; ஏவலாளரை அனுப்பி அவளைக் கொண்டு வரச் செய்தார்.

8. அவளைக் கண்ட அக்பர், ''யாரம்மா நீ? ஏன் இந்த நள்ளிரவில், என்னுடைய படுக்கை அறைக்கு அருகில் துணிகளைத் துவைத்துத்

தொல்லைகொடுக்கிறாய்?" என்று அதட்டினார். அப்பொழுது அந்தப் பெண் மிகவும் அஞ்சி-னவள் போன்று நடித்து, அரசரை நோக்கி, "அரசரே, என்னுடைய தந்தையார் இன்று பகலில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டார். பகல் முழுவதும் வீட்டில் வேலைகள் அதிகமாக இருந்தன. அக்குழந்தைக்குத் தேவையான சுத்தமான துணிகள் இல்லாத காரணத்தால் நான் இந்த நள்ளிரவில் பழந்துணிகளைத் துவைக்கும்படி நேர்ந்துவிட்டது. என்னுடைய பிழையை மன்னித்து அருளவேண்-டும்!" என்று வேண்டிக்கொண்டாள்.

9. அதைக் கேட்ட அக்பர் வியப்பும் சினமும் மேலிட்டவராய், "என்ன சொன்னாய்? நீ யாரை முட்டாள் ஆக்கப் பார்க்கிறாய்? உனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? ஆண் மகன் ஒருவன் பிள்ளை பெற்றிருக்கிறான் என்ற செய்-தியை யார் நம்ப முடியும்?" என்று கத்தினார்.

10. அப்பொழுது அப்பெண் அமைதியாக, "பெருமானே, நான்கூட இதுவரையில் இத்தகைய விநோதமான நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டது இல்லைதான். ஆனால் இப்பொழுது நம்முடைய நகரத்தில் இதை விட அதிசயமான நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன," என்று கூறினாள். அதைக் கேட்ட அக்பர், "நீ எதைப்பற்றிக் கூறுகிறாய்?" என்று வினவினார்.

11. அப்பொழுது அவள், "அரசரே, நீங்களே எருதின் பால் கொண்டுவரும்படி ஒருவருக்கு ஆணையிட்டிருக்கும்போது, ஏன் ஓர் ஆண் மகன் பிள்ளை பெற்றிருக்கக் கூடாது?" என்று கூறினாள். அதைக் கேட்ட அக்பர் தம்மை எதிர்த்துப் பேசிய

அவள்மீது சிறிதும் சினங் கொள்ளாமல், அவளுடைய துணிவைப்பற்றிப் பெருவியப்புக் கொண்டார். பிறகு அவள் பீர்பாலின் மகள் என்பதை அறிந்துகொண்டு, அவளிடம், ''குழந்தாய், அக்பர் எருதின் பாலைப் பெற்றுவிட்டார். அது பீர்பால் பெற்ற பிள்ளைக்குக் கொடுக்கப்பட்டது என்று உன் தந்தையாரிடம் கூறுக,'' என நகைத்துக்கொண்டே மொழிந்தார்; மேலும், அவளுக்குப் பல பரிசுகளைக் கொடுத்து அனுப்பினர்.

12. தன்னுடைய சூழ்ச்சி பலிக்காததை அறிந்த மருத்துவர், மன்னரால் தமக்கு ஏதேனும் தீங்கு நேரும் என்று அஞ்சி, விஷத்தைக் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற நீதி இதன்மூலம் புலனாகிறது அல்லவா? ஆகையால் நாம் எவருக்கும் தீங்கு செய்ய நினைக்கக்கூடாது.

அரும்பத உரை

தழுவியவர் - சேர்ந்தவர் ; மதி - அறிவு ; பேரன்பு - மிகுந்த அன்பு ; உற்றார் - அடைந்தார் ; மருத்துவர் - வைத்தியர் ; ஆணை - கட்டளை ; படைத்தவர் - பெற்றவர் ; ஏவலாளர் - வேலையாட்கள் ; அகன்றார் - நீங்கிச் சென்றார் ; நள்ளிரவு - நடு இரவு ; உறக்கம் - தூக்கம் ; சாளரம் - சன்னல் ; அஞ்சினள் - பயப்பட்டவள் ; வியப்பு - ஆச்சரியம் ; மொழிந்தார் - கூறினர் ; தற்கொலை - தானே தன்னுடைய உயிரைப் போக்கிக் கொள்ளுதல் ; கெடுவான் - கெடுதல் அடைபவன் ; புலனாகிறது - வெளிப்படுகிறது.

பயிற்சி

1. விடை எழுது :

1. பீர்பால் என்பவர் யாவர்?
2. அவருடைய பண்புகள் யாவை?
3. அவர் எவ்வாறு சிறப்புப் பெற்றார்?
4. மருத்துவர் பீர்பாலுக்குத் தீமை உண்டாக்குவதற்குச் செய்த சூழ்ச்சி யாது?
5. பீர்பால் ஏன் வருத்தத்துடன் இருந்தார்?
6. அவருடைய மகள் தன் தந்தையின் துயரத்தை எவ்வாறு போக்கினாள்?

2. வாக்கியத்தில் அமைத்து எழுது :

மேன்மேலும், ஒருவிதமான, வருத்தமாக, நள்ளிரவில், இடையூறு, விநோதமான.

3. எதிர்ப்பதங்கள் எழுது :

நள்ளிரவில், பழந்துணி, பேரரசர், சிலவற்றை, அமைதி, சுத்தமான.

5. திருவள்ளுவரும் திருக்குறளும்

1. நமது தமிழகத்தில் பண்டைக் காலத்தில் அறிஞர் பலர் தோன்றி, தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் சிறப்பித்தனர்; அமுதினும் இனிய அருமைத் தமிழில் அளவற்ற நூல்களை எழுதிக் குவித்தனர்; தமிழர் நாகரிகத்தைத் தரணி எங்கும் பரப்பினர். அத்தகைய அறிஞர் பெருமக்களுள் குறிப்பிடத் தக்க சிறப்பினைப் பெற்றவர் திருவள்ளுவர் ஆவர்.

2. திருவள்ளுவருடைய வரலாற்றைப் பற்றி நாம் தெளிவாக ஒன்றும் கூற இயலவில்லை. அவரைப்

பற்றிப் பல கதைகள் நம் நாட்டில் வழங்கி வருகின்றன. அவர் ஆதி, பகவன் என்பவர்களுக்கு மைந்தராகப் பிறந்தார் என்றும், வள்ளுவக் குடியினரால் வளர்க்கப்பட்டார் என்றும் ஒரு கதை கூறுகிறது. இவர் ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு, நம் நாட்டில் வாழ்ந்து வந்தார் என்பதை எவரும் மறுக்க முடியாது. திருவள்ளுவருடைய இயற்பெயர் எது என்று நாம் அறிய இயலவில்லை. இவருடைய பெயரிலிருந்து, வள்ளுவர் என்ற குடியினரால் இவர் வளர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

3. வள்ளுவர் என்போர் பழங்காலத்தில் நம் நாட்டில் சிறப்புடன் வாழ்ந்து வந்த பழமையான குடியைச் சேர்ந்தோர் ஆவர். அவர்கள் அரசருடைய பிறந்த நாள், மண நாள், முடிசூட்டு நாள் ஆகிய நாட்களில் யானையின் மீது ஏறி அமர்ந்து, நகர வீதிகள் எங்கும் சென்று, முரசு கொட்டிச் செய்தியை அறிவித்து வந்தார்கள். இக்குடியினரால் வளர்க்கப்பட்டவர் என்று கருதப்படும் திருவள்ளுவர், தமிழில் சிறந்த புலமை பெற்றிருந்தார். அவர் பல துறைகளைப் பற்றியும் நன்கு தெரிந்து கொண்டிருந்தார்; செய்யுட்கள் இயற்றுவதில் வல்லவராக விளங்கினார்.

4. திருவள்ளுவருக்கு வேறு பல பெயர்களும் உண்டு. அவற்றில் நாயனார், தேவர், பெருநாவலர், பொய்யாமொழியார் என்பன முக்கியமானவை. அவர் சென்னைக்குப் பக்கத்தில் உள்ள திருமயிலை என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார் என்று கூறப்படுகிறது. அவ்வூரே இக்காலத்தில்

மயிலாப்பூர் என்று அழைக்கப்படுகிறது. திருவள்ளுவருடைய மனைவியார் பெயர் வாசுகி அம்மையார் என்பதாகும். இந்த அம்மையார் கணவர் கருத்து அறிந்து நடக்கும் பண்பு உடையவர். கற்பு நெறி தவறாதவர்.

5. திருவள்ளுவர் நெசவுத் தொழிலை மேற்கொண்டிருந்தார். அவர் தமிழ் மொழியில் மிகவும் அருமையான கருத்துக்களைக் கொண்ட திருக்குறள் என்னும் நூலை இயற்றினர். இந்நூலில் ஆயிரத்து முந்நூற்று முப்பது செய்யுட்கள் இருக்கின்றன. அவை இரண்டு அடிகளைக் கொண்ட குறள் வெண்பாக்களாக இருக்கின்றன. எனவே குறள் வெண்பாக்களைக் கொண்டுள்ள இந்நூல் குறள் என்றே கூறப்பட்டு வருகிறது. திரு என்பது இந்நூலின் பெருமையைக் குறிக்கும் மொழியாக வந்துள்ளது. இந்நூலில் வள்ளுவர், உலக வாழ்வில் மக்கள் அடைதற்கு உரிய அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றைப் பற்றியும் விரிவாகக் கூறியுள்ளார். அவருடைய பெருமை உலகு எங்கும் பரவுவதற்கு, அவரால் இயற்றப்பட்ட திருக்குறளே காரணமாக விளங்குகிறது.

6. இந்நூல் தமிழ்மொழியில் உள்ள பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகை நூல்களில் ஒன்ருக விளங்குகிறது. இரண்டே அடிகளால் அமைந்த செய்யுட்களைக் கொண்டிருப்பினும், அருமை மிக்க பல கருத்துக்களை எளிய முறையில் எடுத்துக் கூறுகிறது. முடி சூடிய வேந்தர்கள் ஆட்சிபுரிந்த பண்டைக் காலத்தில் எழுதப்பட்ட திருக்குறள், குடியாட்சி அமைந்துள்ள இந்தக் காலத்திற்கும்

பொருத்தமான கருத்துக்களையே கூறுகின்றது; எல்லா மதத்தினரும், எல்லா நாட்டினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பெருமை பெற்றிருக்கிறது; உலகில் உள்ள பல மொழிகளில் பெயர்த்து எழுதப் பட்டுள்ளது. இத்தகைய சிறந்த நூலை இயற்றிக் கொடுத்து, தமிழகத்தின் பெயரை உலகெங்கும் பரப்பிய வள்ளுவரை நாம் என்றும் மறக்கக் கூடாது. நாம் அவர் இயற்றிய திருக்குறளை வழிகாட்டியாகக் கொண்டு வாழ்க்கையில் உயர்வு பெறவேண்டும்.

அரும்பத உரை

தரணி - உலகம்; அத்தகைய - அப்படிப்பட்ட; இயலவில்லை - முடியவில்லை; மணம்-திருமணம்; புலமை-அறிவுடைமை; பண்பு - குணம்; இன்றியமையாத - மிகவும் அவசியமான; முடி - கிரீடம்; வேந்தர் - பெரிய மன்னர்; குடியாட்சி - மக்கள் ஆட்சி; தமிழகம் - தமிழ் நாடு.

பயிற்சி

1. விடை எழுது :

1. திருவள்ளுவருடைய வரலாறு பற்றி வழங்கும் கதை யாது?
2. வள்ளுவர் என்பார் யாவர்? அவரது தொழில் யாது?
3. திருவள்ளுவருடைய வேறு பெயர்கள் யாவை?
4. திருக்குறளுக்கு ஏன் அப்பெயர் ஏற்பட்டது?
5. அது எவ்வாறு அமைந்துள்ளது?
6. திருக்குறளின் சிறப்பை எழுது.

2. வாக்கியத்தில் அமைத்து எழுது :

குறிப்பிடத்தக்க, தெளிவாக, மறுக்கமுடியாத, அமர்ந்து, விரிவாக, காரணமாக, பொருத்தமான, உயர்வு.

3. எதிர்ப்பதங்கள் எழுது :

தெளிவாக, விரிவாக, அறம், இன்பம், எளிய, உயர்வு.

இலக்கணம்

சுட்டெழுத்து

(1)	(2)	(3)
அம்மி	அவன்	அப்பையன் (அ+பையன்)
இலை	இவள்	இப்பெண் (இ+பெண்)
உரல்	உவன்	உப்பையன் (உ+பையன்)

இவற்றைக் கவனி. அம்மி என்பதில் உள்ள 'அ' என்னும் எழுத்து எப்பொருளையும் தருவதில்லை. ஆனால் 'அவன்' என்பதில் உள்ள 'அ' என்னும் எழுத்து ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும் பொருளில் வந்துள்ளது. அவ்வாறே இவள், உவன் என்னும் பெயர்களில் உள்ள இ, உ என்னும் எழுத்துக்களும் சுட்டுப் பொருளையே தருகின்றன. எனவே இம்மூன்று எழுத்துக்களும் சுட்டு எழுத்துக்கள் எனப்படும்.

அவன், அப்பையன்—இவை இரண்டும் சுட்டுப் பெயர்களே. ஆனால், அவன், அப்பையன் இவற்றிற்கு இடையே வேறுபாடு உண்டு. அவன் என்னும் சொல்லில் உள்ள சுட்டெழுத்தைச் சொல்லில் இருந்து பிரிக்க முடியாது. இவ்வாறு சொல்லின் உள்ளேயே சுட்டெழுத்து அமைந்திருப்பது **அகச்சுட்டு** எனப்படும். இவள், உவன் என்பனவும் அகச்சுட்டுக்களே யாகும்.

அப்பையன், இப்பெண், உப்பையன்—இவற்றில் உள்ள சுட்டெழுத்தைப் பிரிக்க முடியும். இவ்வாறு சுட்டெழுத்து, சொல்லின் வெளியே அமைந்திருந்து, சுட்டுப் பொருளைத் தருவது **புறச்சுட்டு** எனப்படும்.

6. குல்லா வியாபாரியும் குரங்குகளும்



குறிப்பு : படம் பார்த்துக் கதை சொல்லச் செய்தல்.

7. மொஹெஞ்சதாரோ

1. நாம் வாழும் இந்த உலகத்தில் பல நாடுகள் உள்ளன. அந்நாடுகளில் மிகவும் பழமையான காலத்தில் இருந்தே நாகரிகத்தில் சிறந்து விளங்கியவை சில நாடுகள் ஆகும். அவை எகிப்து, பாபிலோனியா, இந்தியா, சீனு முதலியன. இந்திய நாட்டின் பெருமை பழங்காலத்தில் உலகு எங்கும் பரவி இருந்தது. இந்தியாவின் தென் பகுதியில் உள்ள தமிழகம் பல விதங்களிலும் சிறப்புற்று விளங்கியது. அந்நாட்டைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆட்சி புரிந்து வந்தனர் என்பதை நீ படித்திருக்கிருய். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நமது நாட்டில் வாழ்ந்த மக்கள் மற்றைய நாடுகளில் வசித்த மக்களைக் காட்டிலும் மேம்பட்ட நாகரிகத்தைப் பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு என்று தனிப்பட்ட நாகரிகம் ஒன்று இருந்தது. அந்த நாகரிகம் இந்தியா முழுமையும் பரவியிருந்தது என்பது ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்து ஆகும். அதற்குரிய ஆதாரங்களில் ஒன்ருக விளங்குவது மொஹெஞ்சதாரோ என்னும் பூமிக்குள் புதையுண்டு இருந்த நகரம் ஆகும்.

2. நமது நாட்டில் பண்டைக்காலத்தில் சீரும், சிறப்பும் பெற்று விளங்கிய பல நகரங்கள் அழிந்து மண்ணில் புதைந்துவிட்டன. அவற்றுள் மொஹெஞ்சதாரோவும் ஒன்ருகும். இந்நகரம் சிந்து நதியின் சமவெளியில் உள்ள பஞ்சாப் இராச்சியத்தில் லார்காஞ என்னும் பகுதியில் மண்ணில் புதைந்து கிடந்தது. அந்த

இடம் மேடான நிலப் பகுதியாக இருந்தது. 1922-ஆம் ஆண்டில் **ஆர். டி. பானர்ஜி** என்பவர் அம்மேட்டு நிலத்தைத் தோண்டிப் பார்த்தார். அங்கு ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிறந்த முறையில் விளங்கியதாகக் கருதப்படும் பழமையான நகரத்தின் சின்னங்கள் பல காணப்பட்டன. அந்நகரமே **மொஹெஞ்சதாரோ** ஆகும். அச்சொல்லுக்கு **இறந்தவர்களின் மேடு** என்பது பொருள். அப்பழமையான நகரத்தின் சிறப்புக்களைப் பற்றி அறிஞர்கள் நன்ருக அறிந்துள்ளவற்றில் சிலவற்றைக் கவனிப்போம் :

3. மொஹெஞ்சதாரோ நகரம் சிறந்த நாகரிகத்தைப் பெற்று விளங்கியது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. அதன் அமைப்பு, இக்காலத்தில் உள்ள பெரிய நகரங்களின் அமைப்பை ஒத்திருக்கிறது. அங்கு உள்ள வீதிகள் ஒழுங்காக அமைந்துள்ளன. அந்நகரம் சுகாதார வசதிகளைக் கொண்டதாய் விளங்கியது. கழிவு நீர்க் கால்வாய்களும் அங்குக் காணப்படுகின்றன. வீதிகளில் பல இடங்களில் பொதுக் கிணறுகள் உள்ளன. மக்கள் நீராடுவதற்கு ஏற்ற பெரிய குளங்கள் அந்நகரத்தில் இருக்கின்றன. அக்குளங்கள் நான்கு புறங்களிலும் சிறந்த முறையில் படிக்கட்டுகளைப் பெற்றிருக்கின்றன. அந்நகரத்தில் உள்ள வீடுகள் உயர்ந்த கூரையையும், சாளரங்களையும், பல அறைகளையும் பெற்று விளங்குகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கிணறு காணப்படுகிறது. இரண்டு அடுக்குகளுடன் கூடிய சில வீடுகளும் அங்கு உள்ளன. அவ்வீடுகளின் மேல் மாடியில் குளிக்கும் அறையும், அந்த அறையி-



மொஹெஞ்சதாரோவில் கிடைத்த பொருள்கள்



மொஹெஞ்சதாரோவின் ஒரு பகுதி

லிருந்து கீழ்நோக்கி இறங்கும் குழாயும் அமைந்துள்ளன. அந்த ஊரின் நடுவில் பெரிய மாளிகை

ஒன்று காணப்படுகிறது. அந்த மாளிகையைச் சூழ்ந்து, பல அறைகள் இருக்கின்றன. அக்கட்டடத்தின் நடுவில் பெரிய தூண்களோடு விளங்கும் ஒரு மண்டபம் அமைந்துள்ளது. அம் மண்டபத்திற்கு அருகில் படிக்கட்டுகளுடன் கூடிய அழகிய குளம் ஒன்று காணப்படுகிறது.

4. மொஹெஞ்சதாரோ நகரத்தில் வணிகர் உழவர், கொல்லர், தச்சர், நெசவாளர் முதலிய பலவகைத் தொழிலாளரும் வாழ்ந்து வந்தனர் என்பதற்கு உரிய சான்றுகள் காணப்படுகின்றன. அங்குக் கிடைத்த அணிகள், சித்திரங்கள் முதலியவற்றில் இருந்து அந்நகர மக்கள் முற்காலத்தில் எவ்வாறு இருந்தனர் என்பதை நாம் அறிகின்ருேம். அங்கு வாழ்ந்த மாந்தர் பருத்தியினுலும், உரோமத்தினுலும் நெய்யப்பட்ட ஆடைகளை அணிந்தனர் ; ஆடவர் இடுப்பில் ஓர் ஆடையும், உடம்பின்மீது சட்டையும் தரித்திருந்தனர் ; தலையில் முண்டாசு அணிந்து, காலில் செருப்பும் அணிந்து கொண்டிருந்தனர். பெண்கள் பூ வேலைப் பாடுகளுடன் கூடிய புடைவை பாவாடை, சட்டை ஆகியவற்றை அணிந்திருந்தார்கள் ; பொன், வெள்ளி, தந்தம், மணிகள், சங்கு, பித்தளை முதலியவற்ருல் ஆகிய அணிகலன்களை அணிந்திருந்தார்கள். ஆண்கள் தலைமயிரைப் பின்னிப் பின்புறம் முடிந்து கொண்டார்கள். பெண்கள் தங்கள் கூந்தலைப் பின்னிப் பலவிதங்களில் தூக்கி முடியிட்டுக் கொண்டார்கள். அவர்கள் தலைவாரிக் கொள்ளப் பயன்படுத்திய சீப்புக்கள் தந்தத்தினுலும், மரத்தினுலும் செய்யப்பட்டவை.

5. அந்நகர மக்கள் பயன்படுத்தி வந்த

தட்டு, கிண்ணம், குவளை, சால் முதலிய பாத்திரங்களும் அங்கிருந்து கிடைத்துள்ளன. அப்பாத்திரங்கள் செம்பினால் செய்யப்பட்டுள்ளன. கோடரி, ஈட்டி முதலியனவும் செம்பைக் கொண்டு செய்யப்பட்டனவாக அமைந்துள்ளன. குத்துவாள், உளி, கத்தி, ஊசிகள், தூண்டில் முள்கள் முதலியனவும் அங்குக் கிடைத்தன. குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்களும் அங்குக் காணப்பட்டன. மனித உருவங்கள், பறவைகள், வண்டிகள், ஊதுகுழல் முதலியவற்றின் பொம்மைகளும் கிடைத்துள்ளன. அவையும் சுட்ட மண்ணினால் செய்யப்பட்டவை.

6. மொஹெஞ்சதாரோவில் வசித்த மக்கள் தானியங்களையும், இறைச்சியையும் உண்டு வந்தனர் என்று தெரிகிறது. அவர்கள் உழவுத் தொழிலிலும், வாணிகத்திலும் சிறந்து விளங்கினார்கள். அங்குக் கிடைத்த ஓவியங்களில் மரக்கலத்தின் படம் வரையப்பட்டிருப்பதால், அம்மக்கள் கடல் வாணிகத்திலும் ஈடுபட்டிருந்தார்கள் என்று தெரிகிறது. அவர்கள் ஓவியம், சிற்பம் முதலிய பல கலைகளிலும் சிறந்து விளங்கினார்கள். சுவர்களிலும், பாத்திரங்களின் மீதும் அவர்களால் தீட்டப்பட்ட ஓவியங்கள் காணப்படுகின்றன. அங்குக் காணப்படும் கடவுள் சிலைகளும், பொம்மைகளும் அவர்களுடைய சிற்பக் கலையின் திறமைக்குச் சான்றாக விளங்குகின்றன. அங்குச் சிவலிங்கத்தின் வடிவம் காணப்பட்டதால், அந்நகர மக்கள் சைவ மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுகிறது.

7. மொஹெஞ்சதாரோவில் காணப்பட்ட

சின்னங்களைக்கொண்டு ஆராயும்போது, பழந்தமிழரின் நாகரிகத்துடன் அந்நகர மக்களின் நாகரிகம் ஒப்புமை கொண்டிருப்பது புலனாகின்றது. இதிலிருந்து தமிழர் நாகரிகம் இந்தியா முழுமையும் பரவியிருந்தது என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும்.

அரும்பத உரை

சீர் - பெருமை ; சின்னம் - அடையாளம் ; சான்று - சாட்சி ; மாந்தர் - மக்கள் ; கோடரி - மரம் வெட்டப் பயன்படும் கருவி ; தூண்டில் முள் - மீன்களைப் பிடிக்க உதவும் வளைந்த இரும்பு முள் ; இறைச்சி - மாமிசம் ; வாணிகம் - வியாபாரம் ; கலம் - கப்பல் ; சைவர் - சிவ பெருமானை வணங்குபவர் ; அணிகலன் - ஆபரணம்.

பயிற்சி

1. விடை எழுது :

1. மொஹெஞ்சதாரோ எங்கு உள்ளது ?
2. அந்நகரத்து வீடுகள் எவ்வாறு உள்ளன ?
3. அந்நகரத்து மக்களின் வாழ்க்கை முறையை எழுது.
4. அவர்களுடைய ஆடை, அணிகலன்கள் யாவை?
5. அங்குக் கிடைத்த விளையாட்டுச் சாமான்கள் யாவை ?
6. மொஹெஞ்சதாரோவில் வாழ்ந்த மக்கள் பல கலைகளில் வல்லவர் என்பதை எவ்வாறு அறியலாம் ?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

நாகரிகம், சீரும் சிறப்பும், சின்னங்கள், சுகாதாரம், வேலைப்பாடு, சான்றாக.

3. எதிர்ப் பதங்கள் எழுது :

நாகரிகம், தென்பகுதி, இறந்தவர், வாழ்வு, பொது.

4. இப்பாடத்தின் முதல் இரு பத்திகளிலும் உள்ள அகச்சுட்டு, புறச்சுட்டு ஆகியவற்றை எடுத்து எழுது.



8. தென்னைமரத் தொழில்கள்

1. நமக்கு மிகவும் பயன்படும் மரங்களில் தென்னை மரமும் ஒன்று. இது மணற்பாங்கான இடங்களில் செழித்து வளரும். இந்த மரம் மிகவும் உயரமாக வளரக் கூடியது. இதன் அடிப்பாகம் பருத்தும், நுனிப்பகுதி சிறுத்தும் காணப்படும். மா, பலா முதலிய மற்றைய மரங்களைப்போலத் தென்னை மரத்திற்குக் கிளைகள் இல்லை. இம்மரத்-திலுல் உண்டாகும் பயன்கள் பலவாகும். இதிலி-ருந்து கிடைக்கும் பொருள்களைக் கொண்டு மக்கள் பலவிதமான தொழில்களைச் செய்து வருகிருர்கள்.

2. தென்னை மரத்தின் அடி மரத்தை மக்கள் வாரைகளாக அறுத்து, வீடு கட்டப் பயன்படுத்து-கின்ருர்கள். அம்மரத்தின் ஓலையைக் கொண்டு கீற்று முடையும் தொழில் நடைபெற்று வரு-கிறது. அக்கீற்றுக்களை வீட்டுக் கூரையாக வேய்-

கிருர்கள். திருமணக் காலத்திலும், திருவிழா நாட்-களிலும், கீற்றுக்களைக் கொண்டு பந்தல்கள் போடப்படுகின்றன. மேலும் தென்னை ஓலையைக் கொண்டு கிளி, பிரம்பு, பாம்பு முதலிய அலங்காரப் பொருள்களையும் செய்கிருர்கள். தென்னை ஓலையைக் கொண்டு பூக்குடலைகளும் பின்னப்படு-கின்றன.

3. தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் தேங்காய்கள் நமக்குப் பலவகைகளில் பயன்படு-கின்றன. முற்ருத இளந் தேங்காய் இளநீர் எனப்-படும். அது வெயிற் காலத்தில் மக்களால் விரும்பி உண்ணப்படுகிறது. முற்றிய தேங்காய்களை நாம் காய் கறி வகைகளுடன் சேர்த்து உண்ணுகிறோம். நன்ருக முற்றிய தேங்காய் நெற்றுக்களில் இருந்து கொப்பரை கிடைக்கிறது. அக்கொப்பரைகளைச் செக்கில் இட்டு ஆட்டித் தேங்காய் நெய் பிழியும் தொழில் நடைபெறுகிறது. தேங்காய் நெய் சமையல் செய்வதற்குப் பயன்படுகிறது. சோப்-புச் செய்யும் தொழிலிலும் இந்த நெய் பயன்-படுத்தப்படுகிறது.

4. தேங்காயின் மட்டைகளைக் கொண்டு கயிறு முறுக்கும் தொழில் நம் நாட்டில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் மிகுதியாக நடைபெறு-கிறது. தேங்காயின் ஓடாகிய கொட்டாங்கைச்சி-யைக் கொண்டு அகப்பைகள் செய்யப்படுகின்றன.

5. தென்னை மரங்கள் நம் நாட்டில் மேற்குக் கடற்கரைச் சமவெளியில் மிகுதியாகக் காணப் படுகின்றன. அங்கு வசிக்கும் மக்களுக்குத் தென்னை மரங்களே சிறந்த செல்வமாக விளங்கி வருகின்றன. இவை கிழக்குக் கடற்கரைச் சம-

வெளியிலும் கடற்கரையை அடுத்த இடங்களிலும், ஆறுகளையடுத்த மணற்பாங்கான இடங்களிலும் காணப்படுகின்றன.

அரும்பத உரை

மணற்பாங்கான - மணல் நிறைந்த பகுதியாக விளங்கும்; பருத்து - பெருத்து; வாரை - உத்திரம்; வேய்தல் - பரப்புதல்; திருமணம் - கலியாணம்.

பயிற்சி

1. விடை எழுது :

1. தென்னை எங்குச் செழித்து வளரும்?

2. தென்னை ஓலைகள் நமக்கு எவ்வாறு பயன்படுகின்றன?

3. தென்னை ஓலைகளைக் கொண்டு நடைபெறும் தொழில் யாது?

4. தேங்காய்கள் மக்களுக்கு எவ்வாறு உதவுகின்றன?

5. தேங்காய் நெய்யின் பயன் யாது?

6. கயிறு பின்னும் தொழில் எங்கு, எவ்வாறு நடைபெறுகிறது?

7. நம் நாட்டில் எங்குத் தென்னை மரங்கள் மிகுதியாக உள்ளன?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

பயன்படும், பருத்து, சிறுத்து, முற்றிய, மிகுதியாக.

3. எதிர்ப்பதங்கள் எழுது :

உயரமாக, பருத்து, முற்றிய, பெருங்கயிறு, முதலில், மிகுதியாக.

4. ஒவ்வொரு வாக்கியத்தையும் கீழே குறிப்பிட்டுள்ள-வாறு பிரித்து, இரண்டு இரண்டு வாக்கியங்கள் ஆக்கு :

உதாரணம் :—தென்னை மரத்தின் அடி பருத்தும், நுனிசிறுத்தும் இருக்கும்.

1. தென்னை மரத்தின் அடி பருத்திருக்கும்.
2. அதன் நுனி சிறுத்து இருக்கும்.

பிரிக்க வேண்டிய வாக்கியங்கள் :

1. தென்னை மரத்தின் அடி மரத்தை மக்கள் வாரைகளாக அறுத்து, வீடு கட்டப் பயன்படுத்துகின்றனர்.

2. திருமணக் காலத்திலும், திருவிழா நாட்களிலும் கீற்றுக்களைக்கொண்டு பந்தல்கள் போடப்படுகின்றன.

3. பெரிய கயிறுகள் கிணற்றில் இருந்து நீர் இழுக்கவும், கப்பல்களில் கொடி மரங்கள் முதலியவை கட்டவும் பயன்படுகின்றன.

இலக்கணம்

சொல்

ஈ பறந்தது.
தை பிறந்தது.
கை முறிந்தது.
கிளை ஒடிந்தது.
குதிரை ஓடிற்று.—இவ்வாக்கியங்களில் உள்ள ஈ, தை, கை என்பன ஓர் எழுத்தாக இருப்பினும், ஒவ்வொன்றும் ஒரு பொருளைக் குறிக்கின்றது. கிளை, குதிரை என்பனவும் அவ்வாறே பொருளைக் குறிக்கின்றன. இவ்வாறு ஓர் எழுத்தோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல எழுத்துக்களோ சேர்ந்து ஒரு பொருளைத் தெரி-விப்பது சொல் ஆகும்.

பமட, சபதக—இவ்வாறு பல எழுத்துக்கள் சேர்ந்-தும் ஒரு பொருளைத் தராவிட்டால் அது சொல் ஆகாது.

9. தென்னை மரம்

தென்னை மரமே! தென்னை மரமே!
ஏன் வளர்ந்தாய், தென்னை மரமே!
நான் வளர்ந்த காரியத்தை
நாட்டாரே சொல்லுகிறேன்: 1

நல்லதற்கும் பொல்லதற்கும்
நான்ஓலை கொடுத்திடுவேன்;
மங்கலங்கள் தொடங்குதற்கு
வளர்தேங்காய் ஈந்திடுவேன்; 2

இளைத்துவந்த பேர்களுக்கு
இனியநிழல் நான் தருவேன்;
களைத்துவந்த பேர்களுக்குக்
கருதிளநீர் உதவிடுவேன்; 3

பந்தலிடக் கீற்றுவேன்;
பசுக்கட்டக் கயிறுவேன்;
சொந்தமுடன் அடுப்பெரிக்கச்
சோற்றுடலை யளித்திடுவேன்; 4

பிறர்செய்த நன்றிதனைப்
பெரிதாகக் கருதிடுவேன்;
பிறர்க்குதவி செய்வதையே
பெருந்தொழிலாய்க் கொண்டிடுவேன்; 5

என்னைப்போல் நல்லவர்கள்
இப்புவியில் உண்டானால்
பொன்னைப்போல் போற்றிமிகப்
புகழ்ந்திடுவீர் நாட்டாரே. 6

—பழம்பாட்டு

அரும்பத உரை

1. நாட்டார் - நாட்டில் உள்ள மக்கள்.

2. பொல்லது - துக்க நிகழ்ச்சி ; மங்கலம் - இனிய நிகழ்ச்சி ; ஈந்திடுவேன் - கொடுப்பேன்.

6. புவி - பூமி ; போற்றி - பாதுகாத்து.

பயிற்சி

1. விடை எழுது :

1. மக்களுக்குத் தென்னை எவ்வாறு பயன்படுகிறது?

2. அது கொண்டிருக்கும் பெருந் தொழில் யாது ?

3. தென்னை, நாட்டு மக்களிடம் வேண்டிக் கொள்வது யாது ?

2. பிரித்து எழுது :

கருதிளநீர், அடுப்பெரிக்க, சோற்றுடல், பெருந்தொழில், இப்புவி.



10. திரு. வி. கலியாண சுந்தரனர்

1. தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் இருந்து பல அறிஞர்கள் தோன்றித் தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் சிறப்பித்து வந்திருக்கின்றனர்கள். அவர்களுடைய அரிய முயற்சியினல் தமிழன்னை பெருமைபெற்று விளங்குகிருள். அத்தகைய அறிஞர்களில் ஒருவர் **திரு. வி. கலியாணசுந்தரனர்** ஆவர். அவரை மக்கள் **திரு. வி. க.** என்னும் மூன்று எழுத்துக்களினலேயே அருமையாகக் குறிப்பிடுகிருர்கள். தமிழின் மேன்மைக்காகத் தளராது உழைத்த திரு. வி. க. அவர்களைப்பற்றி அறியாத தமிழ் மக்களே இல்லையென்று கூறலாம்.

2. இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள

துள்ளம் என்னும் சிற்றூரில் 1883-ல் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் **விருத்தாசல முதலியார்**; தாயார் பெயர் **சின்னம்மையார்**. இவருடன் பிறந்தவர்களில் பெண்மக்கள் நால்வர்; ஆண்மக்கள் மூவர். இவருடைய முன்னோர்கள் திருவாரூரைச் சேர்ந்தவர்கள். ஆகையால் இவர் தம்முடைய பெயருக்கு முன்பு திரு என்னும் அடைமொழியைச் சேர்த்துக்கொண்டார்.

3. திரு. வி. க. இளம்பருவத்தில் தம்முடைய தந்தையாரிடமே தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்றுக்கொண்டு வந்தார்; பிறகு சென்னையைச் சேர்ந்த இராயப்பேட்டையில் உள்ள **வெஸ்லியன் பள்ளி**யில் சேர்க்கப்பட்டார். அங்கு இவர் ஐந்தாம் வகுப்பு வரை நன்ருகப் படித்துவந்தார்; வகுப்பில் உள்ள மற்றைய மாணவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றுவந்தார். அதன் பின்பு இவர் முடக்குவாத நோயினால் துன்புற்றுப் படுக்கையில் கிடந்தார். இக்காரணத்தினால் இவர் நான்கு ஆண்டுகள் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல இயலாமல் போய்விட்டது. எனவே வீட்டில் தங்கி இருந்த கலியாணசுந்தரனார் சிலம்பப் பயிற்சி, மாட்டுப் பந்தயம், குதிரைப் பந்தயம் முதலிய விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் காலங்கழித்தார்.

4. கி. பி. 1898-ஆம் ஆண்டில் திரு. வி. க. மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இவர் ஆறு ஆண்டுகள் வரை எவ்வித வெளி விவகாரங்களிலும் ஈடுபடாது, கல்வியில் கவனத்தைச் செலுத்தினார். மேலும் ஞாயிற்றுக்கிழமை தோறும் கிறித்தவப் பாதிரிமார் நடத்திவந்த மதபோதனை வகுப்புக்களுக்குச் சென்று, அவர்களுடைய வேதநூலான

விவிலிய நூலைக் கற்ருர். கலியாணசுந்தரனுர் மெற்றிக்குலேஷன் வகுப்பு வரை பயின்ருர். ஆனுல் அத்தேர்வில் அவர் கலந்துகொள்ளாமலே, தம்முடைய படிப்பை முடித்துக் கொண்டார்.

5. கலியாணசுந்தரனுர் யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளையிடம் தமிழைப் பயின்ருர். திருமயிலைத் தணிகாசல முதலியாரிடம் சைவ-சிந்தாந்த நூல்களைக் கற்றுக்கொண்டார். இவ்வாறு இவர் கல்வியில் கருத்து உடையவராய், ஆசிரியர் பலரிடம் சென்று பாடங்கேட்டுச் சிறந்த அறிவைப் பெற்ருர்.

6. பிறகு திரு. வி. க. வெஸ்லியன் பள்ளியில் தமிழ் ஆசிரியராக அமர்ந்தார். அப்பள்ளியில் ஆறு ஆண்டுகள் கலியாணசுந்தரனுர் வேலை பார்த்துவந்தார். அக்காலத்தில் இவர் சாதி, மத வேறுபாடுகளையும், மக்களிடையே காணப்படும் மூடப் பழக்கவழக்கங்களையும் வெறுத்தார்; அவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும் என்று அடிக்கடி கூறிவந்தார். அந்நிலையில் இவர் இராயப்பேட்டையில் இருந்த வெஸ்லியன் கல்-லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்றுக்-கொண்டார். அக்கல்லூரியில் ஒன்றரை ஆண்டு-களே பணிபுரிந்தார். பிறகு அவ்வேலையினின்று விலகினுர்.

7. அதுவரை அரசியலில் ஈடுபடாது இருந்த திரு. வி. க. அதன் பின்னர், நாட்டுப் பணியில் தமது நாட்டத்தைச் செலுத்தினுர்; தேசபக்தன் என்னும் செய்தித் தாளின் ஆசிரியராய் அமர்ந்-தார்; அச்செய்தித் தாளின் மூலம் மக்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தார்; பிறகு சாது அச்சுக்-

கூடத்தை நிறுவினர்; நவசக்தி என்னும் பெயரால் வார இதழ் ஒன்றை வெளியிட்டு வந்தார்.

8. திரு. வி. க. சிறந்த எழுத்தாளர்; தலைசிறந்த பேச்சாளர். இவர் சிறந்த தமிழ் அறிஞராக மட்டும் அல்லாமல் தொழிலாளர் தலைவராகவும் இருந்தார்; தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். இவர் பல அருமையான உரைநடை நூல்களையும், எளிய நடையில் அமைந்த செய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார். இவருடைய ஒவ்வொரு நூலும், படிப்பவருடைய உள்ளத்தைக் கவர்ந்துவிடும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

9. இப்பெரியார் 1953-ஆம் ஆண்டில் காலமானார். கலியாணசுந்தரனாருடைய பொய்யுடல் அழிந்துவிட்டது. ஆனால் அவருடைய புகழ் உடம்பு என்றும் அழியாது.

அரும்பத உரை

தமிழன்னை - தமிழ்த்தாய்; தொண்டு - பணி, வேலை; முடக்குவாத நோய் - கை, கால்கள் செயலற்று முடங்கிப் போதல்; இயலாமல் - முடியாமல்; விவிலிய நூல் - பைபிள்; தேர்வு - பரீட்சை; நாட்டம் - கருத்து; நிறுவினர் - அமைத்தார்; நற்பணிகள் - நல்ல வேலைகள்; பொய்யுடல் - அழியும் உடம்பு; இயக்கம் - சங்கம்; திண்ணம் - உறுதி.

பயிற்சி

1. விடை எழுது:

1. திரு. வி. கலியாணசுந்தரனார் எங்குப் பிறந்தார்?
2. திரு. வி. க. வின் பெற்றோர் யாவர்?

3. இவர் எவ்வாறு கல்வி பயின்றார்?

4. இவர் எங்கெங்கு என்னென்ன வேலைகள் பார்த்-தார்?

5. திரு. வி. க. நடத்தி வந்த செய்தித் தாள்கள் எவை?

6. கலியாணசுந்தரனார் தொழிலாளர் நலனுக்கு எவ்வாறு பாடுபட்டார்?

7. இவருடைய அரும் பண்புகள் யாவை?

2. வாக்கியங்களில் அமைத்துஎழுது :

அடைமொழி, ஈடுபட்டு, தேர்வு, வேற்றுபாடு, கவர்ந்-தார், திண்ணம்.

3. எதிர்ப் பதங்கள் எழுது :

அறியாத, பலர், மறுக்க முடியாத, பொய்யுடல், எளிய நடை.

இலக்கணம்

பெயர்ச்சொல்

கந்தன், பெண், யானை, கிளி, மரங்கள்—இவ்-வாறு பொருள்களின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல் எனப்படும்.

குறிப்பு: இலக்கணத்தில் மனிதரையும் பொருள் என்று சொல்வது வழக்கம்.

இப்பாடத்தின் முதல் இரு பத்திகளிலும் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.

11. கிராமமும் நகரமும்

(உரையாடல்)

[பொன்முடியும், புகழேந்தியும் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூரைச் சேர்ந்தவர்கள். பொன்முடியின் தகப்பனார் பெருஞ் செல்வம் படைத்தவர். அவர் தம்முடைய மைந்தனைச் சென்னையில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்த்துப் படிக்க வைத்தார். புகழேந்தி ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். அவன் தன் கிராமப் பள்ளிக்கூடத்திலேயே படித்து வந்தான். பொங்கல் விடுமுறையின்போது கிராமத்திற்கு வந்த பொன்முடியைப் புகழேந்தி கண்டு உரையாடுகிறான்.]

புகழேந்தி : பொன்முடி, எப்பொழுது சென்னையிலிருந்து வந்தாய்? உனக்கு எத்தனை நாட்களுக்கு விடுமுறை விடப்பட்டிருக்கிறது?

பொன்முடி : நண்பா, நேற்று மாலைதான் சென்னையிலிருந்து வந்தேன். என் பள்ளியில் பத்து நாட்கள் விடுமுறை விட்டிருக்கிறார்கள். எனக்கு என்னவோ இங்கு இருக்கவே பிடிக்கவில்லை. நாளைக்கே சென்னைக்குப் போகலாம் என்று நினைத்திருக்கிறேன்.

புகழேந்தி : (வியப்புடன்) ஏன்? இங்கு இருக்க உனக்குப் பிடிக்கவில்லையா?

பொன்முடி : (வெறுப்புடன்) ஆம். எனக்கு இந்தப் பட்டிக்காட்டில் இருக்க விருப்பம் இல்லை. நகர வாழ்க்கையில் உள்ள இன்பங்களை எண்ணும் போது இந்தக் கிராம வாழ்க்கை எளிய வாழ்க்கையாகத்தான் இருக்கிறது.

புகழேந்தி : (வருத்தத்துடன்) அப்படிக் கூருதே, பொன்முடி. கிராமந்தான் நம்முடைய நாட்டின் உயிர்நாடி. கிராமங்கள் இல்லாவிடில் நகரங்கள் எவ்வாறு சிறப்பு அடைய முடியும்? நம்முடைய முன்னேர்கள் நகரங்களிலா வசித்தார்கள்? இல்லேயே. கிராமத்தில் வாழும் மக்கள் நல்ல உடல் வலிமையுடன், நோயற்ற வாழ்வு வாழ்வதற்குக் காரணம் என்ன? மக்கள் நோயின்றி வாழ்வதற்குத் தூய்மையான காற்றும், நல்ல உணவும் வேண்டும் என்பது உனக்குத் தெரியும் அல்லவா? நகரங்களில் தூய்மையான காற்று எங்கிருந்து கிடைக்கிறது? எங்குச் சென்ருலும் தூசும், புகையும் கலந்த காற்றைத் தானே மக்கள் சுவாசிக்க வேண்டியிருக்கிறது. கிராமங்களில் எப்பொழுதும் பசுமையான காய்கறிகள் மலிவாகக் கிடைக்கின்றன. நகரங்களில் அப்படிக் கிடைக்குமா? மேலும் கிராம மக்கள் நன்ருக உழைக்கிருர்கள்; எங்குச் சென்ருலும் நடந்தே செல்கிருர்கள். அதனுல்தான் அவர்கள் நோயற்ற வாழ்வு வாழ முடிகிறது. ஆனுல் நகரவாசிகளின் நிலேயைக் கவனி. கால் மைல் தொலேவு செல்ல வேண்டுமானுலும், ஏதேனும் வண்டியைத் தேடுகிருர்கள். இதனுல் ஏற்படும் காலதாமதம், பணச்செலவு, உடலில் உரம் இன்றி மெலிதல் ஆகியவற்றை அவர்கள் சிந்திப்பதே இல்லே. காற்ருேட்டம் இல்லாத வீடுகளில், பல குடும்பங்களுக்கு இடையில் வசிக்கிருர்கள்; நல்ல உணவுப்பொருள்களேப் பெற முடியாமல் திண்டாடுகிருர்கள். கிராமங்களிலிருந்து உணவுப் பொருள்களும், மற்றைய தேவைப் பொருள்களும்

நகரங்களுக்குச் செல்லாவிடில் அங்குள்ள மக்கள் எவ்வாறு வாழமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார். உழைத்து உழைத்து உடல் உரம் பெற்ற கிராம மக்கள் உழுது பயிரிட்டு உணவுப் பொருள்களை விளைவிக்காவிட்டால் நகர மக்கள் களிப்போடு வாழமுடியுமா? பொன்முடி, நகரம் உயர்ந்ததா? கிராமம் உயர்ந்ததா? என்பதை இப்பொழுதாவது உணர்ந்து கொள்.

பொன்முடி: புகழேந்தி, கிராம வாழ்க்கையின் நன்மைகளைப் பற்றி நீ கூறியவை உண்மையே. ஆயினும் நீ கிராமங்களில் உள்ள குறைபாடுகளைக் கூற மறந்துவிட்டாய்? கிராமத்தில் உள்ள தெருக்களையும், வீடுகளையும் பார். அவை எவ்வாறு இருக்கின்றன என்பதைக் கவனி. எங்குப் பார்த்தாலும் குடிசைகள்! மேடும் பள்ளமும் பொருந்தி, ஒழுங்கற்று விளங்கும் தெருக்கள்! எங்குப் பார்த்தாலும், குப்பை மேடுகளும், சாக்கடைக் குழிகளும்! கிராமத்தில் நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்ய வசதியுண்டா என்பதைச் சிந்தித்துப் பார். மக்களுடைய அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும் உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் கிராமத்தில் உண்டா? இப்படிப்பட்ட வசதியற்ற கிராம வாழ்க்கை தான் மேலானது என்பது உன்னுடைய எண்ணமா? நாகரிக முறையில் வாழ்வதற்கு நகர வாழ்க்கையே ஏற்றது. நகரங்களில் வீதிகள் எவ்வளவு அழகாகக் காட்சி அளிக்கின்றன. இரவில் எந்த நேரத்திலும், ஒளி விளக்குகள் நகர வீதிகளை அலங்கரிக்கின்றன! எத்தனை மருத்துவச் சாலைகளும், பள்ளிக் கூடங்களும், நூல் நிலையங்களும், படிப்-

பகங்களும் நகரத்தில் உள்ளன. மக்களின் சுக வாழ்க்கைக்கு ஏற்ற எல்லாப் பொருள்களும் நகரங்களில் கிடைக்கின்றன. சோர்வு அடைந்த மக்களுக்குக் களிப்பை உண்டாக்கும் திரைப்படக் காட்சிக் கொட்டகைகளும், வானொலி நிலையங்-களும், நகரங்களில் காணப்படுகின்றனவே! இவை கிராமங்களில் உள்ளனவோ? நண்பா, இவ்வாறு நகரத்தின் நன்மைகளைப் பற்றி நாள் முழுதும் கூறிக் கொண்டிருக்கலாம். கிராம வாழ்க்கையை விட நகர வாழ்க்கையே மேலானது, என்பது என்னுடைய கருத்து.

[அச் சமயத்தில் அவ்வூரில் உள்ள பள்ளிக்கூடத்-தின் தலைமை ஆசிரியர் அவ்வழியே வருகிறார். அவரைப் பொன்முடியும், புகழேந்தியும் வணங்குகிறார்கள்.]

ஆசிரியர்: பொன்முடி, புகழேந்தியுடன் எதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறாய்?

பொன்முடி: ஐயா, கிராமமே மேலானது என்கிறான் புகழேந்தி. நான் நகரமே சிறந்தது என்று கூறுகிறேன். அது பற்றி எங்களுக்கு இடையே எவ்வித முடிவும் ஏற்படவில்லை. தாங்கள்-தான் அதனைப்பற்றி முடிவு கூற வேண்டும்.

ஆசிரியர்: (நகைத்துக் கொண்டு, இருவரையும் நோக்கி) குழந்தைகளே, கிராமம், நகரம் என்னும் இவ்விரண்டில் எது உயர்ந்தது என்று விவாதிப்பது பொருத்தமானது அன்று. அவை இரண்டும் ஒன்றினோடு ஒன்று தொடர்பு உடையவை. கிராம வாழ்க்கையிலும் பல நன்மைகள் உண்டு. அவ்வாறே நகர வாழ்க்கையிலும் பல நன்மைகள் உண்டு. கிராம மக்கள் நன்றாக உழைத்துத் தொழில் செய்தால்தான் நகரங்கள்

வாழ முடியும். அவ்வாறே நகரமக்கள் கிராம மக்களின் தொழிலினால் உண்டாகும் பொருள்களை வாங்கி, ஆதரித்தால்தான் கிராமங்கள் சிறப்பு அடையும். நகரம், கிராமம் என்னும் இரண்டும் ஒரு நாட்டின் இரு கண்கள். ஆகையால் நாம் இவ்விரண்டினுள் எதனையும் அலட்சியம் செய்தல் கூடாது.

இருவரும்: ஐயா, நாங்கள் உண்மையை உணர்ந்து கொண்டோம். கிராமம், நகரம் என்ற வேறுபாட்டை மறந்து, நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம்.

ஆசிரியர்: சரி. மிகுந்த மகிழ்ச்சி. சென்று வருகிறேன்.

இருவரும்: நல்லது, வணக்கம். ஐயா, சென்று வாருங்கள்.

அரும்பத உரை

பட்டிக்காடு - சிற்றூர்; எண்ணும் போது - நினைக்கும் போது; நோய் அற்ற - நோய் இல்லாத; தூய்மையான - சுத்தமான; நகரவாசி - நகரத்தில் வசிப்பவர்கள்; உரம் - வலிமை; களிப்பு - மகிழ்ச்சி; சிகிச்சை செய்தல் - வைத்தியம் செய்தல்; படிப்பகம் - வாசக சாலை; வானொலி - ரேடியோ; மேலானது - சிறந்தது; விவாதித்தல் - வாதம் செய்தல்; போக்க - நீக்குவதற்கு.

பயிற்சி

1. விடை எழுது:

1. கிராம வாழ்க்கையில் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. அதில் உள்ள தீமைகள் யாவை?

3. நகர வாழ்க்கையில் உள்ள நன்மைகளை எழுது.

4. அவ் வாழ்க்கையில் உள்ள தீமைகள் யாவை?

5. ஆசிரியர் கூறிய முடிவு என்ன?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது:

இயற்கையொடு, சுவாசித்தல், நோயற்ற, சிகிச்சை, வசதி, தூய்மை, எத்துணை, ஆதரித்தல், முன்னேற்றம்.

3. எதிர்ப்பதங்கள் எழுது:

பசுமையான, நகரவாசிகள், உயர்ந்த்து, நாகரிகம், அலட்சியம், அறியாமை.

இலக்கணம்

இடுகுறிப் பெயர்—காரணப் பெயர்

மரம், கல், மண்—இப் பெயர்கள் எக்காரணம் பற்றி ஏற்பட்டன என்று அறிய முடியவில்லை. இவ்வாறு தொன்று தொட்டுக் காரணம் அறிய முடியாத நிலையில், இட்ட குறியாக வழங்கும் பெயர்கள் இடுகுறிப் பெயர்கள் ஆகும்.

வளையல், பறவை, காற்ருடி—இவை காரணம் பற்றி வழங்கும் பெயர்கள். எனவே காரணப் பெயர்கள் ஆகும்.



12. தெனுலிராமனும் திருடர்களும்

1. ஆந்திர நாட்டில் உள்ள தெனுலி என்னும் ஊரில் இராமன் என்ற பெயரினைக்கொண்ட ஒருவன் இருந்தான். அவன் அறிவு நுட்பம் அமையப் பெற்றவன் ; சாதுரியமாகப் பேசுவதில் நிபுணன். அவனுடைய சொல்லும், செயலும் பிறருக்கு நகைப்பை உண்டாக்கும். அவனை மக்கள் **தெனுலிராமன்** என்று அழைத்து வந்த-னர். அவன் விஜயநகர இராச்சியத்தின் மன்னராக விளங்கிய **கிருஷ்ணதேவ ராயரின்** சபையில் விகட கவியாக விளங்கினுன். மன்னரும், மற்றையோரும் இராமனின் சாதுரியமான பேச்சுக்களைக் கேட்டு மிகுதியும் மகிழ்ந்து வந்தனர். மன்னர் இராமனுக்குப் பல பரிசுகள் கொடுத்துச் சிறப்-பித்து வந்தார்.

2. இராமனுடைய புகழ் எங்கும் பரவியது. அவனுடைய செல்வமும் பெருகிக்கொண்டு

சென்றது. தெனாலிராமன் மன்னரால் சிறப்பிக்கப்பட்டுப் பெரும் பொருள் பெற்றுவருவதைத் திருடர் சிலர் அறிந்துகொண்டனர். தெனாலிராமனுடைய வீட்டின் பின்புறத்தில் ஒரு வாழைத் தோட்டம் இருந்தது. ஒரு நாள் இரவில் அந்தத் திருடர்கள் அத்தோட்டத்தினுள் புகுந்து ஒளிந்து கொண்டிருந்தார்கள். அன்றிரவில் கைகால்களைக் கழுவுவதற்காகத் தோட்டத்திற்குச் சென்ற தெனாலிராமன் அங்குத் திருடர் சிலர் ஒளிந்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டான். அவன் தன்னுடைய வீட்டில் திருடுவதற்காக வந்துள்ளவர்களே அவர்கள் என்பதை அறிந்துகொண்டான். ஆனாலும் அவன் அவர்களைக் கண்டு கொள்ளாதவன் போல வீட்டிற்குள் சென்று விட்டான்.

3. இராமன் உள்ளே சென்ற பிறகு, திருடர்கள் வீட்டினுள் என்ன நிகழ்கிறது என்பதை அறிய விரும்பினார்கள். அவர்கள் அந்த வீட்டின் சுவர் ஓரமாக வந்து நின்றுகொண்டு, இராமனும் அவன் மனைவியும் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். திருடர்களைப் பார்த்துவிட்டு வீட்டினுள் நுழைந்த இராமன் அச்செய்தியைத் தன் மனைவியிடம் மெதுவாகக் கூறினான். பிறகு அவன் உரத்த குரலில், “ அடியே, நம் ஊரில் இப்பொழுது திருடர் பயம் அதிகமாக இருக்கிறது. நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் முதலிய விலை உயர்ந்த சாமான்கள் எல்லாவற்றையும் ஒரு பெரிய பெட்டியில் போட்டுப் பூட்டி, நம் தோட்டத்தில் உள்ள கிணற்றில் போட்டு விடுவோம். திருடர் பயம் குறைந்த பிறகு எடுத்-

145942

துக்கொள்வோம்,'' என்று கூறினன். அவன் மனைவியும் அதற்கு உடன்பட்டவள் போலப் பேசினள்.

4. இராமன் உரக்கப் பேசிய சொற்கள் திருடர்களின் காதுகளில் விழுந்தன. பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். வீட்டினுள் நுழைந்து திருடவேண்டியதில்லை என்றும், கிணற்றில் இருந்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் நினைத்தார்கள். இராமன் ஒரு பெரிய பெட்டியில் வீட்டிலிருந்த அம்மி, குழவி போன்ற பொருள்களை வைத்தான். இடை இடையே அவன் தன் மனைவியை நோக்கி, ''அடியே! இந்த நகையை எடு. இந்தக் குடத்தைத் தூக்கு. அந்த வெள்ளிக் குத்து விளக்கைக் கொண்டுவா,'' என்று உரத்த குரலில் கூறிக்கொண்டிருந்தான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த திருடர்கள் களிப்படைந்தார்கள்.

5. பெட்டியை நிரப்பிய இராமன், அதைப் பூட்டினன். பிறகு இருவரும் அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்க் கிணற்றில் போட்டுவிட்டு, உள்ளே சென்றனர்கள்.

6. சிறிது நேரம் கழித்துத் திருடர்கள் கிணற்றின் அருகில் சென்று பார்த்தார்கள். கிணற்றில் நீர் நிறைந்திருந்தது. கிணற்றினுள் குதித்துக் கனமான பெட்டியைத் தூக்கிவர முடியாது என்று அவர்கள் எண்ணினர்கள். ஆகையால் பொழுது விடிவதற்குள் கிணற்று நீரின் பெரும் பகுதியை இறைத்துவிட்டுப் பெட்டியைச் சுலபமாக எடுத்துவிடலாம் என்று அத்திருடர்கள் நினைத்தார்கள். அக்கிணற்றில் இருந்த நீரை இறைக்கத் தொடங்கினர்கள்.

7. அப்பொழுது தெனாலிராமன் மண்வெட்டி ஒன்றை எடுத்துக்கொண்டு, தோட்டத்தினுள் புகுந்தான். எங்கும் இருள் சூழ்ந்து இருந்தமையால் திருடர்கள் தெனாலிராமனைக் காணமுடியவில்லை. அவன் கிணற்றில் இருந்து இறைக்கப்பட்ட தண்ணீரை, வாழை மரங்களுக்கும் மற்றச் செடி-களுக்கும் பாய்ச்சிக் கொண்டிருந்தான்.

8. தோட்டத்தில் உள்ள மரங்களுக்கு எல்-லாம் நீர் பாய்ந்துவிட்டது. இரவுப் பொழுதும் கொஞ்சம் கொஞ்சமாகக் கழிந்துகொண்டிருந்-தது. பொழுது புலரும் நேரம் நெருங்கியது. திருடர்கள் இவ்வளவு நேரம் பாடுபட்டும் பயன் இல்லாமல் போய்விடுமோ என்று எண்ணி அவசர அவசரமாகத் தண்ணீரை இறைத்துக்கொண்-டிருந்தார்கள். அப்பொழுது தெனாலிராமன் உரத்த குரலில், " நண்பர்களே, உங்களுடைய உதவிக்கு மிகவும் நன்றி. தோட்டம் முழுவதற்கும் நீர் பாய்ந்துவிட்டது. இறைத்தது போதும். நிறுத்தி-விடுங்கள்," என்று கூறினான்.

9. அதைக்கேட்ட திருடர்கள் திடுக்கிட்டு, ஓசை உண்டான இடத்தை உற்று நோக்கினார்கள். அங்குத் தெனாலிராமன் மண்வெட்டியும் கையுமாக நிற்பதைப் பார்த்துவிட்டு மனங்கலங்கி ஓட்டம் பிடித்தார்கள். இராமனின் கூரிய மதிநுட்பத்தி-னால் அவனுக்கு நேர இருந்த துன்பம் நீங்கிற்று.

அரும்பத உரை

ஆந்திர நாடு - தெலுங்கு மொழி பேசும் மக்கள் வாழும் நாடு; சாதித்தல் - நிறைவேற்றுதல்; சாதுரிய மான - சாமர்த்தியமான; உடன்பட்டாள் - சம்மதித்-

தாள் ; களிப்பு - மகிழ்ச்சி ; கனமான - பாரமான ; நிமிர்ந்து - தலைதூக்கிக்கொண்டு ; சுவையான - இனிமையான ;

பயிற்சி

1. விடை எழுது :

1. தெனாலிராமன் எங்கு வசித்து வந்தான் ?
2. அவனுடைய வீட்டில் திருடர்கள் ஏன் திருட நினைத்தார்கள் ?
3. திருடர்கள் தோட்டத்தில் ஒளிந்து கொண்டிருப்பதை அறிந்த இராமன் என்ன செய்தான் ?
4. அவன் தன் மனைவியிடம் கூறியது யாது ?
5. இராமன் திருடர்களை எவ்வாறு ஏமாற்றினான் ?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

இனிக்கஇனிக்க, ஓரமாக, உரக்க, மெதுவாக, ஒவ்வொன்றாக, அருகில், மதிநுட்பம், சுவையான.

3. இடஞ்சுட்டி எழுது :

1. நம் ஊரில் இப்போது திருடர் பயம் அதிகமாக இருக்கிறது.
2. உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி.

இலக்கணம்

பெயர்ச்சொல்—வகைகள்

(1) முருகன், கந்தன், நாற்காலி — இவை பொருள்களின் பெயர்கள்.

(2) சிதம்பரம், மதுரை, பள்ளிக்கூடம் — இவை இடங்களின் பெயர்கள்.

(3) மாதம், நாள், ஆண்டு — இவை காலத்தின் பெயர்கள்.

(4) இலை, கிளை, தலை — இவை சினை (உறுப்புக்) களின் பெயர்கள்.

(5) கருமை, நன்மை, தீமை — இவை பண்புகளின் (குணங்களின்) பெயர்கள்.

(6) ஆட்டம், ஓட்டம், பாடுதல் — இவை தொழில்களின் பெயர்கள்.

இவ்வாறு பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

13. விஞ்ஞானக் கலைஞர்

1. நாம் வாழும் இந்த உலகம் எத்தனையோ மாறுதல்களை அடைந்து கொண்டே வந்திருக்கின்றது. பண்டைக்காலத்து மக்களின் வாழ்க்கை முறைக்கும், இக்கால மக்களின் வாழ்க்கை முறைக்கும் வேறுபாடு காணப்படுகிறது. முற்காலத்து மக்கள் மோட்டார் வண்டிகள், இரயில் வண்டிகள், ஆகாய விமானங்கள் முதலிய போக்குவரவுச் சாதனங்களைப்பற்றி அறியாதவராகவே இருந்தார்கள். நாம் கண்டு மகிழும் படக்காட்சிகளும், கேட்டு மகிழும் வானொலியும் அவர்கள் அறியாத பொருள்கள். இவ்வாறு நாம் அடைந்துள்ள நன்மைகளும், பெற்றுள்ள விந்தைப் பொருள்களும் விஞ்ஞானக் கலையினால் விளைந்தனவேயாகும். உலகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நாடுகளில் பல விஞ்ஞானக் கலைஞர்கள் தோன்றி, இடைவிடாது முயன்று தம்முடைய அறிவு நுட்பத்தினால் பல புதுமைப் பொருள்களைக் கண்டு பிடித்தார்கள். அவர்கள் தாம் ஆராய்ந்து அறிந்து கண்டுபிடித்த பொருள்களை உலக மக்களுக்கு அளித்தார்கள். அவர்களுடைய அரிய முயற்சியின் விளைவாகவே இக்கால உலகம் பல துறைகளிலும் சிறந்து விளங்குகிறது. இவ்வாறு உலக நன்மைக்குப் பாடுபட்ட விஞ்ஞானக் கலைஞர்களுள் இருவரது வரலாற்றைச் சுருக்கமாகப் படிப்போம் :

2. **தாமஸ் ஆல்வா எடிசன்** என்ற அறிஞர் அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்தவர். அவர் அந்த நாட்டில் உள்ள ஒஹியோ மாகாணத்தைச் சேர்ந்த **மிலன்** என்னும் ஊரில் 1847-ஆம்

ஆண்டில் பிறந்தார். அவர் மிகவும் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆகையால் பள்ளியில் சேர்ந்து கல்வி பயிலும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் வீட்டில் தமது தாயாரிடம் படிக்கக் கற்றுக்கொண்டு, பல புத்தகங்களை



தாமஸ் ஆல்வா எடிசன்

வாங்கித் தாமாகவே படித்து வந்தார். குடும்பத்தின் வறுமை காரணமாக எடிசன் புகைவண்டிகளில் பத்திரிகை விற்கும் தொழிலை மேற்கொண்டார். எடிசனுக்கு மின்சார ஆராய்ச்சியில் விருப்பம் அதிகம். அவர் தாம் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த புகைவண்டியிலேயே ஓரிடத்தில்

ஓய்வு நேரங்களில் ஆராய்ச்சி செய்து வந்தார். ஒரு முறை எடிசன் தம்முடைய அறையில் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தபோது, வண்டியில் தீப்பிடித்துக்கொண்டது. அந்நிகழ்ச்சியை அவ்வண்டியின் கார்டு அறிந்து கோபங்கொண்டு, எடிசனை அறைந்ததால், அவருடைய காது செவிடாகி விட்டது. அத்துடன் அவர் வேலையும் போயிற்று.

3. அதன் பின்னர் எடிசன் தந்தியடிக்கும் வேலையில் அமர்ந்தார். அதில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பேசும் கருவியில் பல புதுமைகளைச் செய்தார்; ஒலிப்பெருக்கியைக் கண்டுபிடித்தார்; 1887-ம் ஆண்டில் **கிராமபோனைக்** கண்டுபிடித்தார். அவர் தமது ஆராய்ச்சியின் பயனுகக் கண்டுபிடித்த புதுமைப் பொருள்களைச் செய்யும் பெரிய தொழிற்சாலையை நிறுவினர்; **சினிமா** என்னும் படக்காட்சியும் அவரால்தான் கண்டுபிடிக்கப்பட்டது. எடிசனுல் மேலும் நூற்றுக்கணக்கான புதுமைப் பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டன. வாழ்நாள் முழுதும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அரிய பொருள்கள் பலவற்றைக் கண்டுபிடித்த எடிசன் தமது எண்பதாம் வயதில் காலமானுர்.

4. இக்காலப் புதுமைப் பொருள்களில் சிறந்து விளங்குவது **ரேடியோ** எனப்படும் வானெலியாகும். இதனைக் கண்டுபிடித்தவர் **மார்க்கோனி** என்பவர். அவர் 1875-ஆம் ஆண்டில் இத்தாலி நாட்டில் பிறந்தவர். மார்க்கோனி இளைஞராக இருந்தபோதே எப்பொருளையும் கூர்ந்து நோக்கி ஆராயும் தன்மையைப் பெற்றிருந்-

தார். எடிசனைப் போலவே மார்க்கோனியும் மின்சாரத்தை அலைகளாக மாற்றி, காற்றில் கலந்துள்ள ஈதர் என்னும் பொருளின்மூலம் உலகு எங்கும் பரவச் செய்யலாம் என்ற உண்மையை ஆராய்ந்து அறிந்தார். அதன்மூலம் கம்பி



மார்க்கோனி

யில்லாமலே செய்தி அனுப்ப முடியும் என்று அவர் நம்பினர். அவருடைய கருத்தை இத்தாலி நாட்டினர் ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே அவர் இங்கிலாந்துக்குச் சென்று தம்முடைய ஆராய்ச்சியை விளக்கினர். அதன் பிறகு அமெரிக்கா

சென்று இடைவிடாது முயன்று இறுதியில் தம் முயற்சியில் வெற்றி பெற்ருர். அருமையான புதுமைப் பொருளைக் கண்டுபிடித்த மார்க்-கோனியை யாவரும் புகழ்ந்தனர்.

5. அவருடைய ஆராய்ச்சியின் பயனுகவே வானெலி தோன்றியது. அதனுல் ஏற்படும் நன்மைகள் பலவாகும். வானவெளியில் பறக்கும் விமானங்களுக்கும், அலைகடல் நடுவே செல்லும் கப்பல்களுக்கும் ஏற்படும் இன்னல்களை உடனே உலகிற்கு அறிவித்து, உதவி பெறுவதற்குத் துணை செய்கிறது. கல்வியை வளர்க்கும் சாதனமாகவும், பொழுதுபோக்குச் சாதனமாகவும் இது விளங்கு-கிறது. உலக நிகழ்ச்சிகளையும் கால நிலைகளையும் இது அறிவிக்கின்றது. வானெலியைக் கண்டு பிடித்து வான் புகழ்பெற்ற மார்க்கோனி 1937-ஆம் ஆண்டில் காலமானுர்.

அரும்பத உரை

கூர்ந்து நோக்கி - நுட்பமாகப் பார்த்து ; இன்னல் துன்பம் ; வான்புகழ் - உயர்ந்த புகழ்.

பயிற்சி

1. விடை எழுது :

1. விஞ்ஞானத்தால் விளைந்த பயன்கள் யாவை ?
2. எடிசன் எங்குப் பிறந்தார்? அவருடைய தொழில் யாது ?
3. எடிசன் கண்டுபிடித்த பொருள்கள் யாவை ?
4. மார்க்கோனி எங்குப் பிறந்தார் ?
5. அவர் எதைப் பற்றி ஆராய்ந்தார் ?
6. அவருடைய ஆராய்ச்சியினுல் ஏற்பட்ட பயன் என்ன ?
7. வானெலியினுல் ஏற்படும் நன்மைகள் யாவை ?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

சுருக்கமாக, ஓய்வு நேரம், நூற்றுக் கணக்கான, கூர்ந்து.

3. எதிர்ப் பதங்கள் எழுது :

சுருக்கமாக, இளைஞர், புகழ்ந்தனர், பெருமை, இருள், அரிய, பொதுநலம்.

இலக்கணம்

இப்பாடத்தின் முதல் நான்கு பத்திகளிலும் உள்ள அறுவகைப் பெயர்களையும் எடுத்து எழுது.

வேற்றுமை

1. மார்கோனி வந்தான்.
2. மார்க்கோனியை மக்கள் கண்டனர்—முதல் வாக்கியத்தில் மார்க்கோனி என்னும் பெயர்ச்சொல் எழுவாயாக இருக்கிறது. இரண்டாவது வாக்கியத்தில் அச்சொல்லின் பொருள் வேறுபாடு அடைந்துள்ளது. இவ்வாறு பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை யாகும். பொருளை வேறுபடுத்துவதற்காக வரும் சொற்கள் உருபு எனப்படும்.

வேற்றுமை எட்டு வகைப்படும். முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை. எவ்வித வேறுபாடும் அடையாமல் இயற்கையாக இருக்கும் பெயர்ச்சொல் முதல் வேற்றுமையாகும்.

(உ - ம்.) எடிசன் சென்றார்.
மார்க்கோனி அறிவில் சிறந்தவர்.

இவற்றில் உள்ள பெயர்ச்சொற்கள் முதல் வேற்றுமைகள்.

14. ஆமையும் நாரையும்

குறிப்பு: படத்தைப் பார்த்துக் கதை சொல்லல்.



15. சர்க்கரை

1. சர்க்கரை ஒரு இனிப்பான பொருள். நாம் அதனை உணவுப் பொருள்களுடன் கலந்து உண்ணுகிறோம். இனிப்புத் தின்பண்டங்கள் செய்வதற்குச் சர்க்கரையைப் பயன்படுத்து-கிறோம். காப்பி, தேயிலை முதலிய பானங்களுடன் அதனைக் கலந்து பருகுகிறோம்.

2. சர்க்கரை கருப்பஞ்சாற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது. நமது நாட்டில் பல இடங்களில் கரும்புத் தோட்டங்கள் உள்ளன. அத்தோட்டங்களில் உள்ள நன்றாக முற்றிய கரும்புகள் வெட்டப்படுகின்றன. அவை அருகில் உள்ள ஆலைக்குக் கொண்டு போகப்படுகின்றன. அங்கே கரும்புகள் சிறு சிறு துண்டுகளாக நறுக்-கப்படுகின்றன. பின்பு அத்துண்டுகளைச் சாறு எடுக்கும் ஆலையில் இட்டு மக்கள் ஆட்டுவார்கள். அந்த ஆலையில் மூன்று உருளைகள் இருக்கும்.

அந்த உருளைகள் மாடுகளைக் கொண்டு சுழற்றப்படுகின்றன. சுழன்று கொண்டிருக்கும் உருளைகளுக்கு இடையே கரும்பைக் கொடுத்தால், அக்கரும்பில் இருந்து சாறு வடிந்து, கீழே வைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் நிறையும்.

3. பிறகு அந்தச் சாற்றைப் பெரிய பாத்திரங்களில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். நன்ருகக் காய்ந்து கொண்டிருக்கும் கருப்பஞ் சாற்றில் சிறிது சுண்ணும்பைச் சேர்ப்பார்கள்:. அது சாற்றில் உள்ள அழுக்குகளைத் திரட்டிக் • கொண்டு வரும். அந்த அழுக்கை எடுத்துவிடுவார்கள். சாறு நன்ருகக் காய்ந்து, இறுதியில் பாகு ஆகும். அந்தப் பாகு நன்ருக ஆறிய பிறகு சர்க்கரை யாகும். அது பழுப்பு நிறத்தைப் பெற்றிருக்கும். அதனைப் பிறகு வெந்நீரில் கரைத்து வடிகட்டுவார்கள். வடிகட்டிய சர்க்கரைக் கரைசலை எலும்பு சுட்ட கரியின்மீது விடுவார்கள். அப்பொழுது சர்க்கரையில் உள்ள அழுக்கு, கரியில் தங்கிவிடுவதால், சர்க்கரைக் கரைசல் வெண்மை நிறத்தைப் பெற்றிருக்கும். அதனைக் காய்ச்சி ஆறவைத்தால் வெள்ளைச் சர்க்கரை கிடைக்கும். வெள்ளைச் சர்க்கரையைக் காய்ச்சிப் பாகாக மாற்றினல் கற்கண்டு கிடைக்கும். இவ்வாறு சர்க்கரை உண்டாக்கும் தொழில் சிறு கைத்தொழிலாகப் பல இடங்களில் நடைபெறுகிறது.

4. நம் நாட்டில் சில இடங்களில் மிகுந்த அளவில் சர்க்கரை தயாரிக்கின்ற பெரிய இயந்திர ஆலைகள் உள்ளன. அந்த ஆலைகளில் கரும்புகள் நறுக்குதல், கருப்பஞ்சாறு பிழிதல், சாற்றைக் காய்ச்சுதல் முதலிய எல்லா வேலைகளையும் இயந்-

திரங்களின் உதவியால் செய்கிருர்கள். நமது சென்னை இராச்சியத்தில் நெல்லிக்குப்பம் என்னும் இடத்தில் **பாரி கம்பெனி சர்க்கரை ஆலை** இருக்கிறது. அங்குச் சர்க்கரை மிகுதியாகத் தயாரிக்கப்படுகிறது. சர்க்கரையைக் கொண்டு பலவகையான மிட்டாய்களும் அங்குச் செய்யப்படுகின்றன. நம் நாட்டின் சில இடங்களில் பனஞ்சாற்றிலிருந்தும் சர்க்கரை செய்யப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளவர்கள் பனஞ்சாற்றைக் காய்ச்சி வெல்லமும், கற்கண்டும் தயாரிக்கிருர்கள். ஐரோப்பாக் கண்டத்தில் **'பீட்ரூட்'** என்னும் ஒருவகைக் கிழங்கிலிருந்தும் சர்க்கரை செய்யப்படுகிறது.

அரும்பத உரை

பருகுகிருேம் - குடிக்கிருேம்; கரைசல் - கரைந்துள்ள நீர்; ஆலை - கரும்புகளிலிருந்து, சாறு பிழிவதற்குப் பயன்படும் கருவி; திரட்டிக்கொண்டு - சேர்த்துக் கொண்டு.

பயிற்சி

1. விடை எழுது:

1. சர்க்கரை நமக்கு எவ்வாறு பயன்படுகிறது?
2. சர்க்கரை எவ்வாறு செய்யப்படுகின்றது?
3. கற்கண்டு எவ்வாறு செய்யப்படுகிறது?
4. நம் இராச்சியத்திலுள்ள பெரிய கரும்பு ஆலை எது?
5. சர்க்கரை எந்த எந்தப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது:

இனிப்பான, திரட்டிக்கொண்டு, தயாரித்தல், இறுதியில், முற்றிய, சில இடங்களில்.

3. எதிர்ப்பதங்கள் எழுது :

இனிப்பான, காய்ந்து, நிறையும், முற்றிய, மிகுதியாக.

இலக்கணம்

வாக்கியத்தின் வகைகள்

கோழிகளின் வகைகள் யாவை?

எடிசன் யார்?

—இவ்வாக்கியங்களைக் கவனி. இவை வினாப்பொருளைத் தருவதால் **வினாவாக்கியங்களாகும்.**

(2) முருகா, வா.

கண்ணா, படி.—இவை கட்டளையிடும் பொருளில் வந்துள்ளன. இவ்வாறு கட்டளைப் பொருளில் வருபவை **கட்டளை வாக்கியங்கள்** ஆகும்.

(3) கண்ணன் வந்தான்.

முருகன் வந்தான்.—இவ்வாக்கியங்கள் ஒரு தொழிலின் நிகழ்ச்சியை அறிவிக்கின்றன. இவை **உடன்பாட்டு வாக்கியங்கள்** ஆகும்.

(4) கண்ணன் வந்திலன்.

முருகன் வாரான்.—இவை தொழில் நிகழாமையைத் தெரிவிக்கின்றன. எனவே இவை **எதிர்மறை வாக்கியங்கள்** எனப்படும்.

16. கடல்

(பாட்டு)

எல்லை அறியாப் பெருங்கடலே—நீதான்
இரவும் உறங்காயோ கடலே?
அல்லும் பகலும் அலைகடலே—உனக்கு
அலுப்பும் இலையோ கருங்கடலே? 1

உருண்டு திரண்டு வருங்கடலே—உடைந்து
ஓடிப் பேர்வதேன் கடலே?
வெருண்டு மதிகெட்டாய் கடலே—பாறை
விலகிப் போகுமோ கடலே? 2

பொங்கு திரைகளோ கடலே—அவை
புரவி நிரைதா மோகடலே?
எங்கும் உனதொலி யோகடலே—அன்றி
இடியின் முழக்க மோகடலே? 3

ஓடம் எடுத்தெறியும் கடலே—தயை
உனக்குச் சற்றிலை யோகடலே?
ஆடல் வீடுதனைக் கடலே—எண்ணில்
அழிப்ப தழகா மோகடலே? 4

மலையை வயிற்றடக்குங் கடலே—எண்ணில்
மகரமீ னுலவுங் கடலே
விலைகொள் முத்தளிக்குங் கடலே—எண்ணில்
விளையாடற் குதவுங் கடலே 5

மழைக்கு மூலமும் நீகடலே—அதை
வாங்கி வைப்பதும் நீகடலே
வழுத்து மகிமையெ லாங்கடலே—எவர்
மதித்து முடிக்கவல்லார் கடலே! 6

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

குறிப்புரை

1. அல் - இரவு; அலுப்பு - சோர்வு; கருங்கடல் - கருமை நிறம் பொருந்திய கடல்.

2. உடைந்து - சிதறி; வெருண்டு - மயங்கி; மதி - அறிவு.

3. திரை - அலை; புரவி நிரை - குதிரை வரிசை; முழக்கம் - ஓசை.

4. தயை - கருணை.

5. மகரமீன் - சுறுமீன்; வழுத்தும் - துதிக்கும்; மகிமை - பெருமை; மதித்து - நினைத்து.

பயிற்சி

1. விடை எழுது:

1. கடலில் அலைகள் எவ்வாறு காணப்படுகின்றன?
2. அலைகளின் ஓசை எதற்கு ஒப்பானது?
3. கடல் கருணையற்றது என்று ஏன் கூறப்படுகிறது?
4. மழைக்குக் கடல் எவ்வாறு மூலகாரணமாக விளங்குகிறது?

17. விலங்குக் காட்சிச்சாலை

[மணிவண்ணன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவன். அவனுடைய தம்பியான இளங்கோவும், தங்கை தேன்மொழியும் ஆரம்பப் பள்ளியில் படித்துக் கொண்டிருப்பவர்கள். அவ்விருவரையும் மணிவண்ணன் ஒரு நாள் விலங்குக் காட்சிச் சாலைக்கு அழைத்துக்கொண்டு போகிறான்.]

தேன்மொழி : அண்ணா, (சிங்கம் இருக்கும் கூண்டைக் காண்பித்து) அதோ பார். அந்தக் கூண்டினுள் அங்கும் இங்கும் உலவிக் கொண்டிருக்கிறதே! அந்த விலங்கின் பெயர் என்ன ?

இளங்கோ : அதுதான் சிங்கம். அது எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது பார்த்தாயா ?

மணிவண்ணன் : வாருங்கள். அருகில் சென்று பார்ப்போம். (அருகில் சென்று) சிங்கத்தை நன்றாகப் பாருங்கள்.

தேன் : அண்ணா, இது ஏன் இப்படிக் கத்துகிறது.

மணி : தேன்மொழி, உனக்குப் பசி எடுத்தால் நீ என்ன செய்கிறாய் ? அம்மாவிடம் சென்று உணவு பரிமாறச் சொல்லி உண்கிறாய் அல்லவா ? அதுபோலச் சிங்கத்திற்குப் பசி எடுத்துவிட்டது. தனக்கு உணவு வேண்டும் என்று அது கர்ச்சனை செய்கிறது.

இளங்கோ : அண்ணா, சிங்கம் நம்மைப் போல உணவு உண்ணுமா ? மிட்டாய், பழம் இவற்றையெல்லாம் தின்னுமா ?

மணி : (சிரித்துக் கொண்டு) தம்பி, சிங்கம் நம்மைப்போல உணவு உண்ணாது. அது ஆடு,

மாடு, பன்றி முதலியவற்றின் இறைச்சியைத்தான் உண்ணும். அதோ பார். சிங்கத்திற்கு இரை போட ஒருவன் இறைச்சித் துண்டுகளை வாளியில் கொண்டுபோகிறன்.

தேன் : அண்ணு, இதன் கழுத்திலும், தலையிலும் மயிர் நீண்டு அடர்ந்து தொங்குகிறது. பக்கத்தில் உள்ள சிங்கத்திற்கு அவ்வாறு இல்லையே?

மணி : அது பிடரிமயிர். ஆண் சிங்கத்திற்குத்தான் பிடரிமயிர் உண்டு. அதன் அருகில் இருப்பது பெண் சிங்கம். அதனுல்தான் அதற்குப் பிடரிமயிர் இல்லை.

[அவ்விடத்திலிருந்து நகர்ந்து, புலிக் கூண்டிற்கு அருகில் செல்லுகின்றனர்.]



மணி : கூண்டினுள் இருக்கும் புலியைப் பாருங்கள். அது அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருப்பதை நோக்குங்கள்.

தேன் : புலியின் உடம்பைப் பார் அண்ணு. மஞ்சள் நிறக் கோடுகளும், கறுப்பு நிறக் கோடுகளும், வெண்ணிறக் கோடுகளும், பட்டை பட்டையாக எவ்வளவு அழகாக இருக்கின்றன !

மணி : (சிரித்துக்கொண்டே) ஆம். அழகு உள்ள இடத்தில் ஆபத்தும் இருக்கிறது. புலி பார்வைக்கு அழகான மிருகம்தான். ஆனால் அது சிங்கத்தைவிட எந்த விதத்திலும் தாழ்ந்தது அன்று. மிகுந்த மூர்க்கத்தனம் உடையது.

இளங்கோ : சிங்கத்தின் குணத்திற்கும், புலியின் குணத்திற்கும் வேறுபாடு உண்டா?

மணிவண்ணன் : ஆம். சிறிதளவு வேறுபாடு உண்டு. சிங்கம் தனக்குப் பசி எடுத்தபோதுதான் மற்றைய விலங்குகளைக் கொல்லும். ஆனால் புலி எப்பொழுதும் அவற்றைக் கொல்வதில் விருப்பம் உடையது.

இளங்கோ : (சிறுத்தைக் கூண்டைக் காண்பித்து) அண்ணு, அந்தக் கூண்டில் இருக்கும் விலங்கும் புலியைப் போலக் காணப்படுகிறதே !

மணி : தம்பி, அது புலி அல்ல. அது சிறுத்தையென்னும் விலங்கு. புலிக்கும் சிறுத்தைக்கும் உருவத்தில் வேறுபாடு உண்டு. சிறுத்தையின் உடலில் ஆங்காங்குப் புள்ளிகள் அமைந்திருப்பதைப் பார். அதுவும் கொடூரமான விலங்கே. சிங்கம், புலி இவற்றைப்போலச் சிறுத்தையும் மற்றைய விலங்குகளைக் கொன்று தின்னும்.

[பிறகு கரடியின் கூண்டிற்கு அருகில் செல்கின்றனர்கள்.]

மணி : இதுதான் கரடி. இதன் உடலில் மயிர் அடர்ந்திருப்பதைப் பாருங்கள்.

இளங்கோ : அண்ணா, நேற்றுக்கூட ஒரு மனிதன் ஒரு கரடியை நம் தெருவிற்குக் கொண்டு வந்து வித்தை காண்பித்துக் கொண்டிருந்தான்.

தேன்மொழி : ஆம். அண்ணா, நேற்று நான் கூட அதைப் பார்த்தேன்.

இளங்கோ : கரடி எப்படிப்பட்ட குணத்தை உடையது ?

மணி : அது சிங்கம், புலி, சிறுத்தை முதலியவற்றைப்போல அவ்வளவு கொடூரமானது அன்று. அது இறைச்சி மட்டும் அன்றிக் கிழங்கு முதலிய பொருள்களையும் உண்ணும். கரடிக்கு மரம் ஏறத் தெரியும். ஆனால் சிங்கமும், புலியும் மரத்தின்மேல் ஏறமாட்டா. சரி நீங்கள் ஒட்டைச் சிவிங்கியைப் பார்த்ததில்லையே! வாருங்கள், அதைப் பார்ப்போம்.

இளங்கோ : (ஒட்டைச் சிவிங்கியைப் பார்த்துவிட்டு) அண்ணா, இதன் கழுத்து ஏன் இவ்வளவு நீளமாக இருக்கிறது ?

மணி : ஒட்டைச் சிவிங்கி தன்னுடைய நீண்ட கழுத்தின் உதவியால் உயரமான மரக்கிளைகளில் உள்ள தழைகளை எளிதில் எட்டிப் பறித்துத் தின்னும். இது மற்றைய விலங்குகளைப் போல மாமிசம் உண்ணக்கூடியது அன்று.

தேன் : (யானைகளைப் பார்த்து) அண்ணா, அங்கே பாருங்கள். இரண்டு யானைகள் நிற்கின்றன.

இளங்கோ : அண்ணா, அந்த யானைகளில் ஒன்றுக்கு ஏன் தந்தங்கள் காணப்படவில்லை ?

மணி : தம்பீ, ஆண் யானைக்குத்தான் தந்தம் உண்டு. பெண் யானைக்குத் தந்தம் இராது.

யானையின் துதிக்கையைப் பார். நமக்குக் கைகள் எவ்வாறு உதவுகின்றனவோ, அவ்வாறே யானைக்கு அதன் துதிக்கை உதவுகிறது.

தேன்: அண்ணா, அதன் கால்களைப் பார். அவை உரல்களைப் போன்று இருக்கின்றன.

இளங்கோ: யானையின் காதுகளைப் பார். தேன்மொழி, முறங்கள் போன்று இருக்கின்றன. அண்ணா, நாம் இதுவரை பார்த்தவை தவிர, வேறு காட்டு விலங்குகள் உண்டா?

மணிவண்ணன்: ஆம். காண்டா மிருகம், ஓநாய், நீர் யானை முதலியனவும் காட்டு விலங்குகளே. இன்றைக்கு மிகுந்த நேரமாகிவிட்டது. மற்றொரு நாளைக்கு வந்து, மற்றைய விலங்குகளையும் பறவைகளையும் காண்போம். இப்போது நான் கூறுவதைக் கேளுங்கள். நாம் கண்ட விலங்குகளில் பல, கொடியவை. ஆதலால் பண்டைக் காலம் முதல் அவற்றை மக்கள் வேட்டையாடிக் கொன்று வந்துள்ளார்கள். ஆனால் இக்காலத்தில் அவ்வாறு செய்வது தவறு என்று அறிஞர் கருதுகின்றனர். வனவிலங்குகளை வேட்டையாடிக் கொன்று வந்தால் அவை நாளடைவில் அழிந்துவிடும். அப்போது அவற்றால் ஏற்படும் நன்மைகளை நாம் இழப்போம் என்பதுபற்றி நீங்கள் நான்காம் வகுப்பில் படித்தீர்கள் அல்லவா?

[மூவரும் வீட்டிற்குச் செல்லுகின்றனர்.]

அரும்பதஉரை

விலங்கு - மிருகம்; இரை - ஆகாரம்; அலைந்து - திரிந்து; ஆங்காங்கு - அந்த அந்த இடங்களில்; கொடூரமானது - கொடுமையானது.

பயிற்சி

1. விடை எழுது :

1. சிங்கத்தின் தன்மைகள் எவை?
2. புலியின் குணங்களை எழுது.
3. புலிக்கும், சிறுத்தைக்கும் உள்ள வேறுபாடு யாது?
4. கரடி எப்படிப்பட்ட தன்மையை உடையது?
5. யானை எவ்வாறு இருக்கிறது?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

பயங்கரமாக, அருகில், அழகாக, எந்த விதத்திலும், வேறுபாடு, மூர்க்கத்தனம்.

3. எதிர்ப்பதங்கள் எழுது :

அருகில், நீண்ட, தாழ்ந்தது, அழகான, உயரமான.

இலக்கணம்

மூன்றும் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபுகள் ஆல், ஒடு, ஓடு, உடன் என்பன.

(உ-ம்.) 1. யானை துதிக்கையால் உணவை உண்ணும்.
2. புலியோடு யானை போர் புரிந்தது.
3. மணிவண்ணனுடன் தேன்மொழி சென்றாள்.

18. ஒட்டக்கூத்தர் உயிர் தப்பியது

1. முற்காலத்தில் தமிழகத்தில் புலவர் பலர் இருந்தனர். அவர்கள் பற்பல நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றினுர்கள். அவர்களுடைய அரிய தொண்டினுல் தமிழ்த்தாய் சிறப்படைந்தாள்; பிறநாட்டு அறிஞர் உள்ளத்தையும் கவரும் பெருமையைப் பெற்ருள். இவ்வாறு தமிழ் அன்னை-யின் பெருமையை எங்கும் பரப்பிய புலவர் பெரு-மக்களுள், ஒட்டக்கூத்தர் என்பவர் ஒருவர் ஆவர்.

2. ஒட்டக்கூத்தர் செங்குந்தர் குலத்தில் தோன்றியவர். நெசவுத் தொழில் செய்து பிழைப்-பவர் செங்குந்தர் ஆவர். செங்குந்தர் குலதிலக-ராய் விளங்கிய ஒட்டக்கூத்தர் தமிழில் பெரும் புலமை பெற்றிருந்தார். அவர் பாடிய செய்யுட்-களைப் பலரும் புகழ்ந்து பாராட்டினர். ஒட்டக்-கூத்தர் சிறந்த பெரும் புலவராக விளங்கினுலும், மிகவும் பிடிவாத குணம் உடையவராக இருந்தார். அவருடைய பிடிவாத குணத்தினுல் அவருக்கு ஒரு சமயம் பெரும் இடையூறு நேரிட்டது.

3. ஒட்டக்கூத்தர் வாழ்ந்த காலத்தில் சோமன் என்ற செல்வர் ஒருவர் இருந்தார். அவர் புலவர்களை ஆதரித்துப் பேணும் இயல்பை உடையவர். தம்மை அண்டியவருக்கு இடையூறு நேர்ந்தால், அதனை எவ்வாருயினும் நீக்கும் பண்பு உடையவர். ஒட்டக்கூத்தர் அவ்வள்ள-லுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்; சோமனின் உயிர் நண்பராக விளங்கினுர்.

4. ஒரு முறை ஒட்டக்கூத்தர் சோமனின்

இல்லத்தில் சில நாட்கள் வரை தங்கியிருந்தார். அப்போது செங்குந்த மரபினர் ஒன்று கூடி ஒட்டக்கூத்தரிடம் வந்து, தமது குலத்தைச் சிறப்பித்துப் பாடவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஒட்டக்கூத்தர் தம்முடைய குலத்தைத் தாமே புகழ்ந்து பாடுவது தற்புகழ்ச்சியாகும் என்று எண்ணினுர். எனவே அவ்வாறு பாடுவதற்கு அவர் உடன்படவில்லை. செங்குந்தர் அனைவரும் பல முறை வேண்டிக்கொண்டனர். ஆனுல் பிடிவாத குணமுள்ள ஒட்டக்கூத்தர் உள்ளம் அச்செயலுக்குச் சிறிதும் இசையவில்லை.

5. ஒட்டக்கூத்தர் தம்முடைய வேண்டுகோளை மறுத்ததால் செங்குந்தர்கள் அவர் மீது பகை கொண்டார்கள். கூத்தருக்குத் தம்முடைய குலத்தின் மேல் சிறிதும் பற்று இல்லை என்று அவர்கள் தீர்மானித்து, அவரைக் கொன்றுவிட முடிவு செய்தார்கள்; அனைவரும் சேர்ந்து, கூத்தர் தங்கியிருந்த சோமன் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டார்கள்.

6. அந்நிலையைச் சோமன் அறிந்தார்; தம் நண்பரான கூத்தரின் உயிருக்கு நேர இருந்த இன்னலை எவ்வாறு போக்குவது என்று சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார். உடனே அவர் ஒரு பெரிய பெட்டியில் தம்முடைய மைந்தனை அடைத்தார். அப்பெட்டியைப் பூட்டித் தம்முடைய வீட்டை வளைத்துக்கொண்டு நின்ற செங்குந்தர்களிடம் சென்று "தோழர்களே, ஒட்டக்கூத்தர் இந்தப் பெட்டியினுள் இருக்கிருர். இதை எடுத்துக் கொண்டு செல்லுங்கள்," என்று கூறினுர். உடனே செங்குந்தர்கள் பெட்டியைத் தூக்கிக்கொண்டு

அங்கிருந்து அகன்றார்கள். சோமனின் அருஞ்செயலை அறிந்த ஒட்டக்கூத்தர் விழிகளில் நீர்வர அவரை அணைத்துக்கொண்டார். “ நண்பரே, இந்த ஏழையைக் காப்பாற்றுவதற்குத் தங்கள் மைந்தனையும் இழக்கத் துணிந்துவிட்டீர்களே! நான் உங்களுக்கு எவ்வாறு என் நன்றியைத் தெரிவிப்பேன்?” என்று சோமனைப் புகழ்ந்து பாராட்டினார்.

7. பெட்டியைத் தூக்கிச் சென்ற செங்குந்தர்கள், அதனைத் திறந்து பார்த்தபோது, அப்பெட்டியினுள் சோமனுடைய மைந்தன் இருப்பதைக் கண்டார்கள். ‘கூத்தரைக் காப்பதற்குச் சோமன் செய்த அருஞ்செயலே இது’ என்று அவர்கள் உணர்ந்து வியந்தார்கள். அவர்கள் அச்சிறுவனை அழைத்துக்கொண்டு சோமன் இல்லத்தை அடைந்து, “அண்ணலே, குலப்பற்றுச் சிறிதும் இல்லாத ஒட்டக்கூத்தனைக் காப்பாற்றுவதற்குத் தங்கள் மகனை இழக்கத் துணிந்தது நீதியாகுமா? இந்த இளம் பாலகனைக் கொன்று, பழியைத் தேடிக்கொள்ளும் பாவிகள் என்று எங்களை எண்ணி விட்டீர்களா? எங்கே இருக்கிறான் ஒட்டக்கூத்தன்? அவன் இருக்கும் இடத்தை அறிவித்துவிடுங்கள்,” என்று கூறினார்கள்.

8. அதைக் கேட்ட சோமன் அவர்களை நோக்கி, “ நண்பர்களே. ‘கோபம் குடி கெடுக்கும்’ என்பதை நீங்கள் அறிய மாட்டீர்களோ? ஒட்டக்கூத்தர் என்ன தவறு செய்தார்? அவரை நீங்கள் ஏன் கொல்ல வேண்டும்? உங்களுடைய செய்கையால் என்ன விளையும் என்பதை எண்ணிப் பாருங்கள். சிறந்த புலவர் ஒருவரைத் தமிழகம்

இழக்கவேண்டும் என்பதுதான் உங்களுடைய கருத்தோ? அவர் பெருமையை அறியாமல் நீங்கள் அவரைக் கொல்ல முயல்வது பொருந்தாது. உங்கள் செயலுக்கு நீங்களே பின்பு வருந்த நேரிடும். அவர் உயிரைப் பறிக்க உங்களுக்கு நான் ஒரு போதும் இடங்கொடேன். நீங்கள் விரும்பினுல் அவருக்குப் பதிலாக என்னைக் கொல்லுங்கள்,'' என்று உருக்கமாக உரைத்தார். சோமனுடைய உருக்கமான பேச்சு, அவர்களுடைய உள்ளத்தைக் கனிவித்தது. அவர்களுக்கு ஒட்டக்கூத்தர் மீது இருந்த சினம் ஒருவாறு தணிந்தது. அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றுர்கள்.

9. ஒட்டக்கூத்தர் தம்முடைய பிடிவாத குணத்தினுல் நேர்ந்த தீமையை உணர்ந்து வருந்தினுர். சோமனின் அருஞ்செயலை வியந்து புகழ்ந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு தம் மரபினரான செங்குந்தர்மீது கருணைகொண்ட ஒட்டக்கூத்தர், 'ஈட்டி எழுபது' என்னும் நூலைப்பாடி அவர்களைச் சிறப்பித்தார்.

அரும்பத உரை

கவரும் - வசப்படுத்தும்; குலதிலகர் - குலத்தில் உயர்ந்தவர்; புலமை - அறிவுடைமை; இடையூறு - துன்பம்; நீக்கும் - விலக்கும்; பண்பு - குணம்; வள்ளல் - கொடையாளி; அண்டியவர் - நெருங்கியவர்; தற்புகழ்ச்சி - தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுதல்; உடன்படுதல் - சம்மதித்தல்; பற்று - ஆசை; இன்னல் - துன்பம்; அருஞ்செயல் - செய்வதற்கு அருமையான செயல்; நீர்வார - கண்ணீர் சொரிய; அண்ணல் - தலைவன், பெரியோன்; குடி - குடும்பம்; உருக்கமாக - மனம் உருகும்படி; கனிவித்தது - இளகச் செய்தது;

சினம் - கோபம்; தணிந்தது - குறைந்தது; மரபினர் - குலத்தினர்.

பயிற்சி

1. விடை எழுது:

1. ஒட்டக்கூத்தர் என்பவர் யாவர்? அவருடைய பண்புகள் யாவை?

2. சோமன் என்பவர் யாவர்? அவருடைய குணங்களை எழுது.

3. செங்குந்தர் ஒட்டக்கூத்தரிடம் வேண்டிக்கொண்டது யாது?

4. அவர் ஏன் செங்குந்தர் வேண்டுகோளை மறுத்தார்?

5. சோமன் எவ்வாறு ஒட்டக்கூத்தரைக் காப்பாற்றினர்?

6. செங்குந்தரின் சினம் எவ்வாறு தணிந்தது?

7. ஈட்டி எழுபது என்பது என்ன?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது:

பற்பல, கவரும், பிடிவாதகுணம், வேண்டுகோள், பலமுறை, சிந்தித்து, உருக்கம், தணிந்தது, கருணை.

3. எதிர்ப்பதங்கள் எழுது:

பற்பல, புகழ்ந்து, சிலநாட்கள், பகை, நீதி, உயர்ந்த, தீமை.

இலக்கணம்

நான்காம் வேற்றுமை

இதன் உருபு 'கு' என்பதாகும்.

(உ - ம்.) ஒட்டக்கூத்தர் சோமனுக்கு உயிர் நண்பர்.

ஐந்தாம் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபுகள் இன், இல் என்பனவாகும்.

(உ - ம்.) 1. சோமனுடைய வீட்டின் வெளியே செங்குந்தர்கள் நின்ருர்கள்.

2. ஒட்டக்கூத்தர் அறிவில் சிறந்தவர்.

19. நாட்குறிப்பு ஏடு

1. நாம் ஒவ்வொரு நாளும் பல செயல்களைச் செய்கிறோம். பல நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்டும், காதினால் கேட்டும் அறிகிறோம்; பலருடன் பழகுகிறோம்; பல அறிஞர்களின் கருத்துரைகளைக் கேட்கிறோம். சில நாட்களில் நாம் இன்பமுடன் இருக்கிறோம். வேறு சில நாட்களில் துன்பப்படுகிறோம். இவ்வாறு நாள்தோறும் நம்முடைய வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள் யாவற்றையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளமுடிவதில்லை. அதனால் நம் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான செய்திகளைக்கூட மறந்துவிடுகிறோம். ஆகையால், நாம் முக்கியமான செய்திகளை எல்லாம் ஒரு குறிப்புப் புத்தகத்தில் குறித்துவைத்துக்கொள்ளுதல் வேண்டும். அப்புத்தகமே **நாட்குறிப்பு ஏடு** எனப்படும்.

2. நாட் குறிப்பு ஏட்டில் ஒவ்வொரு நாளும் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை. மறக்காமல் இருப்பதற்கு உரிய இன்றியமையாத நிகழ்ச்சிகளை மட்டும் குறித்து வைத்துக்கொண்டால் போதுமானது. நாட்குறிப்பு எழுதும் பழக்கம் மிகவும் நன்மையைக் கொடுக்கும். மேனாட்டு மக்கள் அப்பழக்கத்தைச் சிறந்த முறையில் பின்பற்றி வருகிறார்கள். நமது நாட்டில் **ஆனந்தரங்கம் பிள்ளை** என்பவர் ஒருவர் இருந்தார். அவர் டூப்ளே என்பவர் பிரெஞ்சுக் கவர்னராக இருந்தபோது, புதுச்சேரியில் உயர்ந்த பதவியில் இருந்தார். அவர் நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை மேற்-

கொண்டிருந்தார். அவர் அக்குறிப்பு ஏட்டில் டூப்ளே காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை விரிவாகக் குறித்து வைத்துள்ளார். அக்குறிப்புக்கள் சரித்திர ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. நாட் குறிப்பு எழுதுபவர், தமது வாழ்க்கையில் முன்பு நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம், பின்னர் ஒரு காலத்தில் நினைவுபடுத்தி, அவற்றால் விளைந்த நன்மை, தீமைகளை ஆராய முடியும். மேலும் ஒருவர் எழுதி வைக்கும் நாட் குறிப்பு, அவருடைய சந்ததியார் அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் உதவும். ஆகையால் மாணவர்கள் இளமை முதலே நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை மேற்கொள்ளுதல் மிகவும் நல்லது.

3. சென்னையில் **அன்பழகன்** என்னும் ஒரு மாணவன் இருக்கிறான். அவனும் உன்னைப் போலவே ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய நாட் குறிப்பு ஏட்டிலிருந்து சில குறிப்புக்கள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்துப் பார்த்து, அவ்வாறே நீயும் நாட் குறிப்பு எழுத முயற்சி செய்க.

15-8-56

4. இன்று நம் நாடு விடுதலை பெற்ற நாள். இந்நாளில் நாடு எங்கும் சுதந்தரதின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னையில் நடைபெற்ற இவ்விழாவில் கலந்து கொள்ள ஜனாதிபதி ராஜேந்திர பிரசாது வந்திருந்தார். அவர் இன்று காலையில் கோச்சு வண்டியில் அமர்ந்து மவுண்ட் ரோடு வழியாக பவனி வந்தார். பிறகு 'ஐலண்டு' மைதானத்தில், அலைகடல் போன்று

திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் பேசினூர். இந்த நிகழ்ச்சியை நான் எப்பொழுதும் மறவேன்.

14–9–56

5. இன்று மாலே எங்கள் பள்ளிக்கூடத்தில் பாரதி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவர் பலர் பாரதி பாடல் போட்டியில் கலந்து கொண்டனர். என் நண்பனுன சிவலிங்கம் அப்-போட்டியில் முதல் பரிசு பெற்ருன். அவ்விழாவின்-போது எங்கள் பள்ளித் தலேமை ஆசிரியர் பாரதி-யாரின் பண்புகளேப் பற்றி அருமையாகப் பேசினூர்.

5–10–56

6. எங்கள் பள்ளியின் காலாண்டுத் தேர்வு இன்றுடன் முடிவு பெற்றது. நாளே முதல் ஒன்பது நாட்களுக்கு விடுமுறை. நான் எல்லாத் தேர்வு-களேயும் நன்ருக எழுதி யிருக்கிறேன்.

6–10–56

7. இன்று, என்னேயும், மற்றும் பல மாண-வர்களேயும் எங்கள் ஆசிரியர் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்று வரும் மருத்துவக் கண்-காட்சிக்கு அழைத்துச் சென்ருர். காலே பத்து மணிக்கு அங்குச் சென்ற நாங்கள், நான்கு அணு கொடுத்து, நுழைவுச் சீட்டு பெற்றுக் கொண்டு, கண்காட்சிச் சாலேக்குள் நுழைந்தோம். அங்கு உடற்கூறு சம்பந்தமான பல செய்திகளேயும் நாங்கள் தெரிந்துகொண்டோம். நோய்களேப் பற்றியும், அவற்றிற்குச் சிகிச்சை செய்யும் முறையைப் பற்றியும் அங்கு இருந்தவர்கள் விரிவாகக் கூறினூர்கள். எங்கள் ஆசிரியரும்,

அங்கு உள்ள பெயர்களைப் பற்றி எங்களுக்கு விளக்கிக் கூறினர். மாலை நான்கு மணிக்குக் கண்காட்சிச் சாலையை விட்டு வெளியேறினோம்.

15-10-56

8. நானும், என்னுடைய பெற்றோரும் மைசூருக்குச் சென்று, அங்கு ஒரு வாரம் தங்கி-யிருந்து விட்டு, இன்று சென்னைக்கு வந்து சேர்ந்-தோம். அங்கு நான் கண்ட காட்சிகள் இன்னும் என் கண்களுக்கு முன்பு காட்சி யளிப்பது போலவே எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அரும்பத உரை

உணர்கிறோம் - அறிகிறோம்; இன்றியமையாத - முக்கியமான; சந்ததியார் - பரம்பரையினர்; பெரிதும் - மிகவும்; திரண்டிருந்த - கூடியிருந்த; கூறு - பகுதி.

பயிற்சி

1. விடை எழுது:

1. நாட்குறிப்பு ஏடு என்றால் என்ன?
2. நாட்குறிப்பு எழுதி வைப்பது ஏன் அவசிய-மானதாக விளங்குகிறது?

2 வாக்கியங்களில் அமைத்து எழுது:

இன்றியமையாத, பின்பற்றி, அருமையாக.

3. பிரித்து எழுது:

கருத்துரை, நாட்குறிப்பு, நுழைவுச் சீட்டு.

இலக்கணம்

ஆறும் வேற்றுமை:—இவ்வேற்றுமையின் உருபுகள் அது, உடைய என்பனவாகும்.

(உ - ம்.) 1. இது கந்தனது வீடு.
2. என்னுடைய நாட் குறிப்பு ஏடு.

ஏழாம் வேற்றுமை:—இதன் உருபுகள் இல், கண், இடம் என்பவையாகும்.

1. கந்தன் வீட்டில் இருந்தான்.
2. மீன் தண்ணீரின்கண் வாழ்கின்றது.
3. எனக்கு மக்களிடம் மிகுந்த விருப்பம் உண்டு.

20. தாமிரபரணி

1. **'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'** என்று கூறினர் ஔவையார். ஓர் ஊருக்கு அருகில் ஆறு ஓடினுல் அது மிகவும் அழகாக இருக்கும். அது மட்டும் அல்ல. அந்த ஆற்றின் நீர் மக்களுக்கு மிகவும் பயன்படும். ஒரு நாட்டில் பாய்கின்ற ஆறுகளே, அந்த நாட்டின் செழுமைக்குக் காரணமாகின்றன. நமது இந்தியாவின் வடபகுதியில் சிந்து, கங்கை என்னும் நதிகள் பாயும் பகுதி செழித்து விளங்குகிறது. அந்த நதிகளும் அவற்றின் கிளை நதிகளுமே வட இந்தியாவை வளமுறச் செய்கின்றன. அது போலவே, கோதாவரி, கிருஷ்ணு, காவிரி, தாமிரபரணி முதலிய ஆறுகள் தென்னிந்தியாவில் பாய்ந்து, செழிப்பை உண்டாக்குகின்றன. அவற்றுள் ஒன்றுகிய தாமிரபரணியைப் பற்றி இங்குப் படிப்போம் :

2. தாமிரபரணி ஆறு தமிழ் நாட்டின் தெற்கில் உள்ள அகத்திய மலையில் உற்பத்தியாகிறது. அகத்திய மலை என்பது மேற்கு மலைத்தொடரின் ஒரு பிரிவாகும். அங்குத் தோன்றுகின்ற தாமிரபரணி, திருநெல்வேலி மாவட்டத்தின் வழியாக ஓடி மன்னுர் வளைகுடாவில் கடலோடு கலக்கிறது. இந்த நதியில் தாமிரம் எனப்படும் செம்பின் சத்து மிகுதியாகக் கலந்திருக்கிறது. அதனுல்தான் இது தாமிரபரணியாறு என்னும் பெயரைப் பெற்றது.

3. தாமிரபரணியின் பாய்ச்சலினுல்தான் திருநெல்வேலி மாவட்டம் செழிப்புடன் விளங்குகிறது. அந்த மாவட்டத்தின் உயிர் நாடியாக



திருக்குற்றால நீர்வீழ்ச்சி

விளங்குவது தாமிரபரணி என்று கூறுவது தவ-ருகாது. இது **அம்பாசமுத்திரம்** என்னும் இடத்-திற்கு அருகில் உயரத்தில் இருந்து நீர்வீழ்ச்சி-யாக நிலத்தில் விழுகிறது. இந்த நீர்வீழ்ச்சிக்குப் **பாபநாசம் நீர்வீழ்ச்சி** என்பது பெயராகும். இந்த நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரசத்தி உற்-பத்தி செய்யப்படுகிறது.

4. தாமிரபரணி ஆற்றுடன் பல கிளை ஆறு-கள் வந்து கலக்கின்றன. அவற்றுள் சிறந்தது **சிற்ருறு** ஆகும். அதற்குச் **சித்திரா நதி** என்-னும் மற்ெருரு பெயரும் உண்டு. அந்த ஆறு தென்-காசிக்கு அருகில் உள்ள குற்ருல மலையிலிருந்து, நீர்வீழ்ச்சியாகக் கீழே விழுகிறது. குற்ருல மலை இயற்கை எழில் மிக்க காட்சிகள் நிறைந்த இடம். அங்குச் சித்திரா நதி, நீர்வீழ்ச்சியாக விழும் காட்சி மிகவும் களிப்பை உண்டாக்கும். அதுவே **குற்ருல நீர்வீழ்ச்சி** என்று கூறப்படுகின்றது. மக்கள் பலர் அங்குச் சென்று நீர்வீழ்ச்சியைக் கண்டும், அதில் நீராடியும் இன்புற்று வருகின்றனர்.

5. தாமிரபரணியைத் திருநெல்வேலி மாவட்ட மக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்-கின்ருர்கள். அந்த ஆற்றில் பன்னிரண்டு இடங்-களில் அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவ்-வணைகளின் நீரைத் தேக்கிப் பல கால்வாய்கள் மூலம் அந்த மாவட்டம் முழுவதும் உள்ள நிலங்-களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. இந்த ஆற்றில் கலந்துள்ள தாமிரச் சத்து மக்களுடைய உடற்-பிணிகளைப் போக்கும் தன்மை உடையது என்று கூறப்படுகிறது. இந்த ஆற்றில் நீர் எப்போதும் வற்றுவதில்லை. கடுங் கோடையில்கூடத் தாமிர-

பரணியில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த ஆற்றினைப் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளார்கள். இதனை அவர்கள் 'பொருநை' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஆற்றின் கரையில் பாபநாசம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி முதலிய சிறந்த ஊர்கள் அமைந்துள்ளன. தமிழகத்தின் தென்பகுதியில் பாய்ந்து, வளப்படுத்தும் பொருநை நதியை நாம் என்றும் போற்றக் கடமைப் பட்டுள்ளோம்.

அரும்பத உரை

செழுமை - வளம் ; வளம் உற - செழுமை அடைய ; செம்பு - ஒருவகை உலோகம் ; தவறு ஆகாது - குற்றம் ஆகாது ; எழில் - அழகு ; பிணி - நோய் ; கடுங்கோடை - கடுமையான வெப்பம் பொருந்திய கோடைக்காலம் ; தமிழகம் - தமிழ்நாடு ; போற்ற - புகழ்ந்து கொண்டாட.

பயிற்சி

1. விடை எழுது :

1. ஆற்றினால் ஏற்படும் நன்மைகள் யாவை ?
2. தாமிரபரணி ஆறு எங்குத் தோன்றுகிறது ?
3. அதற்கு ஏன் அப்பெயர் ஏற்பட்டது ?
4. பாபநாசம் நீர்வீழ்ச்சி எங்கு இருக்கின்றது ?
5. குற்றால நீர்வீழ்ச்சி எங்கு உள்ளது ?
6. தாமிரபரணி ஆறு எவ்வாறு பயன்படுகின்றது?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

செழுமை, உற்பத்தி, பலவாறு, எப்போதும், போற்ற.

இலக்கணம்

எட்டாம் வேற்றுமை

முருகா, வா.

கந்தா படி.

இவ்வாறு அழைத்தல் பொருளில் வரும் பெயர்ச்சொற்கள் எட்டாம் வேற்றுமையாகும். இது விளிவேற்றுமை எனவும் கூறப்படும். எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை. ஒரு பெயர்ச் சொல் விளி ஏற்கும்போது பல மாறுதல்களை அடையும்.

(உதாரணம்) முருகன் — முருகா
,, — முருகனே
,, — முருக
தம்பி — தம்பீ
குழந்தை — குழந்தாய்

வேற்றுமை—பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களில் உள்ள வேற்றுமைகளையும், அவற்றின் உருபுகளையும் எழுது :

1. உழவுத்தொழிலினால் நமக்கு உணவு கிடைக்கின்றது.

2. நமது நாட்டு உழவர்கள் பழைய முறையைப் பின்பற்றி உழவுத்தொழில் செய்துவருகிறார்கள்.

3. நமது அரசாங்கம் பல அணைகளைக் கட்டியுள்ளது.

4. சென்னையில் உள்ள விலங்குக் காட்சிச்சாலையைக் கந்தன் எனக்குக் காண்பித்தான்.

5. தாமிரபரணி அகத்திய மலையில் இருந்து ஓடிவருகிறது.

6. முருகா, வயலுக்குப் போவோமா?

7. கந்தன் காலையில் எழுந்து, கடவுளைத் தொழுதான்.



21. பொங்கல் விழா

1. உலகில் உள்ள எல்லா நாட்டினரும், எல்லா மதத்தினரும் பல்வேறு வகையான விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். அவ்விழாக்கள் பற்பல காரணங்களை முன்னிட்டுக் கொண்டாடப்பட்டு வருகின்றன. நம் தமிழ் நாட்டில் கொண்டாடப்படும் விழாக்கள் பலவற்றுள் ஒன்று பொங்கல் விழா. இது தமிழரின் தலைசிறந்த பெருவிழாவாக விளங்குகிறது. மற்றைய விழாக்கள் யாவற்றையும்விட இதனையே தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

2. இவ்விழா கொண்டாடப்படும் காலத்தையும், காரணத்தையும் நாம் முதலில் அறிய வேண்டும். நம்முடைய நாடு உழவுத்தொழிலை உயிராகக்கொண்டது. அத்தொழில் தமிழகத்தில்

பெரும்பாலும் ஆனி, ஆடி மாதங்களில் தொடங்கும்; மார்கழி, தை மாதங்களில் முடிவுபெறும். ஆனி அல்லது ஆடியில் விதை விதைத்துப் பயிர் செய்யத் தொடங்கும் உழவர்கள், மார்கழி மாதத்தின் இறுதியில் முற்றிய பயிரை அறுவடை செய்வார்கள். தைமாத முதலில் அவர்களுடைய இல்லங்களில் தானியங்கள் நிறைந்திருக்கும். உழவர் உள்ளத்தில் தாம் பாடுபட்டு அடைந்த பயனுக்கு அறிகுறியான மகிழ்ச்சி நிலவும். அப்பொழுது உழவர்கள் ஓய்வாக இருப்பார்கள். இவ்வாறு பலவகைகளிலும் சிறந்து விளங்கும் தைமாதத்தைத் தமிழர்கள் விழாக் கொண்டாடுதற்கு உரிய காலமாகக் கொண்டிருப்பது அவர்களுடைய அறிவின் திறத்தை விளக்குகிறது.

3. தமிழர் செய்நன்றி மறவாத இயல்பினர். அவர்கள் தம்முடைய உழவுத்தொழில் செம்மையாக நடைபெறுவதற்கு உதவி செய்பவர்களை ஒரு போதும் மறப்பதில்லை. பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கு மழையும், வெப்பமும் தேவை அல்லவா? ஆகையால் மழையைத் தரும் தெய்வமான இந்திரனுக்கும், வெப்பத்தை அளிக்கும் சூரியனுக்கும் நன்றியைச் செலுத்துவது தம்முடைய கடமை என்று அவர்கள் நினைத்தார்கள். மேலும் உழவுத்தொழிலுக்குப் பெருந்துணையாக இருப்பவை மாடுகள் ஆகும். அவையே உழவரின் உயரிய செல்வம். எனவே, உழவர்கள் மாடுகளுக்கும் சிறப்புச் செய்ய நினைத்தார்கள். அந்நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டே பொங்கல் விழாவைக் கொண்டாடத் தொடங்கினர்கள்.

4. இவ்விழா ஒவ்வோர் ஆண்டிலும் மார்கழி

மாதத்தின் கடைசி நாள் முதல் தைமாதம் மூன்ரும் நாள்வரை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மார்கழி மாதத்தின் கடைசி நாளில் தமிழர் இந்திர-னுக்கு விழாக் கொண்டாடுகின்றனர். இந்திர-னுக்குப் போகி என்னும் பெயர் வழங்கிவருகிறது. ஆகையால் அந்தவிழா போகிப்பண்டிகை என்று கூறப்படுகிறது. அந்நாளின்போது மக்கள் விடியற்காலையில் எழுந்துவிடுவார்கள் ; பயனற்றுக் கிடக்கும் பழைய பொருள்களை வீட்டு வாயிலில் குவியலாகச் சேர்த்துத் தீமூட்டுவார்கள் ; அப்-போது சிறுவர்கள் சிறு பறையைக் கையில் ஏந்தி, அதனைக் கொட்டி மகிழ்ச்சி அடைவார்கள் ; பொழுது விடிந்ததும் எண்ணெய் தேய்த்துத் தலை முழுகுவார்கள் ; அன்றிரவு பல தின்பண்டங்களைச் செய்து, இந்திரனுக்குப் படைத்து உண்பார்கள்.

5. அதற்கு அடுத்த நாளாகிய தை மாதம் முதல் நாள் பெரும் பொங்கல் விழா எனப்படும். அன்று மக்கள் தம்முடைய வீடுகளைத் தூய்மை செய்து, செம்மண் பூசியும், கோலங்கள் இட்டும் அலங்கரிப்பார்கள் ; வீட்டின் நடுவில் உள்ள முற்றத்தில் நெற்கதிர், மஞ்சட்கிழங்கு, வள்ளிக் கிழங்கு, பரங்கிக்காய், கரும்பு முதலியவற்றைப் பரப்புவார்கள் ; புதிய பானைகளை அடுப்பின் மீது ஏற்றிப் புது நெல் அரிசியை அப் பானை-களில் இட்டுப் பொங்குவார்கள் ; அந்த அரிசி நன்ருகக் கொதித்துச் சோறு பொங்கும்போது, அதில் சிறிது பாலையும் ஊற்றுவார்கள் ; சோறு பொங்கி வழியும்போது 'பொங்கலோ பொங்கல்' என்று கூறிப் பூரிப்படைவார்கள் ; பிறகு நன்ருக வெந்த அப்பொங்கலை இலையில் இட்டுத் தேங்காய்,

பழவகைகள் ஆகியவற்றுடன் சூரியனுக்குப் படைத்து வணங்குவார்கள்.

6. தை மாதம் இரண்டாம் நாளில் மாடுகளுக்குச் சிறப்புச் செய்யப்படுகிறது. அது **மாட்டுப் பொங்கல்** எனப்படும். அந்நாளில் மக்கள் மாடுகளைக் குளிப்பாட்டி, அவற்றின் நெற்றியில் மஞ்சள் தடவிக் குங்குமப் பொட்டு இடுவார்கள்; அவற்றின் கொம்புகளுக்கு அழகிய வண்ணங்களைத் தீட்டுவார்கள்; அவற்றின் கழுத்தில் சதங்கைகளும், மணிகளும் கட்டுவார்கள்; பிறகு பொங்கலிட்டு, அப்பொங்கலை மாடுகளுக்கு உணவாகக் கொடுப்பார்கள்.

7. கிராமங்களில் மாட்டுப் பொங்கலின்போது மாடு பிடிக்கும் விளையாட்டு நடைபெறும். காளைகளின் கழுத்தில் பணமுடிப்பைக் கட்டி, அவற்றை வெளியில் ஓடவிடுவார்கள். முரட்டுத்தனமாக ஓடும் அக்காளைகளை, உடல் வலிமை பெற்ற இளைஞர்கள் துரத்திக்கொண்டு செல்வார்கள்; பிறகு அக்காளைகளைப் பிறர் உதவியின்றிப் பிடித்து, அவற்றின் முரட்டுத்தனத்தை அடக்கிப் பண முடிப்பை அவிழ்த்துக் கொள்வார்கள். இவ்வாறு காளையை அடக்கி வெற்றி பெறுபவனைக் கிராமத்தார் பாராட்டுகின்றனர்.

8. மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் **காணும் பொங்கல்** கொண்டாடப்படுகிறது. ஏறக்குறைய ஆறு மாதங்கள்வரை ஓய்வு இன்றி உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் இந்த நாளில் தம்முடைய உறவினரையும், நண்பர்களையும் காணச் செல்கிறார்கள். அதனால்தான் இது காணும் பொங்கல் என்று கூறப்படுகிறது. காணும்பொங்க-

லன்று மக்கள் தங்கள் தொழில் துறையின் முதலாளிகளைக் கண்டு வணங்குகிறார்கள்; அவர்கள் கொடுக்கும் பரிசைப் பெற்று மகிழ்கிறார்கள்; உறவினரையும், நண்பர்களையும் கண்டு வாழ்த்துக் கூறுகிறார்கள்; தொலைவில் உள்ளவர்களுக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பியும், தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

9. இவ்வாறு நான்கு நாட்கள் தமிழரால் சிறப்பாகக் கொண்டாடப்படும் பொங்கல் விழா, மற்றைய விழாக்களைக் காட்டிலும் மேலானது என்று கூறுவது முற்றிலும் பொருந்தும்.

அரும்பத உரை

தலைசிறந்த - முதன்மையான ; நிலவும் - விளங்கும் ; புன்முறுவல் - புன்சிரிப்பு ; பொலியும் - விளங்கும் ; செய்ந்நன்றி - ஒருவர் தமக்குச் செய்த உதவி ; உறுதுணை - மிகுந்த உதவி ; ஏந்தி - தாங்கிக்கொண்டு ; கொட்டி - அடித்து ; பூரிப்பு - மகிழ்ச்சி ; பொருந்தும் - தகும்.

பயிற்சி

1. விடை எழுது :

1. தமிழர் கொண்டாடும் விழாக்களில் சிறந்தது எது ?

2. பொங்கல் விழா எப்போது கொண்டாடப்படுகிறது ? ஏன் ?

3. பொங்கல் விழா கொண்டாடப்படுவதன் காரணம் யாது ?

4. போகிப் பண்டிகையன்று மக்கள் என்ன செய்வார்கள் ?

5. பெரும்பொங்கல் எவ்வாறு கொண்டாடப்படுகிறது ?

6. தமிழர் மாடுகளை எவ்வாறு போற்றுகின்றனர் ?

7. காணும் பொங்கல் என்பது என்ன ?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

பல்வேறுவகையான, சிறப்பாக, குவியலாக, முரட்டுத்தனம், மேலானது.

3. எதிர்ப்பதங்களை இணைத்து எழுது :

பற்பல, இறுதி, புது நெல், கிராமம், வெற்றி, முதலாளி, நண்பர்.

தோல்வி, பழைய நெல், பகைவர், சிற்சில, முதல், நகரம், தொழிலாளி.

இலக்கணம்

வினைச்சொல் - வினை முற்று

கந்தன் பொங்கல் உண்டான்.

தமிழர் பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றனர்.

நான் விடுமுறையில் ஊருக்குப் போவேன்.

இவ்வாக்கியங்களில் உள்ள உண்டான், கொண்டாடுகின்றனர், போவேன் என்பன வினைச் சொற்கள். இவை முடிந்த கருத்தை உணர்த்துவதால் வினை முற்றுக்கள் ஆகும்.

உண்டான் என்பது உண்ணுதலாகிய தொழில் நிகழ்ந்ததை அறிவிக்கிறது. இது இறந்தகால வினை முற்று.

கொண்டாடுகின்றனர் என்பது அத்தொழில் நிகழ்கின்றதை அறிவிக்கின்றது. எனவே இது நிகழ்கால வினைமுற்று.

போவேன் என்பது அத்தொழில் நிகழப்போவதை உணர்த்துகிறது. இது எதிர்கால வினைமுற்று.

22. தைப் பொங்கல்

பொங்கல் இன்று பொங்கல்!
புது வருஷப் பொங்கல்!
மங்கலங்கள் பொங்க
மனையிலிடும் பொங்கல்! 1

சந்தனத்தைக் குழைத்துத்
தரையைமெழு கிடுவோம்;
சிந்தூர்த்தால் கோலம்
சேரஅதில் வைப்போம். 2

எங்கள்கண பதியை
எழுந்தருளச் செய்வோம்;
மங்கலநற் பொருள்கள்
வரிசைகொள வைப்போம். 3

பச்சைமஞ்சள் இஞ்சி
படைபடையாய் வைப்போம்;
இச்சைதரு கரும்பும்
இடையிடையே நடுவோம். 4

அகில்விறகை மாட்டி
அடுப்பில் எரிமூட்டி,
பகவன்அடி போற்றிப்
பானையேற்றி வைப்போம். 5

தங்கத்தினல் பானை
தரளம்என அரிசி
பொங்கலும்பால் பொங்கல்
புத்தமுதப் பொங்கல்! 6

பானையுமே பொங்கிப்
பால்வழியும் வேளை
வானம்எழக் குரவை
வழங்கிவலம் வருவோம். 7

கடவுட்கமு தளிப்போம்;
காகத்துக்கும் இடுவோம்;
உடனிருந்தெல் லோரும்
உண்டுமகிழ்ந் திடுவோம். 8

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

அரும்பத உரை

1. மங்கலம் - நன்மை; மனை - வீடு.
3. கணபதி - விநாயகக் கடவுள்.
4. இச்சை - விருப்பம்; இடையிடையே - நடு நடுவே.
5. மாட்டி - அடுப்பில் இட்டு; பகவன் - இறைவன்.
6. தரளம் - முத்து; புத்தமுதம் - புதிய சோறு.
7. குரவை - ஆரவாரம்; வலம் வருதல் - வலமாகச் சுற்றி வருதல்.
8. அமுது - உணவு; உடன் இருந்து - கூடியிருந்து.

பயிற்சி

1. இச்செய்யுட்களின் பொருளை உன்சொந்த வாக்கியங்களில் எழுது.
2. இவற்றைப் பிரித்து எழுது: மனையிலிடும், புத்தமுதம், உடனிருந்து.

23. கடிதத்தின் பிரயாணம்

1. குழந்தாய் பூங்கோதை, அஞ்சல்காரரிடமிருந்து என்னை ஆவலுடன் வாங்கினாய்; என்மீது உன் அண்ணன் கோபாலன் எழுதியிருந்த செய்திகளை எல்லாம் அறிந்து மகிழ்ந்தாய்; ஆனால் என்னுடைய வரலாற்றை நீ அறிவாயா? சுவை பொருந்திய என் கதையைக் கூறுகிறேன் கேள்:

2. என்னை **அஞ்சல் அட்டை** என்று மக்கள் அழைப்பார்கள். தொலைவில் உள்ளவருக்குச் செய்திகள் தெரிவிக்க விரும்பும் மக்கள் முக்காலணாவை அஞ்சல் நிலையத்தில் கொடுத்து என்னைப் பெற்றுக் கொள்வார்கள்; அவர்கள் என்னுடைய உடம்பின்மீது தாம் தெரிவிக்க வேண்டிய செய்திகளை எழுதுவார்கள். நான் அச்செய்திகளைச் சுமந்துகொண்டு சென்று, உரியவரிடம் சேர்ப்பிக்கிறேன். என்னைவிடப் பெரியவர் **அஞ்சல் உறை** என்பவர். அவர் நான் கொண்டுசெல்லும் செய்திகளைவிட அதிகமான செய்திகளைப் பத்திரமாகக் கொண்டு செல்வார். அவரை மக்கள் இரண்டணாச் செலவில் அஞ்சல் நிலையத்திலிருந்து பெறுவார்கள். எனக்குத் தம்பி ஒருவன் இருக்கிறான். அவன் என்னையும், அஞ்சல் உறையையும் போல வெளியூர்களுக்குச் செல்லமாட்டான். ஓர் ஊரின் வெவ்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குச் செய்திகளைக் கொண்டு சேர்க்கும் சிறிய பணியையே அவன் செய்கிறான். அவனுக்கு விலை அரையணா.

3. மதுரையில் வசிக்கும் கோபாலனால் எழுதப்பட்ட செய்திகளை நான் சுமந்துகொண்டு,



கடிதத்தின் பிரயாணம்

சென்னையில் வசிக்கும் உன்னிடம் எப்படி வந்து சேர்ந்தேன் என்று நீ வியப்பு அடையலாம். நான் மதுரையிலிருந்து சென்னைக்கு எவ்வாறு பிரயாணம் செய்து, உன் இல்லத்தை அடைந்தேன் என்பதை விரிவாகக் கூறுகிறேன் கேள் :

4. உன் தமையன் மதுரையில் உள்ள அஞ்சல் நிலையத்தில் முக்காலணு கொடுத்து என்னை வாங்கினுன். அவன் உனக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளை என் உடம்பின்மீது எழுதினுன்; பிறகு உன்னுடைய முகவரியை எழுதி, அஞ்சல் பெட்டியில் போட்டுவிட்டான். நான் அந்தப் பெட்டியினுள் அடைபட்டுத் திணறிக்கொண்டிருந்தேன். அப்பெட்டியினுள் என்னைப் போன்ற நண்பர் சிலரும் சிறைப்பட்டுக் கிடந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு அஞ்சல்காரர் ஒருவர் அங்கு வந்து, அப்பெட்டியைத் திறந்தார்; என்னையும் மற்றைய தோழர்களையும் எடுத்து ஒரு பையில் போட்டுக்கொண்டு, அஞ்சல் நிலையத்திற்குச் சென்ருர். அந்நிலையத்தில் இருந்த மற்ருெரு அஞ்சல்காரர் மதுரை என்ற பெயரும், தேதியும் பொருந்திய முத்திரையை என்னுடைய தலைமீது பொறித்தார்; அவர் என்னையும், என்னைப்போன்று சென்னைக்குச் செல்லவேண்டிய வேறு கடிதங்களையும் ஒரு பையில் போட்டுக் கட்டினுர். அம்மனிதர் இவ்வாறு ஒவ்வோர் ஊருக்கும் செல்லவேண்டிய கடிதங்களைத் தனித்தனியே பிரித்துப் பைகளில் போட்டுக் கட்டினுர். பைகளின் மீது அவை செல்லவேண்டிய ஊர்களின் பெயரைக் குறிப்பிட்டார்.

5. பிறகு நான் இருந்த பையும், மற்றும் பல

பைகளும் மோட்டார் வண்டியின் மூலமாகப் புகை-வண்டி நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன: நான் மதுரைப் புகைவண்டி நிலையத்தில் சிறிது நேரம் காத்திருந்தேன். பிறகு சென்னைக்குச் செல்-லும் புகைவண்டி, நிலையத்தை அடைந்தது. அவ்வண்டித் தொடரில் அஞ்சல் வண்டி என்னும் சிவப்பு நிறப் பெட்டி ஒன்று இருந்தது. அதில் இருந்தவர், நான் இருந்த பையை வாங்கிக் கொண்டார். வண்டி ஓடிக் கொண்டிருந்த போதே, அப்பெட்டியில் இருந்தவர்கள் என்னைப் போன்ற அஞ்சல்களை அவை செல்ல வேண்டிய இடம் வாரியாகப் பிரித்துப் பைகளில் கட்டினார்கள். சென்னை எழும்பூர் இரயில் நிலையத்தைப் புகை-வண்டி அடைந்தவுடன், நான் இருந்த பையை அங்கிருந்த அஞ்சல் நிலைய அதிகாரி பெற்றுக் கொண்டார்.

6. இவ்வாறு நீண்ட தூரம் பிரயாணம் செய்து அலுப்புற்றிருந்த எனக்கு அப்போதும் அமைதி கிடைக்கவில்லை. அங்கிருந்து என்னை அடைத்துக்கொண்டிருந்த பையையும், மற்றும் பல பைகளையும் அஞ்சல் நிலைய மோட்டார் வண்டி, சுமந்து கொண்டு சென்று தலைமை அஞ்சல் நிலை-யத்தை அடைந்தது. அங்கு இருந்த சிலர் பையைப் பிரித்து என்னையும், மற்றவர்களை-யும் வெளியே கொட்டினர். என் மீது சென்னை என்ற பெயரும், நான் வந்து சேர்ந்த தேதியும் முத்திரை இடப்பட்டன. பிறகு ஒருவர் என்னை-யும், என்னுடைய தோழர்களையும் தெருவாரியாய் பிரித்தார். ஒவ்வொரு தெருவிற்கும் செல்லக்கூடிய-அஞ்சல்காரர்கள், அந்தந்தத் தெருவில் உள்ளவர்

களுக்குப் போகவேண்டிய கடிதங்களை எடுத்துக் கொண்டனர். என்னை உன்னுடைய தெருவிற்கு வரும் அஞ்சல்காரர் எடுத்துக் கொண்டு வந்து, என்மேல் எழுதப்பட்டுள்ள முகவரியைப் படித்து, உன்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்.

நான் பிரயாணம் செய்த முறையைத் தெரிந்து கொண்டாய் அல்லவா? என்னைப் போலவே அஞ்சல் உறைகள், சிறு சிப்பங்கள் முதலியனவும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பிரயாணம் செய்கின்றன.

அரும்பத உரை

அஞ்சல்காரர் - தபால்காரர்; ஆவலுடன் - ஆசையுடன்; சுமந்து - தாங்கி; முகவரி - விலாசம்; அஞ்சல் பெட்டி - தபால் பெட்டி.

பயிற்சி

1. விடை எழுது:

1. அஞ்சல் அட்டையின் விலை என்ன?
2. அஞ்சல் உறையின் விலை என்ன?
3. ஒருவர் எழுதிய கடிதம் எவ்வாறு உரியவரிடம் சென்று அடைகிறது?
4. கடிதத்தின் பிரயாணத்தில் புகைவண்டி செய்யும் உதவி யாது?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது:

பத்திரமாக, பிரயாணம், முகவரி, அமைதி, தனித்தனியே.

இலக்கணம்

வினைமுற்று—வகைகள்

நான் மதுரையிலிருந்து வருகிறேன்.

நாங்கள் பள்ளிக்குச் சென்றோம்.

இவ்வாக்கியங்களில் உள்ள வருகிறேன், சென்றோம் என்பவை தன்மை இடத்திற்கு உரியவை. இவை தன்மை வினைமுற்றுக்கள் ஆகும்.

நீ சென்றாய்
நீர் சென்றீர்
நீங்கள் சென்றீர்கள்

இவற்றில் உள்ள வினைமுற்றுக்கள் முன்னிலை இடத்திற்கு உரியவை. இவை முன்னிலை வினை முற்றுக்கள் ஆகும்.

[பேசுபவர் தம்மைத் தாமே குறித்துக் கொள்வது தன்மை இடம்; தம் முன்னால் இருப்பவரைக் குறிப்பிடுவது முன்னிலை இடம்; இவ்விருவரும் அல்லாத மற்றையோரைக் குறிப்பிடுவது படர்க்கை இடம்.]

145942
சென்னை-600 008.
TB
0-,6(5)
N56

24. கடிதம் எழுதும் முறை

1. நாம் நம்முடைய உறவினர்களையும், நண்பர்களையும் காணும்போது, அவர்களோடு உரையாடி மகிழ்ச்சி அடைகிறோம். நாம் தெரிவிக்க வேண்டிய செய்திகளை அவர்களிடம் வாயினால் கூறிவிடுகிறோம். ஆனால் தொலைவில் வசிக்கும் உறவினர்களுடனும், நண்பர்களுடனும், அவ்வாறு தொடர்பு கொள்ள முடியாதல்லவா? அவ்வாறு வெளியூர்களில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு நாம் கடிதங்கள் எழுதுகின்றோம். இப்பாடத்தில் கடிதம் எழுதும் முறையைப் பற்றித் தெரிந்துகொள்.

2. நாம் முதலில் கடிதத்தில் எழுதவேண்டிய செய்திகளைத் தொடக்கம், பொருள், முடிவு என்ற மூன்று பிரிவுகளாக வகைப்படுத்திக் கொள்ள வேண்டும். கடிதத்தை எழுதத் தொடங்குவதற்கு முன்பு, அக்கடிதத்தின் தலைப்பில் அதன் இடப்புறத்தில், நமது ஊரின் பெயரை எழுதவேண்டும். அதற்கு அடுத்த வரியில் கடிதம் எழுதப்படும் தேதியைக் குறிப்பிட வேண்டும்.

3. கடிதத்தின் வலப்புற ஓரத்திலிருந்து கடிதத்தை எழுதத் தொடங்க வேண்டும். கடிதத்தின் தொடக்கத்தில், நாம் யாருக்குக் கடிதம் எழுதுகிறோமோ, அவர்களை அழைக்கின்ற மரியாதைச் சொல்லை அமைக்க வேண்டும். ஒவ்வொருவரையும் அழைக்கும் முறை வெவ்வேறு விதமாக அமைந்-

திருக்கும். உதாரணமாக, நமது உறவினரில் நம்மைவிட வயதில் முதிர்ந்த ஆண்களுக்கு எழுதும்போது **உயர்திரு, தேவரீர்** என்னும் சொற்களில் ஒன்றை மரியாதை வாசகமாகச் சேர்க்கலாம். நம்மைவிட வயதில் சிறியவர்களுக்கு எழுதும் போது **அன்புள்ள, சிரஞ்சீவி** முதலிய மொழிகளைச் சேர்த்து அழைக்கலாம். அவ்வாறே பெண்களுக்குக் கடிதம் எழுதும்போது '**அன்புள்ள**' என்னும் சொல்லைச் சேர்த்து எழுதலாம்.

4. மேற் கூறியவாறு கடிதத்தின் தொடக்கத்தில் மரியாதைச் சொற்களை அமைத்து அழைத்த பிறகு, அதற்கு அடுத்த வரியில் வணக்கத்தையும், நலத்தையும் அறிவிக்கும் சொற்களை எழுத வேண்டும். நம்மைவிட வயதில் முதிர்ந்தவர்களுக்கு எழுதும் கடிதங்களில் '**வணக்கம். நலம், நலம் அறிய விரும்புகிறேன்**', என்னும் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும். நம்மைவிடச் சிறியவர்களுக்கு எழுதும் கடிதங்களில் '**நலம் உண்டாகுக. நலம் அறிய விருப்பம்**' என்னும் சொற்களைச் சேர்த்தல் வேண்டும்.

5. இவ்வாறு கடிதத்தைத் தொடங்கிய பிறகு, நாம் அவர்களுக்கு எந்தச் செய்திகளைத் தெரிவிக்க விரும்புகிறோமோ, அவற்றைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுத வேண்டும். இதுவே கடிதத்தின் பொருள் ஆகும்.

6. கடிதத்தின் பொருளை எழுதி முடித்த பிறகு, எழுதிய செய்திகளின் கீழே சிறிது இடம் விட்டு வலது கோடியில், யாருக்குக் கடிதம் எழுதியிருக்கிறோமோ அவருக்குத் தக்கபடி மரியாதைச்

சொல்லை அமைத்து முடிக்க வேண்டும். நமது உறவினரான பெரியோர்களுக்கு எழுதும் கடிதங்களின் முடிவில் '**இங்ஙனம் தங்கள் அன்புள்ள**' என்ற சொற்களை அமைக்கலாம். உறவினர் அல்லாத பெரியோர்களுக்கு எழுதும் கடிதங்களில் **இங்ஙனம் தங்கள் உண்மையுள்ள, தங்கள் நன்றியறிதல் உள்ள, தங்கள் கீழ்ப்படிதல் உள்ள** என்பனவற்றில் ஒன்றைத் தகுதிக்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம். சிறியோர்களுக்கு எழுதும் கடிதங்களின் முடிவில் '**உன் அன்புள்ள**' என்ற முடிவுச் சொற்களை அமைக்கலாம். ஒவ்வொரு கடிதத்திலும், முடிக்கும் சொல்லுக்குப் பிறகு கடிதம் எழுதுபவர் தம்முடைய கையெழுத்தை எழுதவேண்டும்.

7. கடிதம் எழுதி முடித்த பிறகு, அதன்மீது, அது யாருக்கு எழுதப்பட்டதோ, அவருடைய முகவரியை எழுதவேண்டும். முகவரி எழுதுவதில் முக்கியமான சில விதிகளைக் கவனிக்கவேண்டும்: விலாசதாரரின் பெயரை, அவருடைய முதலெழுத்துக்களுடன் பெரிய எழுத்தில் அழகாக எழுதவேண்டும். பிறகு விலாசதாரரின் தொழிலையும் குறிக்கவேண்டும். அதன் பிறகு விலாசதாரரின் வீட்டு எண், தெருவின் பெயர், அது உள்ள ஊர், அந்த ஊர் உள்ள ஜில்லா, இராச்சியம் ஆகியவற்றை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதவேண்டும். அவற்றின் விலாசதாரரின் ஊரைக் கோடிட்டுக் காட்டவேண்டும். முகவரியைப் பென்சிலால் எழுதாமல் பேனாவில் அழகாகப் பெரிய எழுத்தாக எழுதவேண்டும். தபால் பில்லை கடிதத்துக்கு ஏற்றபடி ஒட்டப்பட வேண்டும்.

8. மேலே குறிப்பிடப்பட்ட முறைகளைப் பின்பற்றி மாதிரிக் கடிதம் ஒன்று இங்கு எழுதப்பட்டுள்ளது. அதைப் போல நீயும் எழுதப் பழகு.

சென்னை,
2—10—56.

உயர்திரு மாமா அவர்களுக்கு,

வணக்கம். நலம். நலம் அறிய விரும்புகின்றேன். நான் என்னுடைய பாடங்களை நன்றாகப் படித்துக்கொண்டு வருகிறேன். எங்கள் பள்ளியில் இப்போது காலாண்டுத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரை நடைபெற்ற தேர்வுகள் யாவற்றிலும் நன்றாக எழுதியிருக்கிறேன். இன்னும் நான்கு நாட்களில் தேர்வுகள் யாவும் முடிவடைகின்றன. அதன் பிறகு விடுமுறையில் ஊருக்கு வருகிறேன். அவ்விடத்தில் மாமி, சந்திரன், பூங்கோதை முதலிய அனைவருடைய நலத்தையும் அறிய விரும்புகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்பிற்கு உரிய,
சி. வெற்றிவேலன்.

முகவரி :

திருவாளர் மு. சுந்தரம் பிள்ளை அவர்கள்,
தமிழ் ஆசிரியர்,
4, தேரடி கடைத் தெரு,
சிதம்பரம்,
தென் ஆர்க்காட்டு மாவட்டம்.

அரும்பத உரை

உறவினர் - சுற்றத்தார்; உரையாடி - கலந்து பேசி ; தொலைவில் - தூரத்தில் ; விளிக்கின்ற - அழைக்கின்ற ; முதிர்ந்த - மூத்த ; அஞ்சல் நிலையம் - தபால் ஆபீஸ் ; தேர்வு - பரீட்சை.

பயிற்சி

1. விடை எழுது :

1. நாம் ஏன் கடிதங்களை எழுதுகிறோம்?

2. கடிதத்தின் செய்திகளை எவ்வாறு வகைப்படுத்திக்கொள்ள வேண்டும்?

3. கடிதங்களுக்குத் தொடக்கம் அமைப்பது எப்படி?

4. உறவினருக்கு எழுதும் கடிதங்களை எவ்வாறு தொடங்க வேண்டும்?

5. உறவினர் அல்லாத மற்றையோருக்கு எழுதும் கடிதங்களுக்கு எவ்வாறு முடிவு கொடுக்க வேண்டும்?

6. முகவரி எழுதும் முறையை எழுது.

7. உன் நண்பருக்கு எழுதும் முறையில் ஒரு கடிதம் எழுது.

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

உரையாடி, மரியாதை, தெளிவாக, வரிசையாக, யாவற்றிலும்.

3. எதிர்ப்பதங்கள் எழுது :

வலப்புறம், மரியாதை, பெரியோர், தெளிவாக, முன்புறம், மேற்புறம்.

இலக்கணம்

வினைமுற்று வகைகள்

படர்க்கை வினைமுற்று :

இது ஆண்பால் வினைமுற்று, பெண்பால் வினைமுற்று, பலர்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று என ஐந்து வகைப்படும்.

உதாரணம் :

1. கண்ணன் கடிதம் எழுதினான்.—ஆண்பால் வினைமுற்று.
2. கமலம் பாட்டுப் பாடினாள்.—பெண்பால் வினைமுற்று.
3. மாணவர்கள் பாடம் படித்தார்கள்.—பலர்பால் வினைமுற்று.
4. கடிதம் வந்தது.—ஒன்றன்பால் வினைமுற்று.
5. கடிதங்கள் வந்தன.—பலவின்பால் வினைமுற்று.

25. அன்பின் வெற்றி

காட்சி 1

இடம் : பாதிரியார் இல்லம்.
காலம் : இரவு ஒன்பது மணி.
நடிகர்கள் : பாதிரியார், முனியாண்டி, ஜோசப் என்ற வேலைக்காரன்.

[மெய்ஞ்ஞானபுரம் என்ற சிற்றூரில் மாசிலாமணியார் என்னும் பாதிரி ஒருவர் இருந்தார். அவர் கருணை உள்ளம் பொருந்தியவர்; எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாதவர். ஒரு நாள் மாலை முனியாண்டி என்ற பெயரைக் கொண்ட ஒருவன் அவ்வூரினுள் நுழைந்தான். அவன் பன்னிரண்டு ஆண்டுகள் சிறையில் இருந்தவன்; கொடிய கொள்ளைக்காரன் என்று மக்களால் கருதப்பட்டவன். அச்சம் தரும் தோற்றத்தை உடையவன். அந்த மனிதனுக்கு மெய்ஞ்ஞானபுர மக்கள் உணவும், இருக்க இடமும் கொடுக்க மறுத்துவிட்டார்கள். பசியினால் களைப்பு அடைந்த அவன் பாதிரியார் இல்லத்தை அடைகிறான்.]

முனியாண்டி : (வெறுப்புடன்) என்ன உலகம்? ஒரு முறை சிறைக்குச் சென்றவன், பின்னர் திருந்தவே வழி இல்லையா? என்னை ஏன் இந்த மக்கள் வெறுக்கிறார்கள்? இவர்களுக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? காசு கொடுத்தாலும் உணவு அளிக்க மறுக்கின்றார்களே? சிறிது நேரம் அயர்ந்து உறங்கவும் இடம் தர மறுக்கின்றார்களே? ஐயோ! பசி மயக்கம் தாங்க முடியவில்லையே! நான் என்ன செய்வேன்! (பாதிரியார் வீட்டைப் பார்த்து விட்டு) இந்த ஊரில் எல்லா வீடுகளிலும் கேட்டுப்

பார்த்துவிட்டேன். இது ஒன்றுதான் மிச்சமாக இருந்தது. இங்கும் கேட்டுவிடுகிறேன். (கதவைத்' தட்டிக்கொண்டு) ஐயா, ஐயா.

மாசிலாமணியார் : (கதவைத் திறந்து, முனியாண்டியைப் பார்த்து விட்டு) யார் அப்பா நீ? இந்த நேரத்தில் இங்கு வரக் காரணம் என்ன ?

முனி : (கண்களில் நீர் வழிந்துஓட) ஐயா, நான் ஓர் அநாதை ; பன்னிரண்டு ஆண்டுகளைச் சிறையில் கழித்த பயங்கரக் கைதி. என் பெயர் முனியாண்டி. இரண்டு நாட்களுக்கு முன்புதான் சிறையிலிருந்து விடுதலை அடைந்தேன். எனக்கு உணவு அளிப்பவர் எவரும் இலர். எல்லாரும் என்னைக் கண்டு அஞ்சுகிறார்கள். சோற்றைக் கண்ணால் கண்டு இரண்டு நாட்கள் ஆகின்றன. பசி மயக்கத்தினால் எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

மாசிலா : (இரக்கத்துடன்) அப்பா, முனியாண்டி, வருந்தாதே. உனக்கு நான் உணவு அளிக்கிறேன். உள்ளே வா.

முனி : (வியப்புடன்) சுவாமி! என்னையா உள்ளே அழைக்கின்றீர்கள் ? மக்கள் எல்லோரும் கண்டு அஞ்சிய இந்த மாபாவிக்கு நீங்கள் உண்மையில் இரங்குகின்றீர்களா ?

மாசிலா : (நகைத்துக் கொண்டு) முனியாண்டி, தவறுவது மனிதனுக்கு இயற்கைதானே ! நீ ஒரு முறை தவறு செய்திருக்கலாம். அதற்காக உன்னை வெறுப்பது எவ்வாறு பொருத்தமாகும் ? நீ எப்படிப்பட்டவனாக இருந்தாலும், அதைப்பற்றி நான் அஞ்சவில்லை. ஒரு மனிதனுக்கு ஆபத்து நேர்ந்தபோது, அவனுக்கு உதவிபுரிய வேண்டியது மனிதனின் கடமை அல்லவா ?

எதைப்பற்றியும் யோசிக்காதே. உள்ளேவா. கை-கால்களைச் சுத்தம் செய்துகொள்.

முனி: (மகிழ்ச்சியுடன்) சுவாமி! தங்களின் கருணையே கருணை!

மாசிலா: (வேலைக்காரனை நோக்கி) ஜோசப், நம் வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருக்கிறார். அவருக்கும், எனக்கும் விரைவில் உணவு பரிமாற ஏற்பாடு செய்.

ஜோசப்: (முனியாண்டியைப் பார்த்துவிட்டு, வெறுப்புடன்) சுவாமி, இவரா விருந்தாளி?

மாசிலா: ஆம். விரைவில் உணவு பரிமாறு.

[ஜோசப் முகத்தைச் சுளித்துக்கொண்டு போகிறான். மேசையின்மீது, இரண்டு வெள்ளித் தட்டுகளில் உணவு பரிமாறப்படுகிறது. முனியாண்டியும், மாசிலாமணியாரும் உணவு உண்ணுகின்றனர். முனியாண்டியின் கண்கள் வெள்ளித் தட்டையே நோக்குகின்றன.]

முனி: (தனக்குள்) ஆகா! இந்தத் தட்டுக்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. ஒவ்வொரு தட்டும் குறைந்தது நூறு ரூபாய் பெறும்! இவை நமக்குக் கிடைத்தால் எவ்வளவு பணம் கிடைக்கும்?

மாசிலா: முனியாண்டி, என்ன யோசிக்கிறாய்?

முனி: ஒன்றுமில்லை, சுவாமி. உணவின்றி வருந்திய எனக்கு வயிறு ஆர உணவு அளித்தீர்கள். இப்பொழுது நள்ளிரவு நேரமாகி விட்டது. எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. இன்றிரவு நான் உறங்குவதற்கு நீங்கள் தாம் இடம்தர வேண்டும்.

மாசிலா: முனியாண்டி, உன் விருப்பம்போல் செய். இன்றிரவு இங்கே தங்கியிரு. நாளைக் காலையில் சிற்றுண்டி சாப்பிட்டபின் செல்லலாம்.

(ஓர் அறையைக் காட்டி) இந்த அறையில் உள்ள கட்டிலில் படுத்துக்கொள். (போகிறார்.)

[திரை]

[அன்று நள்ளிரவில் முனியாண்டி, பாதிரியார் இல்லத்தில் இருந்த இரண்டு வெள்ளித் தட்டுக்களைத் திருடிக்கொண்டு, அங்கிருந்து ஓடிவிடுகிறான்.]

காட்சி 2

இடம் :	பாதிரியார் வீடு
காலம் :	காலை
நடிகர்கள் :	பாதிரியார், ஜோசப், முனியாண்டி, சேவகர் இருவர்.

[பாதிரியார் தம்முடைய அறையில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கிறார். ஜோசப் வேகமாக அவர் இருக்கும் இடத்திற்கு ஓடி வருகிறான்.]

ஜோசப் : (பதட்டத்துடன்) சுவாமி, நம்முடைய வெள்ளித் தட்டுகள் இரண்டும் காணவில்லை. நேற்று இரவு இங்குத் தங்கி இருந்த முனியாண்டியும் ஓடிவிட்டான். அவன்தான் தட்டுக்களைத் திருடிக்கொண்டு போயிருப்பான்.

பாதிரியார் : (நிதானமாக) என்ன ? வெள்ளித் தட்டுக்களா காணுமல் போய்விட்டன ?

ஜோசப் : ஆம். சுவாமி. அந்த அயோக்கியனை எனக்குத் தொடக்கத்தில் இருந்தே பிடிக்கவில்லை. நீங்கள் அவனுக்கு இடம் கொடுத்தீர்கள். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்துவிட்டான் அந்த உலுத்தன். நான் இப்பொழுதே போலீஸ் நிலையத்திற்குச் சென்று அறிவிக்கிறேன்.

பாதிரியார் : (இரக்கத்துடன்) ஜோசப், போலீசுக்குத் தெரிவிக்கவேண்டா. பாவம்! அவன் ஓர் ஏழை. நன்மையும், தீமையும் அறியா-தவன். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை அடைந்திருக்கும் அவனை மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட-வேண்டா. அவன் தட்டுக்களை எடுத்துச் சென்ற-தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அவன் என்னிடம் சொல்லாமல் போய்விட்டானே என்று-தான் நான் வருத்தப்படுகிறேன். முனியாண்டி என்னிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தால், ஒரு வெள்ளிக் குவளையையும் அவனுக்குக் கொடுத்-திருப்பேன்.

ஜோசப் : (வியப்புடன்) சுவாமி! தங்க-ளுடைய போக்கு மிகவும் விசித்திரமாக இருக்-கிறதே! ஆத்திரப்படவேண்டிய நேரத்தில் அனு-தாபப் படுகிறீர்களே!

[இச்சமயத்தில் சேவகர் இருவர் முனியாண்டிக்கு விலங்கிட்டு, அவனை அழைத்துக்கொண்டு அங்கு வரு-கின்றனர். முனியாண்டி வெட்கத்தினலும், பயத்தின-லும் தலைகுனிந்து நிற்கிருன். அவர்கள் பாதிரியாருக்கு வணக்கம் செலுத்துகிருர்கள்.]

ஒரு சேவகர் : (பாதிரியாரை நோக்கி) சுவாமி, தங்கள் வீட்டில் நேற்றிரவு ஏதேனும் களவு போய்-விட்டதா?

பாதிரியார் : இல்லையே. என் வீட்டில் யார் திருடப் போகின்ருர்கள்?

மற்ருெரு சேவகர் : (தம் கையில் இருந்த வெள்ளித் தட்டுக்களைக் காண்பித்து) இத்தட்டுக்-களைப் பாருங்கள். இவற்றில் உங்கள் பெயர்

செதுக்கப்பட்டிருக்கிறதே? இவை எப்படி இவ-னுக்குக் கிடைத்தன?

பாதிரியார் : (சிரித்துக்கொண்டு) ஓகோ, அதைப்பற்றிக் கேட்கின்றீர்களா? இவர் நேற்-றிரவு என்னுடைய விருந்தினராக இருந்தார். நான்தான் இந்தத் தட்டுக்களை இவரிடம் கொடுத்-தேன். மேலும் ஒரு வெள்ளிக் குவளையும் இவருக்-குக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். அதற்குள் இவர் போய்விட்டார். நல்லவேளையாக உங்கள் கண்ணில் பட்டுவிட்டார். உங்களுக்கு மிகவும் நன்றி. இவர் கைவிலங்குகளை நீக்கி விடுங்கள்.

[பாதிரியாரின் சொற்களைக் கேட்ட முனியாண்டியின் உள்ளத்தில் வியப்பும், துக்கமும், வெட்கமும் நிரம்பின.]

சேவகர்கள் : (பாதிரியாரை நோக்கி) சுவாமி, நாங்கள் இவரைப் பற்றித் தவருக நினைத்துவிட்-டோம். மன்னிக்கவும்.

[முனியாண்டியை விடுதலை செய்துவிட்டுப் போகின்-றனர்.]

முனியாண்டி : (பாதிரியாரின் கால்களில் வீழ்ந்து,) சுவாமி, என்னை மன்னித்து விடுங்கள்! அண்ணலே! இந்த அற்பன் செய்த தவற்றை மன்னித்து விடுங்கள்! குணக்குன்றே! இந்தக் கொடியவனை மன்னித்தேன் என்று தங்கள் திரு-வாயால் ஒரு வார்த்தை கூறுங்கள்.

[கதறி அழுகிருன்]

பாதிரியார் : அப்பா. வருந்தாதே. உன்-னுடைய தீமையை நீ உணர்ந்து நல்லவனுகத் திருந்தினுல் அதுவே போதுமானது.

முனியாண்டி: சுவாமி, நான் திருந்திவிட்டேன். இனி ஒருக்காலும் தீயவழியில் செல்லமாட்டேன். முனியாண்டியின் இழி குணத்தைத் தங்கள் அன்பு வென்றுவிட்டது. அவன் நல்லவனாக மாறிவிட்டான்.

பாதிரியார்: (உள்ளே சென்று, வெள்ளிக்குவளையைக் கொண்டுவந்து) முனியாண்டி, வெள்ளித் தட்டுகளுடன், இந்தக் குவளையையும் நீ எடுத்துக்கொள்.

முனியாண்டி: (அச்சத்துடன்) சுவாமி, வேண்டா. இவை தங்களுக்கு உரியவை.

பாதிரியார்: (நகைத்துக் கொண்டு) ஆம். இவை என்னுடையவை என்பதில் சந்தேகம் இல்லை. என் அன்பு வெற்றி பெற்றதற்கு அறிகுறியாக, இவற்றை உனக்கு நான் கொடுக்கிறேன். மறுக்காமல் பெற்றுக்கொள். இனிமேல் நல்லவனாக இந்த உலகத்தில் வாழ்க்கை நடத்துவாயாக.

[முனியாண்டி அவற்றை எடுத்துக்கொண்டு, பாதிரியாரை வணங்கிச் செல்கின்றான்.]

[திரை]

அரும்பத உரை

கருணை - இரக்கம்; அனாதை - எவ்வித துணையும் இல்லாதவன்; பயங்கரம் - கொடுமை; மாபாவி - மிகவும் கொடியவன்; விருந்தினர் - ஒருவர் வீட்டிற்குப் புதியவராய் வருபவர்; வயிறு ஆர - வயிறு நிறையும்படி; புசி - உண்ணுக; ருசியுள்ள - சுவை பொருந்திய; சிற்றுண்டி - காலை உணவு; நள்ளிரவில் - நடு இரவில்; அயோக்கியன் - தீயவன்; இரண்டகம் - வஞ்சனை; அனுதாபப்படுதல் - இரக்கம் அடைதல்; அண்ணல் -

தலைவர் ; அற்பன் - இழிந்தவன் ; தவற்றை - குற்றத்தை ; குணக்குன்று - நல்லொழுக்கத்தில் உயர்ந்தவர்; திருவாய் - அழகிய வாய் ; அரக்ககுணம் - கொடிய பண்பு ; அறிகுறி - அடையாளம்.

பயிற்சி

1. விடை எழுது :

1. மாசிலாமணியார் யாவர்? அவருடைய பண்புகள் யாவை ?

2. முனியாண்டியின் குணங்களை எழுது.

3. அவனைக் கண்டு மக்கள் ஏன் அஞ்சினர்கள் ?

4. முனியாண்டி மாசிலாமணியாரிடம் கேட்டுக்கொண்டது யாது?

5. வெள்ளித் தட்டுக்களைக் கண்ட முனியாண்டி என்ன எண்ணினன் ?

6. முனியாண்டி ஓடிவிட்டதை அறிந்த மாசிலா மணியார் என்ன கூறினர் ?

7. முனியாண்டியைச் சேவகர் பிடித்துக் கொண்டது எதனல் ?

8. அவன் எவ்வாறு விடுதலை செய்யப்பட்டான் ?

9. அன்பு எவ்வாறு வெற்றி பெற்றது ?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

பயங்கரம், இயற்கை, வெட்கம், தவருக, சந்தேகம்.

3. எதிர்ப்பதங்கள் எழுது :

வெறுப்பு, இயற்கை, நள்ளிரவு, வேகமாக, பதட்டத்துடன், கொடியவன்.

4. இடஞ்சுட்டி எழுது :

1. சோற்றைக் கண்ணல் கண்டு இரண்டு நாட்கள் ஆகின்றன.

2. இவரா விருந்தாளி !

3. இவை நமக்குக் கிடைத்தால் எவ்வளவு பணம் கிடைக்கும்.

4. போலீசுக்குத் தெரிவிக்க வேண்டா.

5. மறுக்காமல் பெற்றுக் கொள்.

இலக்கணம்

வினைமுற்று—பயிற்சி

இப்பாடத்திலிருந்து தன்மை வினைமுற்றுக்கள் நான்கும், முன்னிலை வினைமுற்றுக்கள் மூன்றும், படர்க்கை வினைமுற்றுக்கள் ஐந்தும் எழுது.

பெயர் எச்சம்

1. மக்களுக்குத் தொண்டு புரிந்த பாதிரியார்
2. நான் படிக்கின்ற புத்தகம்

புரிந்த, படிக்கின்ற, என்னும் வினைகள் தொழில் முடிவு பெற்றதை உணர்த்தவில்லை. எனவே இவை எச்சங்கள். இந்த எச்சங்கள் பெயரைக் கொண்டு முடிந்திருப்பதால் பெயரெச்சங்கள் ஆகும்.

26. மூன்று வினுக்களும் முறையற்ற விடைகளும்

1. வட இந்தியாவில் பஞ்சாப் இராச்சியத்தில் உள்ள ஒரு சிற்றூரில் ஜெயசிங்கு என்னும் பெயர் கொண்ட ஒருவன் இருந்தான். அவன் உடல் வலிமை பெற்றுச் சிறந்த வீரனுக விளங்கினுன். அவன் படையில் சேர்ந்து பணிபுரிய விரும்பினுன். எனவே தன்னைப் படைவீரனுகச் சேர்த்துக்கொள்ளும் இராச்சியத்தை தேடிக்கொண்டு அலைந்து, இறுதியில் தமிழ் நாட்டை அடைந்தான். அவனுக்கு அப்பொழுது வயது இருபத்து ஐந்து.

2. அக்காலத்தில் தமிழ் நாட்டில் பல்லவர்கள் சிறப்புற்று விளங்கினுர்கள். அவ்வமிசத்தைச் சேர்ந்த மன்னர் ஒருவர் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தார். காஞ்சீபுரத்திற்கு வந்து சேர்ந்த ஜெயசிங்கு, பல்லவ இராச்சியத்தின் சேனுதிபதியைக் கண்டு, தன்னுடைய வீரத்தைப் பற்றி எடுத்துரைத்துத் தன்னைப் படையில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினுன். அவனுடைய உடல் தோற்றத்தைக் கண்ட சேனுதிபதி, அவனைத் தமது படையில் சேர்த்துக் கொண்டார்.

3. ஜெயசிங்கு படையில் சேர்ந்த ஆறு மாதங்களுக்குப் பின்னர் மன்னருடைய பிறந்த நாள் வந்தது. ஒவ்வோர் ஆண்டிலும் அந்த நாளில் அரசர் தம்முடைய படை வீரர்களையும், போர்க் கருவிகளையும் பார்வையிடுவது வழக்கம். அவர் படை வீரரைக் காணும்போது ஒவ்வொருவரிடமும்

மூன்று கேள்விகளை முறையாகக் கேட்பார். அவற்றுள் முதல் கேள்வி '**உன்னுடைய வயது என்ன**'? என்பது. இரண்டாம் கேள்வி '**நீ எத்தனை ஆண்டுகளாகப் போர் வீரனாக இருக்கிறாய்**'? என்பது. அதற்கு அடுத்த கேள்வி '**உனக்கு உணவும், உடையும் ஒழுங்காகக் கிடைக்கின்றனவா**?' என்பதாகும்.

4. மன்னருடைய பிறந்தநாள் விழாவிற்கு உரிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அவ்விழாவிற்கு முதல் நாள் சேனாதிபதி ஜெயசிங்கை வரவழைத்தார். அவன் வேற்று நாட்டினன் என்பதையும் தமிழ்மொழி அவனுக்குத் தெரியாது என்பதையும் அறிந்திருந்த அவர் அவனை நோக்கி, அவன் பாஷையில் "ஜெயசிங்கு, நாளை மன்னர் உன்னிடம் வரும்போது மூன்று கேள்விகளைக் கேட்பார். நீ முதல் கேள்விக்கு 'இருபத்தைந்து ஆண்டுகள்' என்பதை விடையாகக் கூறவேண்டும். அடுத்த கேள்விக்கு 'ஆறு மாதங்கள்' என்றும், மூன்றாம் கேள்விக்கு 'ஆம்' என்றும் பதில் அளிக்க வேண்டும். மறந்துவிடாதே" என்று கூறி அவற்றை அவனுக்குத் தமிழில் கற்பித்து அனுப்பினார். ஜெயசிங்கு அச்சொற்களின் பொருளை அறியாவிட்டாலும், அவற்றை முறைப்படி அவன் மனப்பாடம் செய்துகொண்டான்.

5. மறுநாள் காஞ்சீபுரம் விழாக்கோலம் கொண்டிருந்தது. 'மன்னர் நீடூழி வாழ்க!' என்று மக்கள் வாழ்த்தினர். ஆலயங்களில் சிறப்பாகப் பூசைகள் செய்யப்பட்டன. மன்னர் பட்டத்து யானை மீது அமர்ந்து பவனி வந்தார்; பின்னர்

படைக்கலச் சாலைக்குச் சென்று, போர்க் கருவிகளைப் பார்வையிட்டார்; இறுதியில் போர் வீரர்களின் அணிவகுப்பைப் பார்வையிட வந்தார். மன்னருடன் சேனாதிபதியும் வந்துகொண்டிருந்தார். மன்னர் ஒவ்வொரு போர் வீரனிடமும், தாம் வழக்கமாகக் கேட்கும் மூன்று கேள்விகளையும் முறைப்படி கேட்டுக்கொண்டு வந்தார். ஒவ்வொரு வீரனும் பணிவுடன் விடை கூறினான்.

6. அரசர் ஜெயசிங்கு இருந்த இடத்தை அணுகியதும், வழக்கத்திற்கு மாறாக, அக்கேள்விகளை முறை மாற்றிக் கேட்கத் தொடங்கினார். முதலில் அரசர் 'நீ எத்தனை ஆண்டுகளாகப் போர் வீரனாக இருக்கிறாய்?' என்று கேட்டார். பாவம்! ஜெயசிங்கு மன்னருடைய கேள்விகளின் முறை மாறியிருப்பதை எப்படி அறிவான்? அவன் உடனே '**இருபத்து ஐந்து ஆண்டுகள்**' என்று பதில் அளித்தான். மன்னருக்கு வியப்பு உண்டாயிற்று. இளைஞனாக இருக்கும் இவன் எவ்வாறு இருபத்தைந்து ஆண்டுகள் போர் வீரனாக இருந்திருக்க முடியும்? என்று எண்ணினார்.

7. அதற்கு அடுத்தபடி, "உன்னுடைய வயது என்ன?" என்று கேட்டார். ஜெயசிங்கு சட்டென்று ஆறு மாதங்கள் என்று பதில் கூறினான். அதனைக் கேட்டதும் மன்னர் சினங்கொண்டார். அவன் தம்முடைய வினாக்களுக்கு வேண்டுமென்றே குறும்புத் தனமாக விடை அளிப்பதாக அவர் எண்ணினார். உடனே உரத்த குரலில் 'என்னை முட்டாள் என்று நினைத்து இப்படிப் பதில் கூறுகிறாயா?' என்றார். ஜெயசிங்கு 'ஆம்' என்று கூறினான்.

8. மன்னருக்கு மிகுந்த ஆத்திரம் உண்டா-யிற்று. அவர் தம் அருகில் இருந்த சேனுதிபதியை மிகுந்த சினத்துடன் நோக்கினர். மன்னர் வினுக்-களை மாற்றிக் கேட்கத் தொடங்கியது முதலே மனக்கலக்கம் அடைந்திருந்த சேனுதிபதி, அவ-ரிடம் நடந்த செய்திகள் எல்லாவற்றையும் கூறித் தன்னையும், எவ்விதக் குற்றமும் செய்யாத ஜெய-சிங்கையும் மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார். உண்மையை உணர்ந்த மன்னர் சினம் நீங்கி, மகிழ்ச்சி பெற்ருர். விந்தையான அந்நிகழ்ச்சி அவருக்கு நகைப்பை விளைவித்தது. ஜெயசிங்கும் பிறகு நிகழ்ந்ததை அறிந்து வருந்தினன். அதன் பிறகு அவன் தமிழைக் கற்று, அம்மொழியை நன்கு பேசவும், எழுதவும் அறிந்துகொண்டான்.

அரும்பத உரை

படை - சேனை; சேனுதிபதி - படைத் தலைவன்; வேற்று நாட்டினன் - வேறு நாட்டைச் சேர்ந்தவன்; கோலம் - அழகு; நீடுழி - நீண்டகாலம்; பவனி - ஊர் வலம்; அணிவகுப்பு - போர் வீரர்கள் வரிசை வரிசை-யாக நிற்றல்; அணுகுதல் - நெருங்குதல்; மாற்றம் - மாறுதல்; விந்தை - வியப்பு.

பயிற்சி

1. விடை எழுது :

1. ஜெயசிங்கு என்பவன் யாவன்?

2. அவன் ஏன் காஞ்சீபுரத்திற்கு வந்தான்?

3. அவன் எவ்வாறு பல்லவநாட்டுப் படையில் சேர்ந்தான்?

4. அரசன் படைவீரரிடம் கேட்கும் கேள்விகள் யாவை?

5. ஜெயசிங்கு கூறிய விடைகள் ஏன் மன்னருக்-குச் சினத்தை உண்டாக்கின?

6. மன்னர் சினங்கொண்டபோது, சேனுதிபதி யாது செய்தார்?

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :

இராச்சியம், ஒவ்வொருவரிடமும், மனப்பாடம், அணிவகுப்பு, வழக்கமாக, மாற்றம், குறும்புத்தனமாக.

இலக்கணம்

வினையெச்சம்

1. ஜெயசிங்கு படையில் **சேர்ந்து** பணிபுரிய விரும்பினுன்.
2. மன்னர் சேனுதிபதியைப் **பார்த்துச்** சினந்தார்.
3. நான் பாடத்தைப் **படித்து** முடித்தேன்.

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் இருப்பவை எச்ச வினைகள் ஆகும். இவை வினைச்சொல்லைக் கொண்டு முடிவு பெறுவதால் **வினையெச்சங்கள்** எனப்படும்.

இப்பாடத்தின் முதல் இரண்டு பத்திகளிலிருந்து ஐந்து வினை எச்சங்களை எடுத்து எழுது.

இவற்றைத் தெரிந்துகொள் :

பெயர், வினை வேறுபாடு

சொல்	பெயர்ப் பொருள்	வினைப் பொருள்
குறி	அடையாளம்	குறித்துவை
பாய்	படுக்க உதவுவது	தாண்டு
அலை	நீரில் தோன்றும் அலை	சுற்றித் திரி
கூறு	பகுதி	சொல்
ஏறு	காளை	ஏறிச் செல்
உரை	பொருள்	சொல்
பற்று	ஆசை	பிடித்துக் கொள்

இவ்வாறு உனக்குத் தெரிந்த சொற்களில் பெயர்ப்பொருளிலும், வினைப் பொருளிலும் காணப்படும் வேறுபாடுகளை எழுது.

செய்யுட் பாடங்கள்

1. வாழ்த்துப் பகுதி

உருவமில் இறைவன் ஒருவன் என்றே
அருளிய முகம்மது பெருநபி வாழி!
'நேசி பகைவரை' என்று பேசி
ஆணி அறைந்த மாணிலர் இடத்தும்
இரக்கம் காட்டிப் பரக்கச் சிலுவையில்
நின்ற கிறிஸ்து அன்பு வாழி!
அருளறம் வளர்த்த அருகன் வாழி!
ஒருமையில் நின்று தருமம் உணர்த்திய
சத்திய ஞானப் புத்தன் வாழி!
அமரன் அழகுக் குமரன் வாழி!

—திரு. வி. கலியாண சுந்தரனார்

குறிப்புரை

உருவம் இல் - உருவமில்லாத; இறைவன் - கடவுள்; நேசி - விரும்பு; அறைந்த - அடித்த; (மாண் + இலர்) மாணிலர் - பெருமையற்றவர்; பரக்க - புகழ் பரவ; அருள் - கருணை; அறம் - தருமம்; அருகன் - சமண மதத்தினரின் கடவுள்; சத்தியம் - உண்மை; ஞானம் - அறிவு; அமரன் - அழிவற்றவன்; குமரன் - முருகக் கடவுள்; வாழி - வாழ்க.

2. நீதிப் பகுதி

(1) நன்னெறி

உள்ளம் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு. 1

தங்குறை தீர்வுள்ளார், தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் ;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா(து) உலகின்
நிறையிருளை நீக்குமே(ல்) நின்று. 2

எந்தைநல் கூர்ந்தான் இரப்பவர்க்கீந்(து) என்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 3

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே;—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர் வரவால் பொங்குங் கடல். 4

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள் ;
மற்றையர் தாமென்றும் மதியாரே;—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். 5

—சிவப்பிரகாசர்

குறிப்புரை

சிவப்பிரகாசர் சைவ மதத்தைச் சேர்ந்தவர். துறவற வாழ்க்கையை மேற்கொண்டவர். முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். இந்நூலில் அவர் மக்கள் மேற்கொள்ள வேண்டிய நல்லொழுக்க வழிகளைக் கூறியுள்ளார்.

1. உள்ளம் கவர்ந்து - மனத்தைத் தன் வசப்படுத்திக்கொண்டு ; ஓங்குசினம் - வளர்கின்ற கோபம் ; தடம் கரை - பெரிய அணை ; பேர்த்து - உடைத்து ; விளம்பு - சொல்லுக.

2. தம்குறை - தம்முடைய துன்பம்; தீர்வு - நீக்குதலை; உள்ளார் - நினையாதவராய்; வெம்குறை - கொடிய துன்பம்; விழுமியோர் - சிறந்தோர்; திங்கள் - சந்திரன்; கறையிருள் - களங்கமாகிய இருட்டு; மேல் நின்று - ஆகாயத்தில் நின்று.

3. எந்தை - எங்கள் தந்தை; நல்கூர்ந்தான் - வறுமை அடைந்தான்; ஈகை - கொடை; பைந்தொடீ - பசும்பொன்னால் ஆகிய வளையலை அணிந்தவளே; அரம்பை - வாழை;

4. இருநீர் - பெரிய நீராகிய கடல்; வியன் உலகம் - அகன்ற உலகம்; வன்சொல் - கடுஞ்சொல்; அதிர்வளை - ஒலிக்கும் வளையல்; அழல்கதிர் - வெப்பம் பொருந்திய கிரணங்களையுடைய சூரியன்; தண் - குளிர்ச்சி; வரவு - வருகை.

5. காமுறுவர் - விரும்புவர்; மேன் மக்கள் - பெரியோர்; புளிங்காடி - புளித்த கள்; வேண்டும் - விரும்பும்.

(2) நீதி வெண்பா

தாமரை, பொன், முத்துச், சவரங், கோ ரோசனை, பால்,
பூமருதேன், பட்டுப், புனுகு, சவ்வா(து),—ஆம் அழல் மற்(று)
எங்கே பிறந்தாலும் எள்ளாரே; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்? 1

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே;—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்ற மறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். 2

ஈக்கு விடந்தலையில் எய்தும்;இருந் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே ;—நோக்கரிய
பைங்கண் அரவுக்குவிடம் பல்லளவே ; துர்ச்
சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். 3

கர்ப்பூரம் போலக் கடலுப்(பு) இருந்தாலும்
கர்ப்பூரம் ஆமோ கடலுப்பு?—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். 4

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர்;
ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே;—வெற்றி
பெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே; விரிபசும்பொன்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி? 5

குறிப்புரை

இந்நூலின் ஆசிரியரைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கவில்லை.

1. சவரம் - கவரி, சாமரை ; பூமருதேன் - பூவில் பொருந்தியுள்ள தேன் ; அழல் - நெருப்பு ; எள்ளார் - இகழார்.

2. கருமம் - செயல் ; தேர்ந்து - ஆராய்ந்து ; புரிவதன்றி - செய்வதல்லாமல் ; மனத்தாபம் - மனவருத்தம் ; செய்ய - நல்ல ; நகுலன் - கீரிப்பிள்ளை ; மறைப்பொற்கொடி - அந்தண குலத்தில் உதித்த அழகிய கொடி போன்ற பெண்.

3. விடம் - விஷம் ; இரும் தேள் - (கொடுமையில்) பெரிய தேள் ; நோக்க அரிய - பார்த்தற்கு அருமை-

யான; அரவு - பாம்பு; துர்ச்சனர் - இழிந்தவர்; அங்கம் - உடம்பு.

4. பொற்பு ஊரும் - அழகு பொருந்தும்; புண்ணியர் - சிறந்த பெரியோர்கள்; புகல் - கூறுவாயாக.

5. சிற்றுணர்வோர் - அற்ப அறிவினையுடையோர்; சிலுசிலுப்பர் - படபடத்துப் பேசுவர்; முற்றுணர்வோர் - நிறைந்த அறிவினையுடைய பெரியோர்; ஒண்கலம் - சிறந்த பாத்திரம்.

(3) மூதுரை

நன்றி யொருவர்க்குச் செய்தக்கால், 'அந்நன்றி
என்று தருங்கொல்?' எனவேண்டா ;—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே ;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே ;—அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று. 2

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்;—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. 3

நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் ;—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். 4

அட்டாலும் பால்சுவையில் குன்று(து) ; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே ; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 5

—ஔவையார்

குறிப்புரை

இந்நூலை இயற்றியவர் ஔவையார் என்ற பெண்பாற் புலவர் ஆவர். இந்நூலுக்கு வாக்குண்டாம் எனவும் மற்ருெரு பெயர் உண்டு.

1. தெங்கு - தென்னை ; தாள் - அடிமரம் ; தருதலால் - (இளநீராகக்) கொடுப்பதனல்.

2. நலம் - நன்மை ; இணங்கி - சேர்ந்து.

3. அற்ற - நீர் வற்றிய ; உற்றுழி - துன்பம் நேர்ந்தபோது ; தீர்வார் - விட்டு நீங்குபவர் ; ஆம்பல் - அல்லி ; ஒட்டி யுறுவார் - சேர்ந்து இருப்பவர்.

4. நற்ருமரைக்கயம் - நல்ல தாமரைக்குளம் ; காமுறுவர் - விரும்புவர் ; கற்பிலா - கற்றறியாத ; மூர்க்கர் - கொடியவர் ; முகப்பர் - விரும்புவர் ; முதுகாடு - சுடுகாடு ; உகக்கும் - விரும்பும்.

5. அட்டாலும் - காய்ச்சினலும் ; அளவளாய் - கலந்து பேசி ; நட்டாலும் - நட்புக் கொண்டாலும் ; நண்பல்லார் - நண்பர் அல்லாதவர் (தீயவர்) ; மேன் மக்கள் - உயர்ந்தவர்கள்.

(4) விவேக சிந்தாமணி

குக்கலைப் பிடித்து, நாவிக்
கூண்டினில் அடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சள் பூசி,
மிகுமணம் செய்தா லும்தான்,
அக்குலம் வேற தாமோ ?
அதனிடம் புனுகுண் டாமோ ?
குக்கிலே குக்கல் அல்லால்
குலந்தனில் வேற தாமோ ? 1

தாங்கொணு வறுமை வந்தால்
சபைதனில் செல்ல நாணும் ;
வேங்கைபோல் வீரம் குன்றும்;
விருந்தினர் காண நாணும் ;
பூங்கொடி மனையாட் கஞ்சும் ;
புல்லருக் கிணங்கச் செய்யும் ;
ஓங்கிய அறிவு குன்றும் ;
உலகெலாம் பழிக்குந் தானே. 2

வீணர் பூண்டாலும் தங்கம்
வெறும்பொய்யாம்; மேல்பூச் சென்பார்;
பூணுவார் தராப்பூண் டாலும்
பொருந்திய தங்கம் என்பார் ;
காணவே பனைக்கீ ழாப்பால்
குடிக்கினும் கள்ளே என்பார்
மாணுல கத்தோர் புல்லர்
வழங்குரை மெய்யென் பாரே. 3

கற்பகத் தருவைச் சார்ந்த
காகமும் அமுத முண்ணும் ;
விற்பன விவேக முள்ள
வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வர் ;
இப்புவி தன்னில் கிள்ளை
இலவுகாத் ததனைப் போல,
அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ(து)
அரிதரி(து) ஆகும் அம்மா ! 4

தந்தையுரை தட்டினவன், தாயுரை இகழ்ந்தோன்,
அந்தமுறு தேசிகர்தம் ஆணையை மறந்தோன்,
சந்தமுறு வேதநெறி தாண்டினவன் நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர். 5

—பல புலவர்கள்

குறிப்புரை

1. குக்கல் - நாய் ; நாவிக் கூண்டு - புனுகுபூனை-யின் கூண்டு.

2. தாங்கஒண்ணு - தாங்க முடியாத ; நாணும் - வெட்கம் அடையும் ; வேங்கை - புலி ; மனையாள் - மனைவி ; புல்லர் - இழிந்த குணங்களை யுடையவர்.

3. வீணர் - இழிந்த மக்கள் ; தரா - செம்பும், காரீயமும் கலந்த உலோகம் ; மாண் உலகத்தோர் - பெருமை பொருந்திய உலகத்தில் வாழும் மக்கள் ; புல்லர் - (எவருக்கும் எப்பொருளையும் கொடுக்காத) அற்பர்கள்.

4. கற்பகத்தரு - கற்பகமரம், இம்மரம், தன்னை அடைந்தார் விரும்பிய பொருளை எல்லாம் கொடுக்-கக்கூடிய தன்மை பொருந்தியது ; விற்பனம் - கல்வி ; விவேகம் - அறிவு ; கிள்ளை - கிளி ; இலவு - இலவம்பழம் ; அரிது அரிது - மிகவும் அருமையானது.

5. தட்டினவன் - மீறியவன் ; அந்தம் உறு - கல்வி யழகு பொருந்திய ; தேசிகர் - ஆசிரியர் ; ஆணை - கட்டளை ; சந்தம் - இசை ; தழல் - நெருப்பு ; சேர்வது - பொருந்துவது.

3. சதகத் திரட்டு

1. கயிலாசநாதர் சதகம்

கடலுலகி லுற்றபொரு ளுக்குளே நன்மைதரு
கல்விநிலை பெற்றபொருளாம் ;
கனலினல் உருகாது ; புனலினல் கரையாது ;
கள்ளரால் திருடொணது ;
திடமான ராசாதி ராசரா லும்அதைத்
தீண்டிச் சிதைக்கொணது ;
செயல்மிக்க மாதரால் சேதமாகா(து); ஒருவர்
செலவிடில் குறைவுருதங்(கு)
அடமிகு சகோதரர்க்(கு) இடமது கொடாததனை
அளவிடவு முடியாதுகாண் !
அப்பொருளினைப்பெரு திப்புவியில் அலைகின்ற
அற்பருறு பயனென்கொலோ !
கடகய முரித்துடலி னிற்றரித் திடுதேவ !
கற்பக விராசமேவுங்
கங்கைபுனை ஈசனே ! மங்கைமகிழ் நேசனே !
கயிலையங் கிரிவாசனே !

—சிதம்பரம் பிள்ளை

குறிப்புரை

சதகம் என்பது நூறு செய்யுட்களைக் கொண்டது. இந்நூல் சிதம்பரம் பிள்ளை என்ற புலவரால் சிவபெருமான் மீது பாடப்பெற்றது.

கடல் உலகில் - கடலால் சூழப்பட்ட உலகத்தில்; உற்ற - பொருந்திய; கனல் - நெருப்பு; புனல் - நீர்; கள்ளர் - திருடர்; திருட ஒண்ணாது - திருட முடியாது; திடமான - வலிமை பொருந்திய; சிதைக்க - அழிக்க; மாதர் - பெண்கள்; சேதம் - நாசம்; அடல்மிகு - வலிமை பொருந்திய; சகோதரர் - உடன் பிறந்தவர்; கடம் - மதம்; கயம் - யானை; கயிலையங்கிரி - கயிலை என்னும் அழகிய மலை.

2. அறப்பளீசுர சதகம்

கோபமே பாவங்க ளுக்கெலாம் தாய்தந்தை;
கோபமே குடிகெடுக்கும்;
கோபமே ஒன்றையும் கூடிவர ஒட்டாது;
கோபமே துயர்கொடுக்கும்;
கோபமே பொல்லாது; கோபமே சீர்கேடு;
கோபமே உறவறுக்கும்;
கோபமே பழிசெயும்; கோபமே பகையாளி;
கோபமே கருணைபோக்கும்;
கோபமே ஈனமாம்; கோபமே எவரையும்
கூசாமல் ஒருவராக்கும்;
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னில்தள்ளுமால்!
ஆபத்தெ லாந்தவிர்த்(து) எனையாட் கொண்டருளும்
அண்ணலே! அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீச் சுரதேவனே!

—அம்பலவாணக் கவிராயர்

குறிப்புரை

அம்பலவாணக் கவிராயர் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் இருந்த ஒரு புலவர். அவர் சதுரகிரி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் அறப்பளீசுரர் மீது இந்நூலைப் பாடினர்.

ஒட்டாது - பொருந்த வைக்காது; துயர் - துன்பம்; ஈனம் - இழிவு; மறலி - இயமன்; அண்ணலே - தலைவனே; அனுதினமும் - நாள்தோறும்; மதவேள் - அம்பலவாணக் கவிராயரை ஆதரித்த வள்ளல்.

4. கதைப் பகுதி

பஞ்சதந்திரம்

சிங்கத்தை முயல் கொன்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னில்,
செறியுமோர் காட்டிலே யோர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடி,ஊன் மிகவும் தின்று,
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி, 1

"ஆணிளஞ் சிங்க மே!உன்
அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா;
விதத்தினில் தினமொன் ருக
ஊண்உனக் களிப்போம்," என்ன
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்ருய்
அருந்தியங் கிருக்கும் நாளில், 2

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்,
இனியது விடாது நம்மை
எனினுமோர் எடுப்பெ டுத்து,
வினையையிப் போது செய்து,
வென்றுநாம் உய்ந்தோ மாகில்,
நனிவிலங் கனைத்தும் உய்யும்,
நமக்குநற் புகழ்உண் டன்றே! 3

கருதியச் சிங்கத் தின்முன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி
மன்னன், "நம்பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை; பிந்தி
வருவதென்? உரைநீ," என்று
மனத்தினில் சினந்து கூற, 4

"ஐய! நின் பசிவே ளைக்கே
அடியனேன் வந்தேன்; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன்;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யவுன் பக்கல் வந்தேன்,
சுவாமி!"என்(று) இறைஞ்சி நிற்க, 5

"சிங்கம்நாம் அல்லால் வேறோர்
சிங்கம்நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டுவா," என்று
அழைத்தலும், அழைத்துப் போயோர்

பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை எட்டிப் பார்த்து
அதனிழல் உருவம் தோன்ற, 6

தன்னுரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த முந்தித்
துளங்கியே உயிரி ழந்த(து)
என்னலால் உபாயத் தாலே
யாவையும் வெல்ல லாம்நாம். 7

* * * *

—வீரமார்த்தாண்ட தேவர்

குறிப்புரை

1. குறுமுயல் - சிறிய முயல் ; செறியும் - அடர்ந்த ; விலங்கு - மிருகம் ; ஊன் - இறைச்சி.

2. அடவி - காடு ; ஊண் - உணவு ; ஆணை - கட்டளை ; அருந்தி - உண்டு.

3. எடுப்பு - உபாயம் ; வினை - செயல் ; உய்ந்-தோம் - தப்பிப்பிழைத்தோம் ; நனி - மிகுதி.

4. கடும்பசி - மிகுந்த பசி ; வேழம் - யானை ; சினந்து - கோபித்து.

5. வெய்ய - கொடிய ; வெருவி - அஞ்சி ; பையவே - மெதுவாக ; பருமுழை - பெரிய குகை; துய்ய - பரிசுத்த-மான ; இறைஞ்சி - வணங்கி.

6. பங்கம் - சேறு ; பாழ்ந்துரவு - பாழ் அடைந்த கிணறு.

7. சத்துரு - பகைவன் ; துளங்கி - உடல் நடுக்கம் அடைந்து.

5. பல்சுவைப் பகுதி

(1) தமிழ்த்தாய்

பொருப்பிலே பிறந்து, தென்னன்
புகழிலே கிடந்து, சங்கத்(து)
இருப்பிலே யிருந்து, வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை,
நெருப்பிலே நின்று, கற்றோர்
நினைவிலே நடந்தோர் ஏன ••
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்.

—வரந்தருவார்

குறிப்புரை

பொருப்பு - (பொதிய) மலை; தென்னன் - பாண்டிய மன்னன்; ஏட்டிலே - சமணருடன் வாதுசெய்தபோது, திருஞானசம்பந்தர் பாடல் எழுதி வைகையில் இட்ட ஏட்டில்; ஏனம் - பன்றி; மருப்பு - கொம்பு; பாவை - பூமிதேவி என்னும் பெண்; மருங்கு - இடுப்பு.

(2) மூர்க்கருக்கு அறிவு உரைத்தல்

பொல்லாத மூர்க்கருக்(கு) எத்தனை தான்
புத்தி போதிக்கினும்
நல்லாருக்(கு) உண்டான குணம் வருமோ?
நடுச்சா மத்திலே
சல்லாப் புடைவை குளிர்தாங்குமோ?
பெருஞ்சந் தையினில்
செல்லாப் பணம்செல்லுமோ? தில்லை
வாழும் சிதம்பரனே!

—படிக்காசுப் புலவர்

குறிப்புரை

படிக்காசுப் புலவர் தமிழ் நாட்டில் வாழ்ந்துவந்த சிறந்த புலவர் ஆவர். இவர் சீதக்காதி என்ற வள்ளலால் ஆதரிக்கப்பட்டார். இவர் பல செய்யுட்களை இயற்றியுள்ளார்.

மூர்க்கர் - கொடியவர், நடுச்சாமம் - நள்ளிரவு; சல்லாப்புடைவை - மிகவும் மென்மையான புடைவை; தில்லை - சிதம்பரம்.

(3) ஆலமரம்

தூலம்போல் வளர்கி ளைக்கு
விழுதுகள் தூண்கள் ; தூண்கள்
ஆலினைச் சுற்றி நிற்கும்
அருந்திறல் மறவர் ; வேரோ
வாலினைத் தரையில் வீழ்த்தி
மண்டிய பாம்பின் கூட்டம் ;
நீலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல்.

—பாரதி தாசன்

குறிப்புரை

தூலம் - வீட்டுக் கூரையைத் தாங்க அமைக்கும் மரத்துண்டு; திறல் - வலிமை; மறவர் - வீரர்; மண்டிய - நெருங்கிய; நீலவான் - நீலநிறம் பொருந்திய ஆகாயம்; நெடிய - பெரிய.

தமிழ்நாடு ... -600 008.
145942
TB
0-,6(5)
N56

RTR 7450 216 | 11
18-2-97

SAMBA TAMIL VACHAKAM

BOOK V

BY
K. VENKATACHALAM, B.A., L.T.
EDITED BY
T. S. UMAPATHY, M.A., L.T.

SAMBA PUBLISHING CO.,
MADRAS-10.

Copyright] [Price Re. 0-12-0